



கவிதைகள்

# மணிரூரான்



(கவிதைத்தொகுதி)

# மண்டூரான்

வெளியீடு:

கலை இலக்கிய அவை

மண்டூர்

நூல் - துணை (கவிதைகள்)
ஆசிரியர் - மண்டூரான் (ம.இராஜதுரை)
முகவரி - "நிலாவகம்", 71, தண்ணீர் கிணற்றடிவீதி,
பாலமீன்மடு, மட்டக்களப்பு.
பதிப்புரிமை - இரா. கலைவேந்தன்
முதற்பதிப்பு - மே - 2016
வெளியீடு - மண்டூர் கலை இலக்கிய அவை
அட்டை வடிவமைப்பு - கல்கி இமேஜ் டிஜிட்டல்
கணனி தட்டச்சு - திருமதி. ஸஜிதா நிமலராஜ்
வடிவமைப்பு - த. சங்கர்
அச்சுப்பதிப்பு - வணசிங்கா பிரிண்டர்ஸ்
பக்கங்கள் - 156

ISBN 978-955-43252-0-3

Book - Thunai (Poems)
Author - Manduraan (M. Rajadurai)
© Copyright - R. Kalaiventhan
Address - 'Nilavakam' 71, Pumping Station Road,
Palameenmadu, Batticaloa.
Publisher - Kalai Ilakkiya Avai, Mandur.
First edition - May 2016
Cover Design - Kalki Image Digital
Computer Typing - Mrs. Sajeetha Nimalaraj
Book Layout - T.Shankar
Printing - Wanasinghe Printers
Pages - 156

விலை } 300/=
Price }


## இறைவணக்கம்

அவன் இவன் நான் என்ற ஏகவசனம் துறந்து
அவன் அருளாலே அவன் தாழ் பணிந்து -அவனையே
முன்னிறுத்தி எழுதி அச்சிட்டு - உங்கள்
முன் வைக்கின்றேன் துணிந்து

## இந்நூல்....



ஓயாது உழைத்து
உணவு கொடுத்து
உயிர் காக்கும்
உத்தம
உழைப்பாளிகளாம்
உழவர்களுக்கும்
மீனவர்களுக்கும்
சமர்ப்பணம்



# வெளியீட்டுரை

மண்டூர் கலை இலக்கிய அவை தனது பணிகளில் ஓர் அங்கமாக நூல் வெளியீடுகளையும் மேற்கொண்டு வந்திருக்கிறது.

- 'பொன் சிவானந்தன் கவிதைகள்' *(1999)*
- மண்டூர் தேசிகனின் 'அக்கினிநாட்கள்' *(2000)*
- எஸ்.புஷ்பானந்தனின் 'இரண்டு கார்த்திகைப் பறவைகள்(2007)

என்பன அவையினால் வெளியிடப்பட்ட கவிதைத்தொகுதிகள். இப்போது நான்காவது கவிதைத் தொகுதியாக மண்டூரான் இராசதுரை அவர்களின் 'துணை' வெளிவருகிறது. நீண்ட இடைவெளியில் இன்னொருகவிதை நூல் வெளிவருவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்..

1970களிலிருந்து கவிதைகள் எழுதிவரும் கவிஞர் மண்டூரான் இராசதுரை அவர்களின் முதல் கவிதைத் தொகுதி இது. மண்டூரில் பல்வேறு அமைப்புகளினூடு சமூக, கலை, இலக்கியப் பணிகளை நீண்டகாலமாக ஆற்றியவர் இவர். குறிப்பாக எண்பதுகளில் வெளிமாணவர் கலைவட்டத்தினூடு பல புரட்சிகரமான பணிகளை செய்த இளைஞர் குழாமில் முதன்மையானவர். மண்டூரில் கையெழுத்துப் பத்திரிகைகள் வெளியிட்டு இளையோரை ஊக்குவித்த பெருமையும் இந்த இளைஞர் குழாமிற்கு உண்டு.

எப்போதும் கலை இலக்கிய அவையுடன் இணைந்து செயற்படும் கவிஞர் மண்டூரான் இராசதுரை அவர்கள் இந்த நூல் வெளியிடுவதில் எமக்கு மிகுந்த ஒத்துழைப்பை நல்கினார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு அவரது பணிகள் மேலும் தொடர எமது அன்பான வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

**கலை இலக்கிய அவை,**
மண்டூர்.
*2016.04.28*

# அறிமுக உரை

மட்டக்களப்பு மண்டூர் எனும் அழகியகிராமத்தில் மயில்வாகனம்-சின்னத்தங்கம் தம்பதியர்க்கு இளையமகனாக 1952-11-26ம் திகதி பிறந்து, பாலமீன்மடு கிராமத்தில் திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாகி, மனைவி சகாயமலருடன் இனிதே வாழ்ந்துவரும் இவர் தனது ஆரம்பக்கல்வியை மண்டூரில் பெற்றுக்கொண்டார். அதன் பின் பட்டிருப்பிலும், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் இணைந்து தனது அறிவாற்றலை வளர்த்துக் கொண்டார்.

இவர் பலநோக்கு கூட்டுறவு சங்கம், இலங்கை போக்குவரத்துச்சபை, கச்சேரி, பொலிஸ், வாகன போக்குவரத்து, கமநலசேவை ஆகிய திணைக் களங்களிலும் எழுதுனராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.
இவரது எழுத்தார்வம் இவர் பிறந்த மண்டூரிலேயே ஆரம்பமானது.

1980களில் மண்டூரில், வெளிமாணவர் கலைவட்டம், எனும் அமைப்பை உருவாக்கி, புதுவெள்ளம். எனும் கையெழுத்து சஞ்சிகையை வெளியிட்டு, அதன் ஆசிரியராகவும் இருந்த பெருமைக்குரியவர். மண்டூர்க் கீரை அடிமண்ணும் கவிபாடும், என்று கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பாடியது போல இளமைப் பருவத்திலிருந்தே இராஜதுரைக்கு கவியாற்றல் கைவரப் பெற்றிருந்தது.

பிறந்த இடமான மண்டூரிலும் சரி, புகுந்த இடமான பாலமீன் மடுவிலும் சரி நிறையவே கவிதைகளை எழுதினார். ஆடுதல், பாடுதல் ஆய கலைகளில் என்றும் ஈடுபட்டிருப்பவர். பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர் என்ற பாரதியின் கருத்திற்கேற்ப இராஜதுரையின் குணாம்சங்களும் அமைந்திருந்தன. அதைப்போலவே கவிஞர்களுக்கே உரியஅன்பு, இரக்கம், பாசம் போன்றவையும் இவரிடம் அதிகமாகவே காணப்பட்டன. எழுத்தாளர், கவிஞர்கள், கலைஞர்கள் என்றால் உயிரையே விடுவார். அந்தளவிற்கு கலைமேலும் கலைஞர்கள் மேலும் பற்றும், பாசமும் வைத்து உபசரிக்கும் நல்ல பண்பு இவரிடம் அதிகமாகவே உள்ளன.

பாலமீன்மடுவில் மீனவர் சங்கச் செயலாளராக, தலைவராக, கிராமமுன்னேற்ற சங்கத்தலைவராக, திராய்மடு வீரபத்தினியம்மன் ஆலய

ஆலோசகராகவும் இருந்து செயல்பட்ட இவர் தற்சமயம் மட்/மாவட்ட மீனவர் சம்மேளனத்தின் பிரதித்தலைவராகவும், பாலமீன்மடு மீனவர் சங்க ஆலோசகராகவும் இருக்கும் இவர் ஒருசமாதான நீதவானாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

எழுதும் எழுத்துக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கவேண்டுமென்றால் அது பரவலாக மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். அந்தவகையில் இராஜதுரை அவர்கள் அவர் சார்ந்த கவிதைத் துறையில் புலமைவாய்க்கப் பெற்றவராக இருந்தபோதிலும் பத்திரிகை, சஞ்கிகை களுக்கு எழுதி அனுப்புவதில் அதிக அக்கறைகாட்டுவதில்லை. அது மாத்திர மல்லாது எழுதுவதைத் தொகுத்து ஒரு நூலையாவது வெளியிட்டு வைக்கவில்லை.

இந்தக் குறைபாட்டை யாரோ இவருக்குசுட்டிக் காட்டியிருக்க வேண்டும். இப்போது இராஜதுரை தன்னைச் சுதாகரித்துக் கொண்டு துணிச்சலுடன் 'துணை'எனும் தலைப்பில் கவிதை நூலொன்றை வெளியிட்டு,'கவிஞர் மண்டூரான்' ஆகியிருக்கிறார்.

வானொலி, மேடைநாடகங்களை இயக்கி நடித்துள்ள இவர் வானொலி, தொலைக்காட்சியிலும் கவியரங்குகளிலும் பங்குபற்றி அவர் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று எழுதும் 'மண்டூரான்' கவியரங்குகளில் கவிதை படிக்கும் போது 'கணீர்' என்ற குரலில் மிகநேர்த்தியாக வாசிப்பதில் வல்லவர்.

கவிஞர் இராஜதுரையின் கவிதைப் புலமையோடு இவரது துணைவியார், பிள்ளைகள் வாழ்வும் வளம் பெறவேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**கவிஞர் செ.குணரெத்தினம்**
அமிர்தகழி
மட்டக்களப்பு
*21-03-2016*



உ

அன்பே சிவம் அதுவே நலம்
அன்னை தந்தை ஆசான் அருட்தெய்வம்
என்நாளும் நெஞ்சகத்தே எண்ணு

**ஏரூராள் என்னை இனிதாய் படைத்தனள் சீராய் தன்பணி செய்திடுமாறே.**
**போரூராள் என்னைப் புகழுறவளர்தனள் நேராய் நிறைபணி ஆற்றிடுமாறே.**

அகிலஇலங்கை இந்துதர்மோதய நிறுவனர், விஸ்வபிரம்மாதீன பீடாதிபதி, செந்தமிழ்அந்தணர் திருச்சபை முதல்வர், சிவசமயவாழ்வகம், ஆன்மீகம்அழைக்கின்றது சேவாதளப் பணிப்பாளர், சித்தாந்தவித்தகர், சைவசித்தாந்தசாகரம், சைவசமயகலாஜோதி, செஞ்சொற்கொண்டல், செந்தமிழ்வாருதி, கிரியாகலாநிதி, சகலாகமவாருதி, பல்கலைப்புலவர், ஆச்சாரியதீபம், அருட்கவியரசு
பண்டிட். ஆச்சாரிய, விஸ்வபிரம்மம்

**வை. இ. எஸ். காந்தன் குருக்கள்**
(கண்மணிதாசன் – ஏரூரான்)

# வாழ்த்துப்பா

மண்டூர் கந்தனடி
மண்ணும் தமிழாலும்
கண்டுரும் இனியதமிழ்
கவினார்ந்த இப்பதியில்
மண்டூரான் புனைப்பெயரில்
மனமினிக்க கவிபாடும்
மண்டூரான் இராஜதுரை
மனதாழ்ந்த எனதன்பன்

புலவர்மணி பெரியதம்பி
புகழ்மிகுந்த கந்தையா
புலவர் சோமசுந்தரம்
பிள்ளைக்கவி விஸ்வலிங்கம்
தலமெய்புகழ் பாடும்
தகை நிறைந்தவீரசிங்கம்
நலமெய் எழுத்தெல்லாம்
நயம் காட்டும் வல்லோர்கள்

அழகு தமிழாலே
அணிக்கவிதை பல எழுதும்
குழையும் மொழிப் பாவலர்கள்
கொஞ்சி நடமாடும் இடம்
அழகு திருவேல் முருகன்
அடி மலரை முத்தமிட்டு
வழிகண்டார் வழியினிலே
வாழ்ந்து வரும் மண்டூரான்

சிந்தனையில் தெளிவுடையான்
சிந்தையிலே திடமுடையான்
வந்தனை செய்ய பண்பினிலே
வாய் மலரும் அன்புடையான்
முந்தை வழிப் புலமையெலாம்
முகிழ்கின்ற கவிச்சுரங்கம்
எந்தன் அன்பன் இராஜதுரை
இதயமுற கவி படைத்தான்

பழமையிலும் புதுமையிலும்
பக்குவமாய் தமிழ் குழைத்தான்
வழமையிலே மொழியாற்றல்
வாய் கமிழ வந்துவிடும்
உளமை அன்பினாலே
உறவுகொண்ட அன்பன் இவன்
இளமை முறுக்கோடு என்றும்
இளமுருகன் உனைக் காப்பான்

தில்லை மண்டூர் மடிதவிழ்ந்தான்
தேனாட்டில் குடி புகுந்தான்
முல்லையுடன் நெய்தல்
முறு வலித்து முத்தமிடும்
கல்லடிப் பாலமங்கை
கண் சிமிட்டும் வடபுறத்தே
நல்லாற்றில் மீன் துள்ளும்
நயமிகுந்த பாலமீன்மடு

மீன் துள்ளி இசைபாட
மீன் மகளாள் யாழ்மீட்ட
தேன் கலந்து தயிரினிக்க
தித்திக்கும் மண்ணினிலே
ஊன் கலந்து உயிர் கலந்து
உறவாடி தமிழ்பாடும்
நான் கண்ட மண்டூரான்
நாவினிக்க வாழியவே

அன்னை காளி தன்னருளும்
அழகு வேலனின் திருவருளும்
முன்னை முதல்வன் சித்தியெனும்
முதிர்ந்த அமிர்தகழியானும்
உந்தன் அன்னை தந்தையரும்
உடலுள் உயிராய் துணையிருந்து
கண்ணின் மனையாள் சகாயமலர்
கனிந்த மக்கள் நலம் வாழ்க

மண்டூரான் இராஜதுரை மனமினிக்கும் கவிப்படையன்
கண்டினிது வாழ்ககனிந்து

இவ்வண்ணம்
**வை.இ.எஸ்.காந்தன் குருக்கள்**
ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயம்,
ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயங்களின் பிரதமகுரு
ஸ்ரீ காளிபுரம், பெரியபோரதீவு

# அணிந்துரை

கிழக்கிலங்கைக் கவிதை வளர்ச்சியிலே மண்டூருக்கு முக்கிய இடமுள்ளது. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தொடக்கம் புஷ்பானந்தன் வரை முக்கியமான கவிஞர்கள் மண்டூரிலே வெளிப்பட்டுள்ளனர். இவர்கள் பலரிடமிருந்தும் இத்தொகுப்பிற்குரிய மண்டூர்க் கவிஞர் எவ்விதங்களில் வித்தியாசப்பட்டுள்ளார் என்று இவ்வேளை எடுத்துரைப்பது பொருத்தமான தென்று கருதுகின்றேன்.

இத்தொகுப்பிலே மரபுக்கவிதை, நவீனகவிதை, கவியரங்கக் கவிதை, புதுக்கவிதை எனநான்கு வகைக் கவிதைகளுள்ளன. இவற்றுள் புதுக்கவிதை அதிகமானவை. இவையே இவரது முக்கியமான வெளிப்பாட்டு ஊடகமாகவுமுள்ளன. எனவே, இவற்றை அடிப்படையாகக் கொண்டு இவரது கவிதைகளின் தனித்துவம் பற்றி அவதானிப்பது பொருத்தமானது.

தான் கவிதை எழுத எண்ணியமை பற்றி இக்கவிஞர் ஓரிடத்திலே பின்வருமாறு எழுதுகின்றார்:

**எழுதவில்லை**

நினைத்தேன் கவிதை எழுத
நினைத்த கருவெல்லாம்
நிறையவே எழுதிவிட்டனர்
முயன்று பார்க்கிறேன்
முடியவில்லை ஒருகவிதை எழுத
ஏனென்றால்
எல்லா சொற்களையும்
எப்படி எப்படியோ
எழுதி விட்டார்கள்
எதை நான் எழுத,
என்னவென்று எழுத,
எல்லோரும் எழுதியதை
ஏன் நான் எழுத?
எழுதவில்லை அதனால் கவிதை

மேலுள்ள இறுதி அடியை கவனத்திற் கொள்ளாமல் தொடர்ந்து செல்கின்ற போது, இவரது கவிதைகளுள் கணிசமானவை, நடைமுறை விடயங்களை தர்க்க முறையிலே அணுகுவது புலப்படுகின்றது

உ-ம்:

**எனக்கே புரியவில்லை**

தும்புத்தடி வாருகல்
துடைத்து சுத்தம் செய்கிறது
வீட்டை முற்றத்தை
வீதியில் விற்றுப் போவோனை
வாருகல் தும்புத்தடி என கூப்பிட்டால்
வாய் நிறைய சிரித்து
வருவான் ஓடிகாலடிக்கு
வீதியில் போவோரையும்
விளையாடுவோரையும்
வாருகல் தும்புத்தடி என கூப்பிட்டால்
வருவார்கள் தடிகொண்டெம்மை அடிக்க
வாருகல் தும்புத்தடி
சுத்தம் தந்து
சுகம் தருவதுதானே
ஏனிந்த வித்தியாசம்
எனக்கே புரியவில்லை.

உ-ம்: 2

**வட்டி**

வட்டிக்கு கொடுப்பது பாவம்
வட்டி குடும்பத்தையே
வாட்டி வதைத்துவிடும்
என்றான் வியாபாரி
கலப்படமில்லாதது
கருணைமிகவுள்ளது
ஏமாற்று இல்லாதது
நிறைகுறையில்லாதது
ஆள்பார்த்து செய்யாதது
பொய்யில்லாதது

ஓட்டாட்டமில்லாதது
சினந்துசெய்யாதது
சீரானது இத்தனையும்
இதற்குண்டு
வியாபாரமோ
இதன் மறுபக்கம்
வங்கிகளும்
வங்கித் தொழிலாளர்களும்
வளமோடுதானே
வாழ்கின்றார்கள்
என்றான் வட்டிக்காறன்.

ஏனைய கவிஞர்கள் எழுதும் சிலவிடயங்கள் வித்தியாசமான முறையில் அணுகப்பட்டுள்ளன.

உ-ம்: **வெண்சுருட்டு**

"தீராமோகத்துடன்
தீ மூட்டிஎன்னை
உறுஞ்சி உறுஞ்சி இழுத்து
உயிர்போக்கி
சற்றுநேரத்தில்
சாம்பலாக்கும் மனிதா
புற்றுநோயுடன்
புதுப் புது நோயும் தந்து
அணுஅணுவாய்
அழித்துடுவேன் மறவாதே
என்றது வெண்சுருட்டு"

**தலைக்கவசம்**

"தட்டு தடுமாறியேனும்
தலைக் கவசத்தை
மறந்துவிட்டு செல்லாதீர்
மறுபடியும் திரும்பிவந்து
எடுக்கமுடியாமல்
போய்விடும்"

சிலவற்றிற்கு புதியவிளக்கமளிக்க முற்படுகின்றார், கவிஞர்:

உ-ம்:

**மது ஒழிப்பு தினம்**

“மதுவை மறைத்தும்
ஒழிக்கலாம்
மதுவை அதிகம்
குடித்தும் ஒழிக்கலாம்
தரையில் ஊற்றியும்
ஒழிக்கலாம்
மதுவை உற்பத்தி
செய்யாமலும் ஒழிக்கலாம்
இதைவிடுத்து இன்று
மதுக்கடைகளை மூடுதலே
மதுஒழிப்புதினம் என்கின்றனர்
மது ஒழிப்புதினமல்ல இது
மது மறைத்தல் தினமென்று
மாற்றுதலே பொருந்தும்”

மேற்கூறியவற்றை விட, குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு அவதானிப்பு, கடவுள் பற்றிய கவிதைகள் பல இவரால் எழுதப்பட்டிருப்பது:

உ-ம்: 1

**படைப்பு**

“கடவுள்
ஒரேமாதிரி
மனிதனை படைத்தான்
மனிதன்
பலமாதிரி
கடவுளை படைத்தான்”

உ-ம்: 2

**சேவை**

“கடவுள்
மனிதனை படைத்தான்
மனிதன்

கடவுளை படைத்தான்
தன் உணவையும் படைத்தான்
கடவுளுக்கு.
கடவுள்
ஏன் படைத்தான் மனிதனை
என்பதை புரிந்தும் புரியாத
மனிதன்
கடவுளைப் படைத்தான்
மக்கள் சேவையே
மகேசன் சேவை என்பதை
விளங்கியும் விளங்காத
மனிதன்''

சமகால சமூக, அரசியல் பிரச்சினைகள் சிலவே இவரால் பாடப் பட்டுள்ளன. ஏறத்தாழ கடந்த முப்பதாண்டுக் காலப்போர் பற்றி ஒரு சிலகவிதைகள் இயற்றப்பட்டுள்ளன.

சீதனப் பிரச்சினை, ஊழல் பிரச்சினை என்பன பற்றியும் ஓரிரு கவிதைகளுள்ளன. மண்டூர் பற்றியும் அவ்வாறே. சுருங்கக் கூறின் பக்திப் பாடல்கள் தவிர ஏனைய விதங்களில் முற்குறிப்பிட்ட கவிஞர்களைப் பின்பற்றினாரல்லர் இக்கவிஞர்.

புதுக்கவிதை இயற்றிய ஏனையோரது கவிதைகள் உணர்ச்சிபூர்வமான முறையில் மண்சார்ந்து வெளிப்பட, இவரதுகவிதைகள் பலவும் சிந்தனா பூர்வமான முறையிலும், புலமைத்தளத்திலும் அமைந்திருப்பது மேலே கூறப்பட்டவற்றை நோக்கும் போது புலப்படுகின்றது.

எதுவாயிருப்பினும் தமது கவிதைப் பாதையை மேன்மேலும் வளப்படுத்துவதோடு சற்றே திசை திருப்பவும் முற்படுவாராயின் மண்டூர்ப் பிரதேசக் கவிஞர்களுள் இவருக்குரிய இடம் இன்னும் உறுதிப்படும். அதற்கான ஆற்றல் இவரிடம் நிரம்பவேயுள்ளது!

வாழ்த்துக்களுடன்,

**கலாநிதி செ.யோகராசா**
(ஓய்வுநிலைப் போராசிரியர்)

# முன்னுரை

நான் மண்டூரில் சிறுவனாக இருக்கும் போது எனது அண்ணனான அரும்பொருள் ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்ற தமிழ் நாட்டுசஞ்சிகைகள் வாங்கிப்படிப்பார். அப்போது அந்த சஞ்சிகைகளிலுள்ள அழகானபடங்களை பார்க்கதொடங்கி அதிலுள்ள சிறுசிறுகவிதை கதைகளையும் வாசிக்கத் தொடங்கினேன். அந்த கால கட்டங்களில் சொல்லின் செல்வன் இராஜதுரை, உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன், தீப்பொறி அந்தனிசில் போன்றோரின் தேர்தல் காலபேச்சுக்களையும் கேட்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது. அதே கால கட்டத்தில் அண்ணன் அரும் பொருள், நவரெத்தினம் போன்றோர் மண்டூர் கலைவாணி சனசமூக நிலையத்தினால் "பூங்கோதை" எனும் கையெழுத்து சஞ்சிகை வெளியீட்டுப் பணிகள் எங்கள் வீட்டிலும் நடைபெற்றது. அப்போதுதான் எனக்கும் மேடையில் பேசவேண்டும்" எழுதவேண்டும் என்ற ஆசை பிறந்தது. அதுதான் எனது கவிதையின் ஆரம்பம்.

1970 காலப்பகுதியில் மாரியம்மன், கண்ணகையம்மன் கோவில் உற்சவ காலங்களில் ஆலயவருமானத்திற்காக பாழை, பூமாலை விற்பது வழக்கதிலிருந்தது. அந்த காலத்தில் அதை முன்னின்று செயல்படுத்துகின்ற, துறைநீலாவணையில் பிறந்து மண்டூரில் திருமணம் செய்து கல்லடியில் வசிக்கின்ற ஓய்வுநிலை இ.போ.ச.காப்பாளர் உத்தமன் (அருளம்பலம்) அவர்களோடு சேர்ந்து ஒலிவாங்கியில் பேசவும் ஆரம்பித்தேன்.

1977ம் ஆண்டு என நினைக்கின்றேன், மட்டக்களப்பு மாநகர மேயராயிருந்த மண்டூர் செழியன் பேரின்பநாயகம் அவர்களின் வழிகாட்டலில் மண்டூர் கவிஞர் மு.சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் தலைமையில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நடாத்திய கவியரங்கில் பங்குபற்றியது தான் எனதுமுதல் கவியரங்கம். அந்த கவிதையோடு ஆரம்பகால கவிதைகளெல்லாம் 1978ம் ஆண்டு வீசிய சூறாவளியில் அழிந்து போயின. அதன்பின் "புலமையும் வறுமையும் சேர்ந்தே இருக்கும் என படித்தேன்

அறிந்தேன். வறுமையில் வாட மனமில்லாததால் புலமையை வளர்க்க விரும்பவில்லை. இருந்தாலும் இரப்பது இழிவு இரப்பவர்க்கு இல்லையென்பது அதனிலும் இழிவு" என்பதற்கிணங்க கவிதைத்துறையில் யாராவது இரந்தால் அவர்கள் தேவையை நிறைவு செய்துள்ளேன். அதே போன்றுதான் கவியரங்குகளிலும் பங்குபற்றியுள்ளேன்.

மட்டக்களப்பு பாலமீன்மடுவில் திருமணம் செய்தபின் கவிஞர் செ.குணரெத்தினம், கலைக்கோட்டன் அ.இருதயநாதன் அவர்களுடைய தொடர்பு ஏற்பட்டபின் அவர்களின் நெருக்குதலாலும் எனது மகன் கலைவேந்தன் மகள் இளநிலாவின் அன்புத் தொல்லையாலும் இந்நூல் உருவாக்கம் நடைபெற்றது, வெளிவருகிறது.

கவிதைகளை எழுத உதவிய செல்வி விக்னேஸ்வரன் வினுதாவுக்கும், முழுமையாக கணனி மயப்படுத்தி தந்த திருமதி ஸஜிதா நிமலராஜ் அவர்களுக்கும் வாழ்த்துப்பா வழங்கிய பெரியபோரதீவுஸ்ரீ காளிபுரம், ஸ்ரீ முத்துவிநாயகர், ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயங்களின் பிரதமகுருவான வை.இ.எஸ் காந்தன் குருக்கள் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா அவர்களுக்கும், என்னைப் பற்றி குறிப்புரை வழங்கிய கவிஞர் செ.குணரெத்தினத்துக்கும், தொகுத்து வழங்கிய இரா.கலைவேந்தனுக்கும், எனது ஆரம்பகால முதல் இற்றைவரை என்னோடு நேரடியாகவும், தொடர்பாடல் மூலமாகவும் எந்த விடயமானாலும் தர்க்கித்து விடைகாண உதவுகின்ற நண்பர்களான யாழ்ப்பாணத்தில் பிறந்து மட்டக்களப்பில் வாழ்ந்து தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற இலக்கிய நகைச்சுவை தென்றல் ஓய்வு நிலை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.கே.செல்வராசா, துறைநீலாவணையில் பிறந்து மண்டூரில் வாழ்ந்து தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கின்ற ஓய்வுநிலை அரசாங்க அதிபர் திரு. வே.சண்முகம், மட்டக்களப்பு தொழிலதிபர் கலாநிதி. N. ஜெகதீசன், மண்டூரில் பிறந்து துறைநீலாவணையில் வசிக்கின்ற ஓய்வு நிலைநிர்வாக உத்தியோகத்தர் திரு.க.புலேந்திரன், மண்டூரில் பிறந்து மட்டக்களப்பில் வாழ்கின்ற ஓய்வு நிலை கமநலஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.மு.சங்கரலிங்கம், மண்டூரில் பிறந்துகோட்டைக்கல்லாற்றில் வாழ்கின்ற ஓய்வுநிலை பிரதேசசெயலாளர் திரு.வ.அழகரெத்தினம், மண்டூரில் பிறந்து

கல்லடியில் வசிக்கும் ஓய்வுநிலை பிரதேச செயலாளர் திரு.சோ.வரதராஜன், அரசடித்தீவில் பிறந்து நொச்சிமுனையில் வசிக்கின்ற கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.S.பத்மநாதன், மண்டூர் கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்கதலைவர் மா.விநாயகமூர்த்தி, மண்டூரில் பிறந்து தம்பிலுவிலில் வாழ்ந்து காலஞ்சென்ற உதவிக் கல்விப்பணிப்பாளர் கு.பவளேந்திரன், மண்டூர் "புதுவெள்ளம்"; கையெழுத்து சஞ்சிகையின் துணை ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற செ.விவேகானந்தம் ஆகியோருக்கும், அழகிய முறையில் அச்சிட்டு உதவிய வணசிங்கா அச்சகத்திற்கும் அட்டையை அழகிய முறையில் வடிவமைப்பு செய்துதுதவிய கல்கி இமேஜ் டிஜிட்டல் நிறுவனத்தினருக்கும் எனது நன்றியை பதிவு செய்வதில் பெருமிதமடைகின்றேன்.

**மண்டூரான்**
ம.இராஜதுரை J.P
"நிலாவகம்",
71, தண்ணீர் கிணற்றடிவீதி,
பாலமீன்மடு, மட்டக்களப்பு.


துணை
கவிதைகள்
மண்டூரான்



# வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர்

ஏரிவாவிலங்க எழில்தெங்கு சூழ
வங்கக் கடலோரம் வளமாக
பாரிலங்க அருள் சொரியும்
பார்பதி பரமன் தலை மகனாம்
கூரிலங்கு அறிவு கொண்ட
கொம்பொன்றற்றவனாய்
சீரிலங்க சித்தி நல்கும்
வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர்

கூசா வயிறும் கூர் கொம்பும்
கூடவே மூசுகனையும் இருத்தி
பேசாத பிள்ளைகளையும் பேச வைக்கும்
பெருமகனாம் வேழ முகத்தோன்
ஆசானுக்கு ஆசானாய் அனைத்துக்கும்
அதிபதியாய் அறிவுக் களஞ்சியமாய்
பேசாது பேசி வியப்பிலாழ்த்தும்
வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர்

ஆழாழியில் அல்லலுற்று
அலக்கழியாது அனுதினமும்
தாழாது கரை வந்து சேர
மீனவர்க்கு அருள் பாலித்து
ஆளாக்கும் ஆனைமுகத்தோன்
அண்டியோர்க்கெல்லாம்
வாழாதிருந்தாலும் வாழ
வழி காட்டியருள் புரிந்திடுவார்

மீனினம் தேனிசை பாட
மீனவர்கள் அதனோடு விளையாட
மானினம் போல் மழலைகள்
மருண்டு துள்ளி விளையாட
தானமுடை பேரழகு நிறை
பாலமீன்மடு பதி உறை
ஞானமுடை சீரழகு நிறை
வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர்.

# ஓம் மண்டூர் கந்தன்

வாவிக்கரையோரம் வளர்தில்லை மரத்தில் வந்தமர
தாவிக்குதித்து வந்த வேடுவர்கள் கண்டுமகிழ்ந்து
பூவினும் மேலாய் பூசித்து வந்த வரலாற்று கதை
நாவினிக்க கூறி நாம் மகிழும் மண்டூர் கந்தன்

பொல்லாத வெள்ளையர்கள் போர்க்கோலம் பூண்டு
வல்லானவன் வாழ்விடத்தை தகர்க்க வந்தவேளை
நில்லாதோட குழவிக்கோலம் பூண்டபுகழ்
சொல்லால் சொல்ல முடியா மண்டூர் கந்தன்

வரம் வேண்டி வந்து உள்வீதியிலே படுத்தோன்
வரம் கிடைக்க தாமதம் கண்டு சினம் கொண்டு
சிரம் அறுத்து செத்தவனுக்கு உயிர்கொடுத்து காத்து
வரம் கொடுத்த வடிவேலன் மண்டூர் கந்தன்

தாயுண்டு எமைகாப்பாள் என்றிருந்தோர்க்கும்
வாயுண்டு வாழலாம் என்றவர்க்கும்
தீயுண்டவர்போல் தகின்ற நோயண்ட
நீயுண்டென வந்தோர்க்கு நிம்மதி கொடுத்தருள்வான்

வாயில் சீலை கட்டி வாகனத்தில் அவரை ஏற்றி
கோயில் வலம் வந்து கொடுக்கின்ற காட்சி
பாயில்படுப்போரையும் எழுந்து பார்க்க வைத்து
கோயில் கொண்டு கோசமற்ற பூசைபெறுவோன்

மயிலகவு ஒலியோடு கோயிலது மணியோசை
துயில்போக்க துடித்தெழுந்து தொடரகடமை
கையில் வேலுடன் காட்சி தந்தருள் புரிந்திட
வையம் போற்றிடும் வடிவுக்கரசனே மண்டூர் கந்தன்.



# ஸ்ரீ வீரபத்தினி

பாரார் புகழும் பத்தினியவள் ஊரார் புகழ
ஆரார் என்றில்லாம் அண்டினோர்க்கெல்லாம்
தீரா வினை தீர்த்து திராய்மடு தன்னில்
வீராப்பாய் வீற்றிருக்கும் வீரபத்தினியவள்

அத்தி ஆலை பாலை பனைதெங்கோடு
இத்தி வேம்பு வீரை நிறை இன்பச்சோலையிலே
சித்திரம் போல் பத்திரமாயுறை பத்தினி
பத்திரமாய் பக்தர்களுக்கெல்லாம் அருள்புரிவாள்

அணிந்த சிலம்போடு நீதியை நிலை நிறுத்த
துணிந்தவள், சினந்து துணைவன் களங்கம் துடைத்து
தணிந்தவள், தன்னை தேடி அண்டி வந்து
பணிந்தவர்க்கெல்லாம் அருள்கொடுக்கும் தாயவள்

நீரோடும் தொடர் அலையோடும் போராடும் மீனவர்
ஊரோடும் உறவோடும் ஒரு குறையுமின்றி
சீரோடும் சிறப்போடும் வாழ அருள்பொழியும்
ஆரோடும் ஒப்புவுவமையில்லா வீரபத்தினியவள்

பந்த பாசம் பாராது பலரும் ஒன்றெனவே
வந்தடைந்தார் பசிபோக்கி வயிறு நிறைத்து
சிந்தைமிகு கவலையெலாம் சீராய் குறைத்திடும்
விந்தைமிகு பத்தினியாள் அருள் வியப்பன்றோ

பாராதும் பார்த்தருள் வேண்டுவோர்க்கும்
தீரா நோய் தீர்த்து திகைப்பிலாற்றிய நிகழ்வு
ஏராளமாயுண்டு இன்னமும் ஈந்தருள் புரிகின்ற
ஆராஅமுதனைய ஆனந்தவல்லியவள் வீரபத்தினி.



# யேசுவே எமது ஆயர்

சாட்டையடியோடு சாகடிக்கும் சிலுவை சுமந்து
காட்டிக் கொடுத்தோரையும் காப்பாற்றென கடவுளை வேண்டி
காட்சிக் காயன்றி காலமானவனையும் உயிர்ப்பித்த
மாட்சிமை பொருந்திய யேசுவே எமது ஆயர்

சொல்லிடங்க புகழான் துயர் துடைக்கும் அருளாளன்
கல்லாலடித்தவர்க்கும் கருணை காட்டிய மேலாளன்
எல்லார்க்கும் ஏற்ற பண்பாளன் பரலோகத்துக்குரித்தாளன்
எல்லையில்லா அன்பாளன் யேசுவே எமது ஆயர்

நிந்தனை துறந்து சிந்தனை சிதறாது மனவொருமையொடு
வந்தனை செய்திடில் வாட்டும் பசி போக்கிடலாமென்றே
ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்கு மேல் பங்கிட்டு
தந்து போசித்த அருள்மிகு யேசுவே எமது ஆயர்.

இரத்தம் சிந்தி மண்ணுக்கு இரையாகப் போவதை அறிந்தே
இரத்தத்தை ரசமாகவும் உடம்பை அப்பமாகவம் பாவித்து
மரத்திலடித்து மாண்டு மீள்வதை மண்ணோர்க்கு காட்டி
தரத்தில் உயர்ந்த யேசுவே எமது ஆயர்.

கார்த்தருள்வேன் கணக்கிலா செல்வம் தருவேனென்ற
சாத்தான் சொல் கேட்டு அவனுக்கு அடி பணியாது
ஆத்திரத்தை அடக்கி அங்கோர் குருடர்க்கு பார்வை கொடுத்து
தோத்திரம் செய்யுமளவிற்கு உயர்ந்த யேசுவே எமது ஆயர்.

# தாயே வாழ்க

மாணிக்கமாய் ஜொலித்திடும் மங்கையற்கரசியெம் தாயே
காணிக்கையாய் மண்மிசையில் கண்மணிகளை
ஆணிமுத்தாய் தந்தவளே அம்மா நீ என்றும்
நானிலத்தில் நலமொடு வாழ வாழ்த்துகிறோம்

இரத்தத்தை பாலாயூட்டி இந்தளவு ஆளாக்கி
சிரத்தையது பாராது சிறப்பாய் கல்வியூட்டி
தரத்திலே முதலாக்கி தக்கோர் புகழுக்காளாக்கி
மரத்தில் ஆல் போல் விருட்சமாக்கிடும் தாயே வாழ்க

கண்ணுக்குள் மணியாய் வைத்து கடமை கண்ணியம் காத்து
மண்ணுக்கு ஒளியாய் மனம் கோணாது ஒளிர வைத்து - எங்கள்
எண்ணத்தில் தெய்வமே தெய்வமே என்றும் - நீங்கள்
பண்ணிய புண்ணியங்கள் என்றுமுனைக் காக்கட்டும்

பாசமுடன் பரிவூட்டி பக்குவமாய் பண்பாயெமை வளர்த்து
நேசமுடன் கல்வியூட்டி நேர் வழியே காட்டி
தேசம் புகழ வைத்த தெய்வமே என்றென்றும் நீங்கள்
பாசமலராய் வான்மழையாய் வற்றா நதியாய் வாழ்க

உன் சிரிப்பும் உபசரிப்பும் உள்ளத்தில் எழுந்து வரும்
அன்பும் அரவணைப்பும் என்றென்றும் எமக்கு தேவையம்மா
இன்பம் நிறைந்த உங்கள் இனிய சொற்களால்
என்றும் இருந்து எம்மை என்னாளும் வாழ்த்திடம்மா

தக்க தக்க துணையினை தேடிக் கொடுத்து தகுதியாய் வாழ
மிக்க உறுதுணை புரிந்து உயர்த்தி விட்டு
மக்களின் மக்கள் கண்டு மனம் மகிழ்ந்து
பக்கம் சாராது பார்த்து பார்த்து வழி நடக்கும் தாயே வாழ்க.

# தந்தை

கருவாகி உருவாக காரணமாய்
குழந்தையிலிருந்தே எம்மோடிருக்கும் நண்பராய்
அன்பாக முழுக்கவனத்துடன் கவனிப்பராய்
அன்புக்கு எல்லையில்லதவராய்
விலைமதிப்பற்ற அறிவுக் களஞ்சியமாய்
வியப்பூட்டும் பரிசுகள் கொடுப்பவராய்
விஷேட திறன்களை வெளிக் கொணர்பவராய்
விருப்பங்களை ஊக்குவித்து நிறைவு செய்பவராய்
கல்வியில் வானளாவ உயர்த்துபவராய்
கனவுகளை நனவாக்குபவராய்
அன்போடும் ஆதரவோடும் உடன் இருப்பவராய்
உண்மையான ஒளிமயமான எதிர்கால வழிகாட்டியாய்
எல்லாவகையிலும் பிழைகளை சுட்டி காட்டுபவராய்
எல்லா காரியங்களிலும் பங்காளியாய்
தன் பெறுமதியான நேரத்தை தருபவராய்
தனிமையில் எங்கும் அனுப்ப மனமில்லாதவராய்
அதியுயர் நிலைக்கு கொண்டுசெல்பவராய்
அளவுக்கதிகமான பாதுகாப்பை நல்குபவராய்
முழுமையான முழு மனிதராயாக்குபவராய்
முழு முயற்சியையும் எமக்கே செய்பவராய்
உலகுக்கு நம்பிக்கையுடன் முகம் கொடுக்க வைப்பவராய்
உல்லாசம் நிறைந்த சந்தோச வாழ்வை தருபவராய்
பெரும் சுகத்தையும் ஆதரவையும் ஈபவராய்
எல்லாவற்றுக்கும் ஆசானாய்
எம் இதயத்தில் அதிபெறுமதி வாய்ந்தவராய்
என்றும் எமக்காய் இருப்பவரே தந்தை
அப்படிப்பட்டவர் சொல்லே மந்திரம்
அவர் சொல் தட்டி அவதியுற்று வாழாதே.



# ஆசிரியர்

கல்விதனை கனிரசமாய் கன்னல் பாகாய் ஊட்டி
பல்விதமாய் விளக்கிட பலகதைகள் சாட்டி
நல்விதமாய் படித்தே வாழ வழிதனை காட்டி
செல்லுமிடமெல்லாம் சிறந்தோங்க செய் ஆசிரியர்களே வாழி

நல்லாட்சி செய்திட நாட்டின் தலைவர்களையும்
சொல்லாட்சி செய்திட பாட்டின் படைப்பாளிகளையும்
வில்லாட்சி செய்திட வீர புருசர்களையும்
நல்லா உருவாக்கிடும் நல்லாசன்களே வாழ்க


வீட்டின் வேதனைகள் பல இருந்தாலும்
நாட்டின் கண்களில் ஒன்றான கல்விதனை
ஊட்டியே மாணமணிகளுக்கு நல்வழி
காட்டிட துடித்திடும் நம் குருமாரே வாழ்க

கோணிக் குறுகி சமூகத்தில் வாழ்ந்திடாது
ஏணிபோல் இருந்தெம்மை ஏற்றிடும்
வாணிக்கு ஒப்பான எம் ஆசான்களை
காணிக்கை கொண்டு பணிந்தாலும் தகுமே

ஒழுக்க சீலராய் உண்மை மனிதராய் - சமூக
விழுமியங்களில் வழுவாது சிறந்தோங்க
முழு மூச்சாய் முழுமையாய் மற்றவர்க்காய் அர்ப்பணித்து
மெழுகுவர்த்தியாய் வாழும் ஆசிரியர்கள் வாழ்க நீடு

ஆண்டுக்கொரு முறை ஆசிரியர் தினத்திலன்றி
ஆண்டு முழுதும் தொழுதெழுந்தாலும் - அது
மீண்டும் மீண்டும் எமக்கு பெருமைக்கு பெருமையாய்
மீண்டெழுமேயன்றி தூர்ந்து போகாதன்றோ.

படித்திட துடித்திடும் மாணவர் எமக்கு
படித்து படித்தே படித்துத் தரும் ஆசிரியர்களுக்கு
வடித்திடும் இப்பாமாலை உருத்தாகும்
நடிப்பில்லை நல்லுள்ளத்தோடு சூடுகின்றோம்.



# கவிஞர் மண்டூர் தேசிகன்

வீரம் விளை நிலமாம்
வெற்றித் திரு நிலமாம்
ஏரோடும் களனியெல்லாம்
எறியும் நெற் கதிர் மயமாம்
சீரோடும் சிறப்பினோடும்
செந்தமிழர் வாழ் நிலமாம்
சின்னக் கதிர்காமமெனும்
சிறப்புறு மண்டூரில்
ஓர் புதல்வன் ஞான தேசிகனாய்
ஊர் சிறக்க கண் திறந்தான்

எது எது யார் யார்க்கு
இவ்வுலகில் கிடைக்குமென
இதுவரையில் அறிந்தவர்கள்
எவருமில்லை என்றாலும்
எதையெதையெல்லாம்
பெறவேண்டும்
என முயன்று வாழ்வில்
அதை அனைத்தையும் பெறுவதற்கு
ஆழ்ந்து கற்றவனே
இறைநாமம் கொண்ட
எங்கள் மண்டூர் தேசிகன்
படித்துயர்ந்த தேசிகன்
பார்த்த பெரும் பதவிகளில்
துடிப்புடனே செயல்பட்டு
தூய்மையுடன் பாடசாலை
அதிபராகி மாணவர்க்கெல்லாம்
அளித்தான் பேரின்பம்
உரியபடி உயர்ந்ததினால்
உள்ளத்தில் கள்ளமில்லை
துளி கூட இவன் மனதில்
துரோகதனங்களில்லை

அன்போடும் பண்போடும்
அனைவரையும் மதித்திடுவான்
மண்மீதும் மொழிமீதும்
மக்கள் மீதும் பற்றுடையான்
இரக்க குணமுடையான்
இலக்கிய துறையிலும்
இவனுக்கு நிகர் இவனே தான்
பன்நூறு ஆண்டுகாலம்
பாரில் வாழத்தான் முடியவில்லை
அவன் படைத்த ஆக்கங்கள்
அவனியுள்ளவும் வாழும்.

(ஓராண்டு நிறைவு நினைவாக)



## வாழ்த்துப்பா

வங்கக் கடலோரம் வளம்பெறு அமிர்தகழியில்
மங்காப்புகழொடு வாழ் கவிஞர் செ.கு
எங்கள் சொத்து தமிழ் கடலின் முத்து
இங்கவர்க்கு வாழ்த்துரைக்க வந்தேன் நான்

மட்டக்களப்பின் இலக்கியச் சுடரொளி
எட்டுத்திக்கும் பரவுமிவர் புகழொளி!
தெட்டத் தெளிவான நேர்வழி
தொட்டவர் பட்டவர்க்கும் வெட்டார் குழி!

இரையும் கடலின் இசையினிலே
வரையும் எழுத்துக் குவியலுக்குள்
கரையும் காக குரல் கேளா!
தரையில் துஞ்சும் கவிஞர் இவர்!

மூச்சினிலே தமிழுணர்வுப் போதை
பேச்சினிலே இலக்கிய வாடை – எடுத்த
வீச்சினிலே எழுதிக் குவிக்கும் திறன்
மாச்சலில்லா எழுத்தாளன் மண்ணுள்ளளவும் வாழி

வறுமை வந்து வாட்டினாலும்
சிறுமை கொண்டு சினக்காது
மறுமை என்றொன்று உண்டென்றே
பொறுமை கொண்டு புன்னகைப்பார்

நித்தம் செய் கருமம் நிறைவுசெய்வார்
சுத்தமாய் இருப்பார் சுகம் பெறுவார்
பித்தன் பேயனென பிறர் வசை பொழிந்தாலும்
சத்தமின்றி சலனமின்றி கதை கவிதை சமைப்பார்

அளிக்கும் அன்புச் சொல் வீச்சால்
களிக்கும் சுற்றும் குழாம் நெஞ்சால்
பழிக்கும் தேனை மிஞ்சும் குரலால்
தெளிக்கும் செந்தமிழ் சொல்லாய் வாழி!

உயர்ந்த உடல் உடலைப் போலுள்ளம்
பயந்த சுபாவம், பண்பின் சிகரம்
செயலும், சொல்லும் ஒன்றாய் பேணும்
நயந்த நடையுடை கொண்டோய் வாழி!

தோத்திரங்கள் செய்வார் தோழமையோடு நடந்திடுவார்
சாத்திரங்கள் தொகுத்தறிவார் சாதி சமயம் பிரித்தறியார்
சூத்திரங்கள் செய்திடுவார் சூதுவாது தானறியார்
ஆத்திரங்கள் கொள்ளார் அமைதியின் வடிவமாவார்!

தானவர்க்கு தன்னிலைக்கேற்ப இட்டு
ஆன செயலனைத்தும் அன்பாய் நிறைத்து
வானவர்க்கு நல் விருந்தினனாகிட
ஊனமேதுமில்லா உள்ளளவும் வாழியவே!

படித்தோரும் பாமரரும் விளங்கி
படிக்க படிக்க பரவசமூட்டிட
கடிதென கனகச்சிதமாய்க் கவி
வடித்தே பரவ பணி செய் பாவல வாழியவே!

பிறந்த மண்ணுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்து
துறந்தது இல்லை என்றும் வாய்மை
மறந்தும் மற்றவரின் மனம் நோகாது
அறத்தினை என்றும் காப்போய் வாழி!

எழுதும் கடதாசியை விலைக்கு வாங்க முடியாதென்றே
எழுதுனராய் கடதாசியாலை பணியேற்று
எழுதிக்கூலி பெறு நேரம் போக மீதிப்
பொழுதெல்லாம் எழுதிக் கொண்டிருப்பவரே வாழி!

அழகு தமிழுக்கு அழகு சேர்க்க அவதரித்த
அழகுப் பெருமகனின் அழகுள்ளத்தில்
அழகாய் ஊற்றெடுக்கும் ஆழக்கருவெலாம்
அழகு நிறை ஆக்கமாய் அழகாய் அச்சேறுமன்றோ!

அமிர்த மொழியாம் தமிழ் மொழியாலே
திமிர் நடை போட்டு புனைபெயராம்
"அமிர்தகழியான்","மிதுனன்" நகைச்சுவையை
அமிர்தமாய் சுவைத்து ஆழ்ந்து சிந்திக்க தூண்டும்!

ஆழுனர் விருது அத்தோடு எத்தனையோ விருது
வாழும் போதே பெற்றுப் பெருமையுற்றாலும்
நாளும் நல்லோர் சொல்லும் "கவிமணியே"
வீழும் நாள்வரை உவகை ஊட்டும் அவர்க்கு!

இலக்குவன் இராமன் போல் தமிழும் நீங்களும்
விலக்குவன விலக்கி விழுமியங்கள் பேணி
இலக்கிய மணியாய் சுடராய் கலாபூசணமாய்
துலங்கிடு செம்மலே தூய தமிழால் வாழ்த்துகின்றேன்!

(21.04.2012ம் திகதி கவிஞர் செ.குணரெத்தினம் கவிதைகள்
நூல் வெளியீட்டு விழாவின் போது வாசிக்கப்பட்டது)



# நம் நாடு

இந்து சமுத்திரத்தின் முத்தாம்
இலங்கை மணி திருநாடு
சொந்த பந்தங்களோடு
செர்ர்க்கம் போன்ற வாழ்க்கை
எந்த நாட்டுக்கும் இல்லாத
இயற்கைவளம் இறைகொடை
வந்தது சுதந்திரம் அடக்கி ஆழ
வரிந்து கட்டியது பேரினம்.

கல்வியில் வைத்தது கை
கலகம் தொடங்கியது மெய்
வெல்லுதல் தோற்றலின்றி
வேகமாய் முன்னேறி தணிந்தது
சொல்வனவெல்லாம் பொய்
சோர்வுற்று போகிறது ஆட்சி
வெல்லணும் நடத்தணும் ஆட்சி
வேண்டும் அதற்கு தமிழென்றாட்சி.

ஆடி முடிந்த கள நிலவரத்தில்
அமுக்கப்பட்ட நீதி நியாத்தை
கூடிக்கலந்து பேசினாலும்
கொடுக்க மனம் இருந்த போதும்
ஓடிடும் ஆட்சி கதிரையென
உள்ளூரப் பயம் பற்ற
மூடி மறைக்க நினைப்பதினால்
முரட்டு குணமென்றாட்சி.

மனிதர் நாம் என்கின்ற
மனிதத்தை மனதில் இருத்தி
இனிவரும் சமுதாயம்
இனிதே இயல்பாய் வாழ
தனியீழம் தவிர்த்து தக்கதோர்
தீர்வினை திணியாமல் திருப்தியாக
கணித்து கொடுத்திடில் கட்டாயம்
கண்டிடும் தன்னிறைவு நம் நாடு.

(வீரகேசரி 2016 தை)



# தியாகம்

புறப்படடா போருக்கு போர்க்களத்தில்
புறமுதுகு காட்டாத வீரனாய் நில்லு
தறித்திடடா எதிரிகளின் தலையை தனித்தனியாய்
தறிகெட்டோடுமட்டு தரித்திடாதே
பொறித்திடடா உன்புகழை புவி மீதெங்கும்
புல்லர்களின் கொட்டமினி அடங்கிப் போகும்
பறித்திடடா தமிழ் மண்ணை என்றுரைத்த
பார்புகழும் பூபதிக்கு பணிவாய் தம்பி

நாமிதிக்கும் தமிழ் மண்ணை காப்பதற்காய்
நாள்தோறும் சிறை சென்றோருண்டு இன்னும்
தாமதிக்கும் போராட்டம் தளர்ந்திடாமல்
தம் பொருளை தன்னுயிரை ஈந்தோருண்டு
தீமிதிக்கும் நிலையாகி உயிர் துறந்தோர்
தீரத்தின் சுடர் வடிவேயானால் இன்று
நாமதிக்கும் தியாகங்களில் நமதன்னை
பூபதிக்கு நிகராமோ புகல்வாய் தம்பி


வேறு

கண்ணிலார் ஆட்சி நெறிகண்டாள்
தன்னிரு புதல்வரை ஈந்தாள்
கண்ணகி கண்ட வழி வெறுத்தாள்
காலத்தால் அழியாப் புகழ் கொண்ட
அண்ணல் காந்தி வழி நின்றாள்
அறுதியிடா யுத்த நிறுத்தமென்றாள்
உண்ணாதிருந்து மீளாதுயிலுற்றாள்
எண்ணிலா நெஞ்சத்தில் குடி புகுந்தாள்.

அண்ணல் காந்தி அகிம்சையின் தந்தையாம்
அவர் வழி நின்றிட்ட அன்னை பூபதியை – அந்த
மண்ணிலிருந்து வந்த கூலிப்படையும் மண்ணிண்
மகிமையை மறந்து நோன்பினை கலைக்க
எண்ணிலடங்கா துன்பத்தை கொடுத்த போதும்
எண்ணிய எண்ணத்தில் எள்ளளவும் பிசகின்றி
புண்ணிய சிவபூமியிலே வீற்றிருந்து
வீறுநடை போடடாவென வீழ்ந்தாள்

காலம் காலமாய் இம்மண்ணில் நாங்கள்
கடமைக்காய் வேஷமிட்டு பவனிவரவில்லை
சாலச் சிறந்த எங்கள் தலைமைத்துவத்தில்
ஆயுதம் மட்டுமன்றி அகிம்சையுமுண்டு
சீலம் அறிந்திட வேண்டுமென்றே
சீற்றமுடன் மாமாங்கேஸ்வரர் மண்ணில்
கோலமதாய் உளமுருக ஊனுருக
உட்கார்ந்தாள் உயிர் துறந்தாள்.

(பூபதியின் நினைவு தினத்துக்காக)



# துணை

ஆணம் சுண்டல்
ஆழகாக பொரித்துக் குழம்பு
பருப்போடு வெள்ளைக்கறி
அனுதினமும் நடக்கிறது
என் வீட்டில்
இரும்புச் சத்துக்கும் குறைவில்லை
இவையனைத்துக்கும்
என் வீட்டு முற்றத்து
முருங்கை மரமே துணை.

# முழுமையானவள்

அன்ன நடையினிலே என்னை கவர்ந்தவள்
அன்பை சொரிந்து அடிமை கொண்டவள்
உண்மையை உரைத்து உளம் புகுந்தவள்
உண்மைக்குண்மையாய் என்னோடு இருப்பவள்
கடவுள், கணவன் பக்தி மிக்கவள்
கருணை காட்டுவதில் வள்ளல்
கேட்டதை தருவதில் கற்பகத்தரு
கெட்ட சகவாசமற்றவள்
உறவாளர் ஊரோடு வந்தாலும்
உளம் கோணாது உபசரிப்பதில் உபகாரி
ஆடைகள் தோய்த்திடும் சலவைக்காரி
அறுசுவை உணவு செய்திடும் சமையல்காரி
துன்பம் வந்துற்றால் தோள் கொடுத்திடும் தோழி
துயர் தரும் நோய் போக்கிடும் வைத்தியர்
பார்த்து பார்த்து பணிவிடை செய்வதில்
பண்பான வேலைக்காரி
சூதுவாது தெரியாதவள்
சுட்டெரிக்கும் சொல் சொல்லாதவள்
பஞ்சப் பாட்டு பாடாதவள்
பகட்டான வாழ்வு வெறுப்பவள்
மொத்தத்தில் எனக்கும் பிள்ளைகளுக்கும்
முழுமையான மனைவியும், தாயும்

# புவி புகழ் எழுத்தாளன்

“எனக்குள்ளும் ஒரு எழுத்தாளன் இருக்கிறான்
என்றொரு இறுமாப்பு எனக்கு
மக்கள் நான்கு மனைவியும் இருக்கிறாள்
மக்கள் என் இலட்சியத்திற்கு ஆப்பு
மனைவி எதற்கும் ஒத்துழைப்பு
மக்கள் மதித்து நடப்பதில் முன்னிப்பு
தூங்குவதற்காய் படுத்திருந்தேன் ஓர் இரவு
தூக்கம் வரவில்லை வந்தது கவிதை கருவொன்று
துள்ளியெழுந்து துண்டு காகிதம் எடுத்து
பேனாவை எடுத்தெழுதினேன் எழுதவில்லை
பேனாவில் மையில்லை புரிந்து கொண்டேன்
கோபம் கோபமாய் வந்தது.
கோவித்து என்ன பயன்? எல்லோரும் நித்திரை!
விடிந்ததும் விசாரணை கடிந்து கொண்டேன் பிள்ளைகளை.
“வெறும் பேனா வைத்தது நான்தான்!
வெறுப்பாக இருக்கிறது பள்ளிக்கு போக
பள்ளிக்கு போகும் எங்களுக்கு பேனா, கொப்பி
வாங்கித்தர வக்கில்லை உங்களுக்கு!”
வாரிச் சுருட்டி எழுந்தாள் இளைய மகள் இளநிலா.
“எழுதி எழுதி என்னத்தை கிழித்தீர்கள்?
எழுத்தாளன் என்ற பெயர் மட்டும் தான் மிச்சம்!”
என்று வைதனள்
என் இதயம் கனத்தது.
புலமையும் வறுமையும் சேர்ந்தே இருக்கும்
புரியாமலா சொன்னார்கள் ஆன்றோரன்று”
புலம்பாமல் புலம்பினான்
புவி புகழ் அந்த எழுத்தாளன்.

# ஆமை

மனித துயர் கண்டு ஆற்றாமை
மனிதரை தூற்றாமை
உண்மைக்கு மாறாக நடவாமை
உலுத்தர் செயல் போற்றாமை
மனைவி மக்களை ஒதுக்காமை
மகிழ்ச்சிக்காய் யாரையும் கெஞ்சாமை
தான் நினைத்தது சரியென நில்லாமை
தான் தான் பெரிதென நினையாமை
தனக்கென ஒருவரை தேடாமை
தன்னிடத்தில் குறையேதும் வையாமை
அடக்கிட நினைப்போர்க்கு அஞ்சாமை
அடுத்தவரை கெடுக்க துணைபோகாமை
கடமையில் துஞ்சாமை

கட்டாயமற்றோர்க்கு உதவாமை
தனக்கியலாததை தூக்காமை
தப்பு செய்வாரோடு சேராமை
தீமை பயப்பன எழுதாமை
தீயாரின் தீயதை பாராமை
தீயார்க்கு அறிவுரை பகராமை
தீது தருவன செய்யாமை
தீயாரோடு சேராமை
தீயார் பக்கம் சாராமை
வரவுக்காய் கல்லாமை
வம்புச்சண்டையை வரவேற்காமை
இலாபத்தை எதிர்நோக்காமை
இயலாதன புரியாமை
வெற்றிக்காய் மகிழாமை
வெற்றுப்பேச்சு பேசாமை
நல்லதேயன்றி கெட்டது செய்யாமை
நன்றி மறவாமை
விலை மாதர் உறவு நாடாமை
வீணர் பேச்சு கேட்காமை
வணக்கத்துக்கு தகுதியற்றோரை வணங்காமை
வஞ்சகர் உறவு கொள்ளாமை
சுரண்டி வாழ ஆசைப்படாமை
சுத்தம் பேணார் உறவு கலவாமை
சுயநலத்துக்காய் மண்டியிடாமை
சுயநலத்தோர்க்கு உதவாமை
இல்லாதோர்க்கு கொடுக்க மறுக்காமை
இன்செயல் கண்டு துயராமை
இல்லாத இடத்தில் இறைவனை தேடாமை
இறைவன் இல்லை என்று கூறாமை
மூடநம்பிக்கை செயல்களை ஏற்காமை
மூடர்களை முற்றாக வெறுக்காமை
இப்படி இவரில் எத்தனையோ ஆமை
இன்னும் இல்லையென்று கூற முடியாமை.

# சிறகொடிந்த சமாதானபுறா

முப்பது ஆண்டுகளுக்கு
முன்னரா இருண்டது எம் வாழ்வு!
இல்லையே இன்றுதான்
இருண்டு கிடக்கிறது.
உயர்கல்வியில் உரிமை கேட்கப்போய்
உருமாறிப்போனது ஆரம்பக்கல்வியும்!
குடியேற்ற தடை காணியில் கேட்க
குடியோடு குடிபெயரும் நிலை தொடர்கிறது.
விடுதலை வேண்டி போராடப்போக
சுடுகாடானது எமது மண்!
சொந்த மண்ணில் அகதியாகி
சோமாலியா மக்களிலும் கேவலமாய்
பாய்கின்றோம் எச்சிலைக்காக
நாய்களோடு போட்டி போட்டு
கொடிகள் பலவிதமாய் பறந்தாலும்
மடிவது மட்டும் நாங்கள் தான்.
பாலாறும் தேனாறும் பாய்ந்த கிராமங்களில்
பாய்ந்தோடுகிறது இரத்தாறும் கண்ணீராறும்
விண்ணிலிருந்து குண்டுமாரி பொழிய
மண்ணிலிருந்து பீரங்கி ஆட்லெறி
பூமித்தாய் மடியில்
பூகம்பமாய் வெடிக்க
மக்கள் சின்னா பின்னமாய் சிதறி
மண்ணோடு மண்ணாக இதனுள்ளே
சிக்கி சிறகொடிந்த சமாதானப்புறா
சித்திரைவதைப்பட்டு
வீழ்ந்து கிடக்கிறது ஈழமண்ணில்
விட்டுக்கொடுக்கும் வைத்தியம் புரிவாரின்றி.

(தினமுரசு2005)

# சிரித்தான்

சிரித்தாள் சிரித்தான்
சிந்தித்தான்
சிலவேளை இது தான் காதலோவென்று
அவனோ மீனவன் படிப்பில்லை
அவளோ படிப்பவள்
நண்பனிடம்
நடந்ததை கூற
எழுது கடிதம்
எல்லாம் சரிவரும்
என்றான்
எழுதத் தெரியாது
எழுதித் தாவென்றான்
என்னவளே இனியவளே
என் நெஞ்சில் நினைவாய் நிறைந்தவளே
என் இதயம் இருக்கும்வரை
என்றும் உனை நான் மறவேன்
என்றெழுதி படித்து சொன்னான்

சிந்தித்தான் சிரித்தான்
நெஞ்சுக்கும் இதயத்துக்கும்
நினைவுக்கும் மறப்புக்கும் சம்பந்தம் என்ன
நினைப்பதும் மறப்பதும்
நினைவில் வைத்துக் கொள்வதும் மூளை தானே!
படித்தவர்கள் சொன்னார்கள்
படிக்கவில்லை இவனென்றெண்ணி
எழுதிய கடிதத்தை
எடுத்தெறிந்தான் கசக்கி

## ஆலய தரிசனம்

அழகுராணி போட்டியில் கலந்திடும்
அரிவையர் போல்
அரைகுறை ஆடையில்
அலைகிறது பெண்ணினம்
ஆலயதரிசனம் எனும் பெயரில்
அதற்கு நடுவராய்
ஆலய வண்ணக்கர் சீருடையில்

## இன்பவெள்ளம்

மக்களால் ஒதுக்கப்பட்டோரும்
மக்கள் பணம் சுரண்டியோரும்
கண்டனத்துள்ளானோரும்
கண்ணியமற்றோரும்
சமுதாயத்தால் ஒதுக்கிய
சமுதாய விரோதிகளும்
எதிர்ப்பு கும்பலாய் திரண்டு
எதிர்க்கும் நிலை மாறிடில்
வன்செயல், கொலை, களவு, கடத்தல்
வறுமை, கப்பம் பறந்தோடிடும்
இரத்தவெள்ளம் வற்றி
இன்பவெள்ளம் பாய்ந்தோடும்.
(2015)



## யாருண்டு

மந்திரம் என்று கூறி
மக்களை ஏமாற்றி
தந்திரம் செய்கிறது
தனிநபர் கூட்டமொன்று
விதைகள் பெற்று
விளைவித்து காட்டுமா?
வீணர் கூட்டம்
மந்திரம் உண்மை
மந்திரத்தை செபிக்கின்ற
மனித மனம் தான்
புனிதமில்லை
பொய் கூறா ஒருவன்
வாயிருந்து வரும்
வார்த்தையே மந்திரம்
அதுவே பலிக்கும்
அதற்கு இங்கு யாருண்டு

## வெண்கதிர்

விழை வயலில்
வெண்கதிரொன்று
அதை அகற்ற சென்றேன் கால்
அடிபட்டு
அழிந்தது
ஆயிரம் பயிர்

## சேவை

கடவுள்
மனிதனை படைத்தான்
மனிதன்
கடவுளை படைத்தான்
தன் உணவையும் படைத்தான்
கடவுளுக்கு
கடவுள்
ஏன் படைத்தான் மனிதனை
என்பதை புரிந்தும் புரியாத
மனிதன்
கடவுளைப் படைத்தான்
மக்கள் சேவையே
மகேசன் சேவை என்பதை
விளங்கியும் விளங்காத
மனிதன்

## விருந்தாளி

"வாங்க வாங்க
வந்து இருங்க"
வரவேற்பு நன்று
"வருகிறோம் நாங்கள்"
வந்தவர் கூற
"இருங்க தேனீர்
அருந்தி போங்க
எரியுது எரியுது
கொதிக்குது கொதிக்குது"
என்றனள் வீட்டுக்காரி
எரிவது அடுப்பா வயிறா
கொதிப்பது நீரா நெஞ்சா
புரியாது விழித்தான்
புது விருந்தாளி

# உறுமி எழாதோ

இனியஞ்சோம் இரவல் மொழி கெஞ்சோம்
குனியோம் தலை கும்பிடோம் பிறரை
துணிவு கொண்டோம் துடைப்போம் தமிழ் கறையை
தனியீழம் பெறுவோம் தமிழரசு அமைப்போம்

தயிர் கடையும் மத்தாக உழலும் தமிழினத்தின்
துயர் களைய வந்துற்றோர் வனத்தில் படும்
துயர் கண்டு துடித்திடாதிந்த தமிழினம்
உயர்வு கண்டிட வேண்டின் உறுமி எழாதோ
*(2005)*

# மட்டு மாநகர்

நிலவளமும் நீர்வளமும் நிறைந்து
நிலமகள் குருதிக்கறை நீங்கி புனிதமாய்
பலயின மீன்கள் பாட பாவையர் ஆட
பலயின மக்களும் பண்பாய் பாசமாய் வாழ
காட்சி கொடுத்து கடந்தேற அருள் பாலிக்கும்
மாட்சி பொருந்திய தெய்வத் திருத்தலங்கள்
வல்லார்க்கு வல்லவராய் வன்மங்கள் விடுத்து
எல்லார்க்கும் நல்லவராய் வாழ்மக்கள்
மீனோடு இறால் நண்டு மலிந்து
தேனோடு பால் தயிர் தேவைக்கதிகமாக
கல்லா பாமரரோடும் கலந்துறவாடும்
கற்றறிந்த கல்விமான்கள்
உண்டுண்டு உறங்கிடாது உழைக்கின்ற உழவர்
உழவர் குவிக்கின்ற நெற்குவியல்
இத்தனையும் இங்குண்டு இன்று
இதுதான் எங்கள் மட்டுமாநகர்.



## புரிந்து நட

பணம் படைத்தவரெல்லாம்
பறந்து பறந்து
கடவுளைத் தேடி
கோயில் குளமென்று
அலைகின்றார்கள்
ஏழையின் சிரிப்பில்
கடவுள் இருக்கின்றார்
என்பதை மறந்து
ஏழை துயர் போக்க
ஏழை சிரிப்பான்
அதுவே கடவுள் என்றனர்
ஆன்றோர்
புரியாது
புலம்பும் மனிதா
புரிந்து நட

## கல்லறை

இறந்து புதைத்த பின்
எழுந்து வராமல்
இருத்தப்பட்ட சுமை

# உறுதி



கடல் அலை ஓய்வதுண்டோ
காற்று வீசாது இருந்ததுண்டோ
சுற்றாது பூமி நின்றதுண்டோ
தேனீ தேனை தேடாது விட்டதுண்டோ
தேடி உணவை சேர்க்காது விட்டதுண்டோ
கடமையை அவைகள் செய்கின்றன
கடமையை ஏன் மறந்தாய்
சிந்திக்க தெரிந்த மனிதா
சீராய் கடமையை செய்
பலனை எதிர்பாராதே
பலன் எந்த வடிவத்திலும்
உன்னை வந்து சேரும்
உறுதி இது

# கச்சேரி

நீ என்ன
கச்சேரியா
நான் அனுப்பும்
கடிதங்களுக்கெல்லாம்
பதில் போட
மாட்டேன் என்கிறாய்

## செழிப்பு

அரசு
எத்தனை சட்டங்கள்
திட்டங்கள் போட்டாலும்
திறமான அபிவிருத்தி கண்டாலும்
பலரின் பங்கு
சிலரின் பைகளில்
சிக்காது தடுத்தால் தான்
நாட்டு மக்கள்
சீரடைவர் சிறப்படைவர்
செழிப்படைவர்

## அனைத்தும் பெறுவாய்

ஏய் மனிதா
மதம் மதமென
மதம் பிடித்தலையாதே
மற்றவர் மனம் நோக நடவாதே
தருமத்தை செய்
தலையை அது காக்கும்
தாய் தந்தையர்
முதல் கடவுள்
அவர்களை வணங்கிப்பேண்
அனைத்தும் பெறுவாய்

## கற்போம்

கற்றோர்க்கு
சென்ற இடமெல்லாம்
சிறப்பு என்பர்
கற்றவன் நீ
சென்ற இடமெல்லாம்
சிறப்பாய் இருப்பாய்
கல்லாதவர் நாம்
கடையழிகின்றோம்
எங்கும் என
ஏங்கினான் ஒருவன்
ஏக்கம் போக
கற்போம் நாமும்

## பார்

முகத்துக்கு முன்
முகத்துதி பாடிவிட்டு
பின்னால் தூற்றுபவர்களை
கண்டு கொள்ள
கூடாதென்றோ
மனிதனுக்கு பின்னால்
கண் வையாமல் விட்டார்
கடவுள்

முதுகோடு என்ன
கோபம் கடவுளுக்கு
முதுகைப் பார்க்க
முடியாமல் படைத்தார்
நடந்தவைகளை பாராதே
நடப்பவற்றை பார் என்றோ



## படைப்பு

கடவுள்
ஒரேமாதிரி
மனிதனை படைத்தான்
மனிதன்
பல மாதிரி
கடவுளை படைத்தான்

## மறுத்திடுமா

அன்னை மார்பில்
அமுதம் பருகிய நீ
அடுத்தவள் மார்பை
அளந்து பார்ப்பதேனோ
அன்னை இடுப்பை
அலங்கரித்த நீ
அடுத்தவள் இடுப்பை
அசிங்கப்படுத்துவதேனோ
ஆணினமே
ஏன் மறந்தாய்
அவளும் நாளை
ஒரு தாய் என்பதை
என்றெழுதினான் ஒருவன்
எழுதியதை பேசுவதை வைத்து
அப்படி இல்லை அவரென்று
அழுத்தமாக சொல்லலாம்
அவன் எண்ணமும் பார்வையும்
அப்படியில்லையென்று
அவர் உள்ளம் மறுத்திடுமா?

## சமத்துவ கவிஞன்

பாரதி கவிதை படிப்பான்
பரப்புரை செய்வான்
சாதியில்லையென்பான்
சமன் ஆண் பெண் என்பான்
மூடநம்பிக்கையை எதிர்ப்பான்
மூச்சான கவிதைகள் எழுதுவான்
"சமத்துவ கவிஞன்" எனும்
சமூக பட்டமும் பெற்றான்
இளைய மகனுக்கு திருமணம் பேசினர்
இதனை மகனிடம் கூறினர்
மகனோ காதலிப்பதாய் கூறி
மறுத்துரைத்தான்
ஆராய்ந்தார்
அவர்கள் சாதி வேறு
வெருண்டெழுந்தார்
வெட்டுவேன் குத்துவேன் என்றார்
சமாதானம் பேச
மனைவி முற்பட்டாள்
வாய் பொத்து
அவர்கள் சாதி
இழிவானது என்றார்
சமத்துவ கவிஞர் என
சமூகத்தில் பெயர் பெற்ற அவர்



## வெண்சுருட்டு


தீரா மோகத்துடன்
தீ மூட்டி என்னை
உறுஞ்சி உறுஞ்சி இழுத்து
உயிர்போக்கி
சற்று நேரத்தில்
சாம்பலாக்கும் மனிதா
புற்று நோயுடன்
புதுப் புது நோயும் தந்து
அணு அணுவாய்
அழித்துடுவேன் மறவாதே
என்றது வெண்சுருட்டு

## எழுத்தாளன்

அவர் கதை கவிதையை
உலகறியும்
அவர் நிலையை யாரறிவார்
தமிழை வளர்த்தார்
தன் குடும்ப வளத்தை
இழந்தார்

# கடவுள்பாடு

கடவுளின் படங்களுடன்
கடும்விலை கொடுத்து
அச்சிடும்
அழைப்பு அட்டைக்கு
மஞ்சள் தடவி
மரியாதையாய் கொடுக்க
மறுகணம் அல்லது
மறுநாள்
முற்றத்தில் கிடந்து
மிதிபட்டு கசங்கி
போகும் குப்பை மேட்டுக்கு
கடவுளும் தான்
காப்பாற்றுவார்களா
கடவுளை
அழைப்பு கொடுப்போர்
அச்சிடாது கடவுளை



# ஆன்மீகம்

பட்டையும் கொட்டையும்
பகட்டான உடையும்
அமைதியும் காவியும்
ஆன்மீகமல்ல
தன்னுயிர் போல்
மன்னுயிர்களை நேசிப்பதும்
மற்றவர்க்கு முடிந்தளவு
உதவுதலே
ஆன்மீகமாகும்

# செழிப்பு

செழிப்பான வாழ்வாம்
சொக்கில் குழியிருந்தால்
சொக்கில் குழியிருக்கிறது
வயோதிபர் இல்லத்து
தாத்தா பாட்டிக்கு
வாழ்வு செழிப்பானதா
இவர்களுக்கு



# பழமொழி

சிற்பியின் கைவண்ணம்
சிறப்பாய் அமைந்தது
உருவானது நாயுருவம்
உண்மை நாய் போல
நாயை கண்டால்
கல்லை காணோம்
கல்லை கண்டால்
நாயை காணோம்
என்றானது
பழமொழி



## காந்தீயவாதி

தீயவை பார்க்காதே
தீயவை பேசாதே
தீயவை கேட்காதே
காந்தி சொன்னது
கவனமாய் கடைப்பிடிக்கிறேன்
செய்யாதே என்று தீயதை
சொல்லவில்லை அதனால்
செய்கிறேன்
நானொரு
காந்தீயவாதி
என்றான் ஒருவன்.

## முட்டாள்

காதலித்தேன் நான்
கவிஞரானேன், வீரனானேன்
புத்திசாலியானேன்
புதுப் புது வடிவமானேன்
வேறொருவரை அவள்
விரும்புவதாக
அறிந்ததும் முட்டாளானேன்

# எனக்கே புரியவில்லை



தும்புத்தடி வாருகல்
துடைத்து சுத்தம் செய்கிறது
வீட்டை முற்றத்தை
வீதியில் விற்றுப் போவோனை
வாருகல் தும்புத்தடி என கூப்பிட்டால்
வாய் நிறைய சிரித்து
வருவான் ஓடி காலடிக்கு
வீதியில் போவோரையும்
விளையாடுவோரையும்
வாருகல் தும்புத்தடி என கூப்பிட்டால்
வருவார்கள் தடிகொண்டெம்மை அடிக்க
வாருகல் தும்புத்தடி
சுத்தம் தந்து
சுகம் தருவதுதானே
ஏனிந்த வித்தியாசம்
எனக்கே புரியவில்லை.

# ஏன் மறந்தான்

கோபம் கொள்ளாதவனும்
கோபம் கொள்வான் மாடு என்றால்
கோபம் கொண்டவனும்
கோபம் தணிவான் பசுவென்றால்
மாடும் பசுவும் ஒன்றுதானே
மனிதன் இதை ஏன் மறந்தான்

## மாறிப்போச்சி

குறு குறுவெனப் பார்த்தால் பூனை
குறிவைக்கிறது இரையை என்றர்த்தம்
குறியை நோக்கி பாய்கின்றபோது
குறுக்கே நாம் போனால்
நம்மீது பூனை வீழ்ந்தால்
நமக்கு சேதம்
பூனைக்கு இரைகிடையாததால்
பூனைக்கு சோகம்
எல்லாமே அபசகுனம்
இதற்காகத்தான்
பூனை குறுகுறுத்துப் பார்த்தால்
போகாதே குறுக்கால் என்றது
பழமொழி
பூனை குறுக்கறுத்தால்
போகாதே அபசகுனம் என்றாகிப்
போச்சி இன்று

## பாசாக முடியுமா

விதைக்கிற காலத்தில்
வீட்டில் தூங்கிவிட்டு
அறுக்கிற காலத்தில்
அரிவாளுடன் போவது போல்
படிக்கிற காலத்தில்
ஆசிரியர் பெற்றோர் சொல்லை
அலட்சியம் செய்துவிட்டு
விளையாடி திரிந்துவிட்டு
பரீட்சைக்கு போனால்
பாசாக முடியுமா?

# வட்டி



“வட்டிக்கு கொடுப்பது பாவம்
வட்டி குடும்பத்தையே
வாட்டி வதைத்துவிடும்”
என்றான் வியாபாரி
கலப்படமில்லாதது
கருணைமிகவுள்ளது
ஏமாற்று இல்லாதது
நிறை குறையில்லாதது
ஆள்பார்த்து செய்யாதது
பொய்யில்லாதது
ஒட்டாட்டமில்லாதது
சினந்து செய்யாதது
சீரானது இத்தனையும்
இதற்குண்டு
வியாபாரமோ
இதன் மறுபக்கம்
வங்கிகளும்
வங்கித் தொழிலாளர்களும்
வளமோடுதானே
வாழ்கின்றார்கள்
என்றான் வட்டிக்காரன்.

# மரத்தின் புலம்பல்

ஓ... மானிடனே!
நீயின்றி நான் வாழ்வேன்
நானின்றி நீ வாழ மாட்டாய்
என்பதை ஏன் அறிய மாட்டாய்
நீ சிறு இன்பம் பெற
என்னில் என்னென்னவோ செய்கிறாய்
ஆக்குகிறாய் சாம்பலும்
இன்னிலை தொடர்ந்தால்
ஒருநாள் நீயும் சாம்பலாவாய்
என்பதை அறியாயோ
சாதிக்கத்தான் பிறந்தோம்
சதிகாரர் உங்கள் கைபட்டு
சடுதியாய் அழிந்துதான் போகிறோம்
அழிவைப் பற்றி எமக்கு கவலையில்லை
அழிவதனால் நாங்கள்
புவியின் நலங்கள் கெடும்
எங்களை அழிக்க கோரக் கரம் நீட்டுவோரே
உருவாக்கவும் நேசக்கரம் நீட்டுங்கள்
மாதம் இருமுறை மழை பொழிய
புதுப்புது நதிகள் பாய்ந்தோட
குடிநீர் பஞ்சம் தீர்ந்திட
வறுமை நிலை ஒழிய
எளியவர் மகிழ்ந்திட
வலியவர் திருந்திட
கோட்டை கோபுரம் உயர்ந்திட
உயர்வினை பெற்றிட
ஒப்பிலா வாழ்வு கிடைத்திட
எங்களில் ஒருவரை
நீங்கள் அழித்தால்
ஒன்பதை உருவாக்கிடுங்கள்.

(கமநலம் 2007)



## ஆயுதம்


ஆயுதம் எடுத்தவர்கள்
ஆயுதத்தாலே
அழிவு என்பார்கள்
முள்ளிவாய்க்காலில்
எத்தனையோ பேர் அழிந்தார்கள்
அத்தனை பேரும்
ஆயுதமா எடுத்தார்கள்..!

## ஒன்று தான்

மகிழ்ச்சிக்கும் மது
கவலைக்கும் மது
சும்மா இருந்தாலும் மது
ஏன் இப்படி
என்றான் ஒருவன்
எல்லாமே
எனக்கு ஒன்றுதான்
என்றான் மற்றவன்

# வாழ்வு சிறக்கும்

நீர் நிலையில்
வீழ்ந்து விட்டால்
மூழ்கிடாது
கரையேற உயிர்
காக்க துடிக்கும்
விடாமுயற்சியை போல்
தரையில் காட்டு
உயர்வாய்
உன் வாழ்வு சிறக்கும்



# பார்ப்போம்

விலைமாதர் விடுதி என்றால்
கரும்பு தின்ன
கைக்கூலி
கொடுப்பார்கள்.
சொந்தமாய் வைத்திருந்து
கரும்பு தின்ன
கைக்கூலி
கேட்பார்கள்
பெண்களே முடிவு எடுங்கள்
கைக்கூலி (சீதனம்)
கொடுப்பதில்லை என்று
அப்போது ஆண்கள்
என்ன செய்கிறார்கள்
என்று பார்ப்போம்.



# மீள் பரிசீலனை செய்

பௌத்தம் பரவி
ஆல்போல் தழைத்து
அறுகு போல் வேரூன்றிய
எமதருமை திருநாட்டில்
என்ன நடக்கிறது
அரசியல் வேண்டாமென்று
அறுத்தெறிந்தாய்
அவ்வாழ்வை
உன் வழி நிற்போர்
உன் ஆடை அணிந்து
ஆட்சியில் அமர்ந்து
அட்டூழியம் செய்கின்றனர்
கப்பம், கொலை, களவு
கடத்தல் இன்னும்
அடக்கி ஆழ்தலும்
அதிகரித்துவிட்டன
புத்தனே பிறந்து வா உன்
போதனையை கொஞ்சம் மீள்
பரிசீலனை செய்

## முடியவில்லை

வாழ்த்தி வாழ்பவன்
வாழத்தெரியாதவனாம்
நல்லது செய்தால்
நாலு வார்த்தை
வாழ்த்தக் கூடாதா?
நல்லது செய்ய நினைத்தான்
நல்லதையே செய்தான்
நல்ல பெயர் மட்டுமில்லை
நிர்வாண ஊரில்
கச்சை கட்டியவன்
பயித்தியகாரன் என்பது போல
முள்ளில்லாத மீனுமில்லை
தப்பு செய்யாத மனிதனுமில்லை
நல்லது கெட்டது
பிரித்து பார்க்காது
நன்றாய் தலையாட்டினால்
நல்லவனாகலாம்
புரிந்து கொண்டான் அவன்
தலையாட்ட மட்டும்
முடியவில்லை அவனால்

## ஸ்டைல்

நான்கு சுவருக்குள்
ஒருவனுக்கு
ஒருத்தியென வாழாமல்
மறைத்து மறைத்து
மனம் போன போக்கில்
வாழ்ந்தால்
வந்தே தீரும்
நடுத்தெருவுக்கு
ஒருநாள்

## தரமுடியாதா

கொடுக்கிற தெய்வம்
கூரையை பிரித்து
கொடுக்கும் என்பர்
எங்களுக்கு இன்னும்
ஏன் கொடுக்கவில்லை
பிளேற்றை உடைக்க
பலம் இல்லையா?
ஓட்டை பிரிக்க தெரியாதா?
பிரிப்பதற்கு கூரை
இல்லை என்பதாலா?
கஷ்டப்பட்டு கல்வீடு
கட்டி விட்டேன்
கடன்தான் தீரவில்லை
பழைய பழமொழியை மாற்றி
கொடுக்கிற தெய்வம்
வீட்டுவாசல் வழியால்
வந்து தரமுடியாதா.

## போய்விடும்

இப்படி எனை பார்க்காதே
இப்படி பார்த்ததினால் தான்
என் இதயம் போச்சி
என் தூக்கம் போச்சி
இன்னும் என்னென்னவோ போச்சி
ஏக்கம் வந்தாச்சு
தொடர்ந்து பார்க்காதே
தொடர்ந்து பார்த்தால்
போய்விடும் மூச்சும்

# கரைவது எப்போதோ?

குச்சி தேடி கூடு கட்டிடும்
குருவி போல
பிச்சை சம்பளத்தில் மிச்சம் பிடித்து
வீடு கட்டி வாழ ஆசைப்பட்டு
கட்டினேன் கடனும்பட்டு
கட்டிய வீட்டினை முடிக்க முடியாமல்
அரசின் அபார விளம்பரத்தில்
அடிபட்டு உருண்டோடி
வீடமைப்பு அதிகார சபை நாடி
அதுக்கு இதுக்கென
ஆயிரக்கணக்கில் காசு கட்டி
அரச உத்தியோகத்தர் பிணை தேடி
ஆயிரத்துக்கு மேல் ஒப்பமிட்டு
ஒப்படைத்து ஒரு வருடமாச்சி
வாறது மாரி
வரி வரியாய் கட்டி
வடிவு பார்த்த சுவரெல்லாம்
கரையப்போகிறது மழையில்
கடன் தரும் அதிகாரிகள் மனம்
கரைவது எப்போதோ?
*(2013)*

## எழுதவில்லை

நினைத்தேன் கவிதை எழுத
நினைத்த கருவெல்லாம்
நிறையவே எழுதிவிட்டனர்
முயன்று பார்க்கிறேன்
முடியவில்லை ஒரு கவிதை எழுத
ஏனென்றால்
எல்லா சொற்களையும்
எப்படி எப்படியோ
எழுதிவிட்டார்கள்
எதை நான் எழுத
என்னவென்று எழுத
எல்லோரும் எழுதியதை
ஏன் நான் எழுத
எழுதவில்லை அதனால் கவிதை

## நேரம்

செத்தவங்க நடமாடும் நேரம்
ஐந்தாண்டுக்கொரு முறை வருகிறது
வாக்குச் சாவடியில்
வாக்குப் போடும்
நேரம் தான் அது

# விரதம்

விந்தையிலும் விந்தையப்பா
விரதம் எனும் பேராலே
தொந்தி பெருக்க உண்ணுகின்ற
தொகையான மக்கள் மலிந்துவிட்டார்
சிந்திக்க முடியாது இவர்கள்
சீரழிந்து சின்னாபின்னமாகி
மந்தைகளைப் போல்
மனம் போன போக்கில் போகாது
பசித்திருந்து விரதம் நோற்கில்
படிகின்ற கொழுப்பு மடியும்
புசித்திருந்து விரதம் நோற்கில்
புதுப் புது நோய்கள் சேரும்
கசிந்துருக வயிறும் காய்ந்திடில்
காலமெலா வாழ்வு நலமே
தருமம் செய்ய முடியாதவன்
தருமம் செய்வதே விரதம்
ஒருவேளையுண்டு இருவேளை உணவினை
ஒருவேளை இருவர்க்கு கொடுப்பதே
விரதம் என்று
தக்கோர் புகன்றனர் அன்று
பெருமனத்தோடு ஏற்று
பெருமை சேர்த்திடுவீர்
உடலுக்கும் விரதத்துக்கும்




## பாதை

நடந்ததுக்கும் வருந்தாதே
நடப்பதற்கும் வருந்தாதே
நடந்ததை பாடமாய் கொண்டு
நடப்பதற்கு பாதை அமைத்துக் கொள்.

## வாழ்க்கை

வாழ்க்கை என்பது
வாள் கையிலா?
வாழ்வு கைக்குமா?
வாழ்க்கை கையில்தானா?
வாழ்க்கை என்பது
வெறும் களிமண்
விரும்பியவர்
விரும்பிய வடிவத்தில்
விருத்தி கண்டு வாழலாம்
எல்லாம் அவரவர் கையில்

# ஒரு நாளா?

எங்கவீட்டு
பெண்களுக்கெல்லாம்
மாதத்தில் மூன்று நாள்
மறைவிடம்
உனக்குமட்டும்
ஒரு நாளா
நிலாப்பெண்ணே



# எப்படி நம்புவது

உலகில் எல்லா பாகத்திலும்
உயிர் போகிறது
உயிர் எடுக்கும் எமன்
அங்கெல்லாம்
ஒரே நேரத்தில் போகமுடியுமா?
கண்ணுக்கு தெரியாத எமன்
கண்ணுக்குத் தெரியாத உயிரை
எடுப்பது என்பதை
எப்படி நம்புவது

# பூமி

நின்றால் தட்டையானது
பறந்தால் உருண்டையானது
படுத்து கிடந்தால்
படுக்கையாகிறது
விதைத்தால் களனியாகிறது
விளையாட்டினால் திடலாகிறது
போராடினால் களமாகிறது
நடந்தால் பாதையாகிறது
தன்னம்பிக்கையும்
விடாமுயற்சியுமிருந்தால்
பொக்கிஷமாகிறது பூமி

# இலஞ்சம்

இலஞ்சம் வாங்கிய பாவத்தை
இறைவனுக்கு
இலஞ்சம் கொடுத்து
போக்கிக் கொண்டேன்.

## மாடு



பள்ளிப் பருவத்தில்
துள்ளிக் குதிக்கும்
இளம் மாடானேன்
காதல் பருவத்தில்
புல்வெளி மாடானேன்
கலியாணத்தின் பின்
வண்டியில் பூட்டிய
மாடானேன்

## நெருடல்

ஒருவன் தான் இறைவனென்று
ஒப்புக் கொள்பவர்கள்
ஆயிரம் வகை சிலை செய்து
ஆளுக்கொரு பெயர் வைத்து
ஆராதனை செய்வது தான்
இந்துவான என் சமயத்தில்
கொஞ்சம் நெருடல்

# அடுப்பு

அவர்கள் வீட்டில்
அடுப்பெரிந்து
எத்தனை நாள்
அடுப்புக்கு பாவம்
அவர்கள் வீட்டில்
எரிவாயு அடுப்பு
பாவனையில்



# எதிர்

அவன் எழ
அத்தனை உயிரினமும் எழுந்து
அத்தனை அலுவல்களும் முடித்து
அவன் போக
அத்தனை உயிரினமும் தூங்க போகும்
ஆனால்
அ்.றிணை உயர்திணை
திருட்டு கூட்டத்துக்கு மட்டும்
அவன்தான் எதிரி
அவன்தான் சூரியன்

# வீட்டில்

"காற்று கறுப்பு பார்வை
திருநீறு போட்டு
நூலும் கட்டினால்
நன்றாய்ப் படித்து
நல்ல சித்தியும் பெறுவாள் மகள்
நாலாயிரம் ரூபா
செலவாகுமென்றார்" பூசாரி
பூசாரி சொன்னதை செய்தார் தந்தை
பரீட்சையில் சித்தி பெற்று
பல்கலைக்கழகம் சென்றாள் மகளும்
பாவம் பூசாரி மகளோ
பரீட்சையில் சித்தியின்றி
பரிதவிக்கின்றாள் வீட்டில்

# கவிதை

வேலை மினக்கெட்டு
விடிய விடிய இருந்து
சொல் தேடி புனைவது
மரபுக் கவிதை

பர பரப்பான
வேலைக்குள்ளும்
நேரமில்லா நேரத்தில்
புனைவது புதுக்கவிதை

# நரிக் கொம்பு

“நரிக் கொம்பு வாங்கலியோ சாமி
நரிக் கொம்பு
போகிற காரியம்
நன்மையில் முடியும் சாமி”
கூவிக்கொண்டே ஒரு
கூட்டத்தை நோக்கிச் சென்றவன்
விற்காமல் திரும்பி
என்னருகே வந்தான்
நீங்க வாங்குங்க சாமி
போகிற காரியம் முடியும் என்றான்
எவ்வளவோ நரிக்கொம்புகள்
உன்னிடம் இருந்தும்
நீ போன காரியம் முடியவில்லை
ஒரு கொம்பை வாங்கும்
என் காரியம்
எப்படி முடியுமென்றேன்
தலை குனிந்து அவன்
தடுமாறி சென்றான்
அவ்விடத்தை விட்டு.



## அறிவியல் கூறுவது

மூக்காலும் வாயாலும்
போய்வரும் காற்று
போய் வராவிட்டால்
பிணம்
இதிலேது
உயிர் ஆத்மா ஆவி
உருவமுமில்லை
தனியாகவுமில்லை
எல்லாம் காற்றே
அறிவியல் கூறுவதும்
இதைத்தானே

## பசி

ஏழை
வயிற்று பசிக்கு
சோறு தேடுகிறான்
பணக்காரன்
வயிறு பசிக்க
மருந்து தேடுகிறான்
ஏழை சோற்றுக்காக
காத்துக் கிடக்கிறான்
பணக்காரன் பசிக்காக
காத்துக் கிடக்கிறான்

## மது ஒழிப்பு தினம்

மதுவை மறைத்தும்
ஒழிக்கலாம்
மதுவை அதிகம்
குடித்தும் ஒழிக்கலாம்
தரையில் ஊற்றியும்
ஒழிக்கலாம்
மதுவை உற்பத்தி
செய்யாமலும் ஒழிக்கலாம்
இதை விடுத்து இன்று
மதுக்கடைகளை மூடுதலே
மது ஒழிப்பு தினம் என்கின்றனர்
மது ஒழிப்பு தினமல்ல இது
மது மறைத்தல் தினமென்று
மாற்றுதலே பொருந்தும்



## புரிந்து கொள்

மகிழ்ச்சி துக்கம்
எது வந்தாலும்
தொடராய் வரும்
என்பதை காட்டிடும்
கடலலை
விடாமுயற்சியையும்
காட்டுகிறது என்பதையும்
புரிந்து கொள்

## கற்புக்கரசு

உங்களோடு
நான் கதைப்பதை
யாரும் கண்டுவிட்டால்
தப்பாக நினைப்பார்கள்
நீங்கள் போங்கள்
நான் "கிளப்பு"க்கு போகிறேன்
என்றாள் அவள்

## தீர்திருத்த வாதி

மதிய போசனத்தின் பின்
உரையாடிய ஒருவர்
நம்மவர் பகலில்
நித்திரை செய்வதாலே
நம் நாடு
பின்னோக்குகின்றது
என்றவர் எழுந்து
போய் வா தம்பி
தூக்கம் வருகிறது என்றார்

## வெளிச்சம்

வெளிச்சம் இல்லா அறையில்
சாட்சி சந்தடி இல்லாத
வாய் பேசா விளையாட்டு
பலரும் பார்த்து
வியக்கும் வண்ணம்
வெளிச்சத்துக்கு
வரும் சில நாளில்
வயிறு பெருக்க

## திரும்பிப் பாராதோ அரசு


கஷ்டப்பட்டு காடுவெட்டி
களனியாக்கி
விவசாயம் செய்துவந்த
விவசாயி
தன்மகன் ஆற்றல் கண்டு
தன் விளைநிலத்தோடு வீட்டையும்
ஈடு வைத்து
ஈட்டிய பணத்தில்
படிக்க வைத்து
பட்டமும் பெறவைத்தான்
ஆண்டு பல சென்றது
ஆனதொழில் எதுமில்லை
அறுதியானது வீடும் வயலும்
அல்லலுறுகின்றனர்
தெருவில் நின்று. இவர்களை
திரும்பிப் பாராதோ அரசு

## தேர்தல் முடிந்த நாள்

சாதி சமயம் வயது வித்தியாசமின்றி
சிரித்து அழுது சிரம் தாழ்த்தி
மக்களையும் குழப்பி தாங்களும் குழம்பி
மக்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி
மலையை மடுவாக்குவோம்
மடுவை மலையாக்குவோம்
வேலையில்லா பிரச்சினையை தீர்ப்போம்
வேதனைப் படவேண்டாம் என்றும்
அழுதழுது சிந்திய மூக்கோடு திரிந்த
அனைத்துக் குழந்தைகளையும்
அள்ளிக் கொஞ்சி
குப்பமேட்டிலும் தாவாரத்திலும்
குந்தி சம்மாளம் போட்டிருந்து
குடும்ப நலம் விசாரித்து
குளு குளு வார்த்தை பேசி
பாராளுமன்ற பதவிக்குக் போக
பரதவித்துழன்று வாக்கு கேட்ட
அனைவருக்கும் இன்றுடன் ஓய்வு
அதுதான் தேர்தல் முடிந்த நாள்!

## நம்பிக்கை

தம்பி
உனை நம்பி
இப்போ
எண்ணுகிறேன்
கம்பி



## பௌத்த மதம்

பிறர் மனம் நோக நடப்பதும்,
பிறமத தலங்கள் அழிப்பதும்,
சாணுக்கொரு
புத்தர் சிலை வைப்பதும்,
புனித சின்னங்களை தரிசிப்பதும்,
அன்னதான சாலைகள்
அமைப்பதும்
பௌத்த மதமாகிவிடாது!
கௌதம புத்தர்
கை விசிறி
எதை சுட்டி இருந்ததோ
அதை சுட்டி நடப்பதே
பௌத்த மதமாகும்.

## சதி

இனக்கலவரம்
ஏன் நடக்கிறது
ஆழ்பவர்களும்
ஆழத்துடிப்பவர்களும்
ஆக்கி விடும்
சதியால்

## தாயை மட்டும்.

காணி, பூமி
கணக்கு பார்த்தேன்
அண்ணன், தம்பியை
இழந்தேன்.
காசு, பணம்
கணக்கு பார்த்தேன்
நண்பர், சுற்றங்களை
இழந்தேன்.
நகை, நட்டை
கணக்கு பார்த்தேன்
மனைவி மக்களை
இழந்தேன்.
என்ன தான்
கணக்கு பார்த்தாலும்
இழக்கவில்லை
தாயை மட்டும்.



## பத்திரகாளி

காளி, வைரவர் என்றால்
கள், கஞ்சா, சாராயம்
வைத்து படைத்திடுவாள் மனைவி
அதை
கணவன் கொஞ்சம் சுவைத்துவிட்டால்
பத்திரகாளியாய்
மாறிவிடுவாள்.

## அதிகாரி

"அனர்த்தம் நிகழ போகிறதென்று
அந்தப்பகுதி மக்களுக்கு
ஏன் அறிவிக்கவல்லை
என்ன செய்தீர்கள் நீங்கள்"
என்றார் தலைவர்
"என்ன செய்தோமோ நாங்கள்
முதல் வேலையாய்
மின்சாரத்தை நிறுத்தினோம்
வானொலி கானொளி மூலம்
ஒலி ஒளி பரப்பினோம்
வேறென்ன செய்வது நாங்கள்"
என்றார்
மின்சாரம் இன்றி
இவைகள் இயங்காது
இந்தக்காலத்தில் என்பதை
அறியாத அதிகாரி.

## மனிதா நினை

மதம் வளர்க்க
மதம் கொண்ட மனிதா
ஆன்மீக வளர்க்க
ஆட்டம் போடும் மனிதா
ஆட்சி பிடித்திட
அரக்கனாய் மாறும் மனிதா
இனம் காக்கவென
இன்னுயிர்களை அழித்திடும் மனிதா
மனிதம் வளர்க்க
மனிதா நீ நினை

## சற்று சிந்திப்பாயே

கஷ்டப்பட்டு உழைத்தாலும்
கஞ்சிக்கும் காணாது
கடனும் தீரவில்லையென்று
வட்டிக்கு வீட்டை அடமானம் வைத்து
வெளிநாடு செல்ல வைத்து
வேகா வெயிலில்
வியர்வை சிந்தி
உழைத்தனுப்பும் பணத்தில்
காளையர்க்கு பகிர்ந்தளித்து
களியாட்டம் போடுகின்ற
பெண்ணே
கட்டியவன் வந்தால்
உன்கதி என்னாகும்
சற்று சிந்திப்பாயே!



## வாழ் மனிதா

கண்ணுக்குத் தெரியாத
கடவுளுக்கும்
கருத்து புரியாத
அர்ச்சனைக்கும்
இல்லாத உலகிற்கு
வழி தேடுதலுக்கும்
ஏங்கி தவிப்பதை விடுத்து
மறைத்து வைத்துள்ள
மனிதத்தை
வெளிக் கொணர்ந்து
வாழ் மனிதா

## கனவு

நிறைவேற்ற முடியாததை
நிறைவேற்றுவதும்
அனுபவிக்க முடியாததை
அனுபவிப்பதும் தான்
கனவு.

## என்னென்று சொல்வதோ

இறைவன் முன்
எவ்வுயிரும் சமன்
என்றால்
அவன் படைப்பில் உருவான
ஆடு மாடு கோழிகளை வெட்டி
பலி கொடுப்பது ஏன்?
இச்செயல்
பெற்றவர்களுக்கு முன்
பிள்ளைகளை
பலி கொடுப்பதற்கு
சமனன்றோ.
விலை கொடுத்து இறையருள்
வாங்க முடியாதென்கின்றனர்
நேர்த்திக்கடன்
காணிக்கையெனும் பெயரில்
விலைதானே கொடுக்கின்றனர்
இவர்களை என்னென்று
சொல்வதோ?



# இணக்க சபை தலைவர்

இவருக்கு
நான்கு பிள்ளைகள்
நான்கும் நாலு கோணம்
மனைவி ஒரு கோணம்
அண்ணன் தம்பி சகோதரங்களுக்குள்
ஆதன சண்டையால்
நீதி மன்றத்தில் வழக்கு
இவர் இல்லத்தில்
எத்தனையோ பிணக்கு
இத்தனைக்கும்
அரசினால் நியமிக்கப்பட்ட
இணக்க சபை
தலைவர் இவர்.

# மனம் வெதும்புகிறாள்

அதிகாலை எழுந்து
அத்தனை வீட்டு வேலைகளும் செய்து
அலுவலகம் சென்று
அலுத்து களைத்து வந்து
மீண்டும் வீட்டு வேலைகள் முடித்து
படுக்கைக்கு போக
பத்து பதினொரு மணியாகும்
அப்படியானவளை
அரியண்டப்படுத்தக் கூடாது என்று
அமைதியாய் படுத்திருப்பான் கணவன்
மாரடித்து வேலை செய்து
மன உழைச்சலோடு
படுத்திருக்கேன் நான்
மரக்கட்டை போல்
படுத்திருக்கானே
என்னை கொஞ்சம்
வாரி அணைத்து
மகிழ்விக்க தோணலையே என்று
மனம் வெதும்புகிறாள் மனைவி.

## விலை பேசுவோர்

கண் மூடி குடித்திடும்
கலப்படமான கள் சாராயத்துக்கு
கடுகளவேனும் மனம் கோணாது
கேட்டவிலை கொடுத்து
அதற்கு "டிப்ஸ்"ம் கொடுத்து
தனியாக குடித்து
தலைக்கேற வெறி எடுப்போர்
விழி மூடாது
விலா எலும்பு கழண்டு விழ
விடிய விடிய
வீசிவரும்
குடும்பத்தோடு உண்டு மகிழும்
கலப்படமில்லாத
மீனினத்துக்கு
விலைபேசி நேரத்தை
வீணடிக்கும் வீணர்களே
கொஞ்சம் மீனவர்
குல வாழ்க்கையையும்
சற்று சிந்தியுங்கள்.



## சமாதானம்

இன மதபேதமின்றி
இறைவரி எல்லோர்க்கும் சமம்
அபிவிருத்தியென
அளவிடும் போது பாகுபாடு
ஒழிந்தால் இங்கு
ஒளிரும் சமாதானம்.

## கேள்

இறைவா எத்தனையோ கேட்டேன்
இற்றைவரை தரவில்லை
எனக்கு இனி எதுவும் வேண்டாம்
அவல், கடலை, மோதகம்
மா, பலா, வாழை
பொங்கல் என்று
மரபு உணவு உண்டு
மரத்துப் போயிருக்கும் நா
புதிதாய் ஏதும் கேள்,
முன் வந்து
முடிந்தவரை
முடித்து வைக்கிறேன்.

## ஆளுமை

அன்பான மக்களே
அன்று
நீரும் மீனுமாக இருந்தீரே
அறிவுள்ளோன் ஆண்டதினாலா?
இன்று
நீரும் நெருப்புமாக இருக்கிறீரே
அறிவற்றோன் ஆழ்வதினாலா?

# மாறிப்போச்சி



சுற்றுச் சூழல்
சுத்தம் கருதி
அதிக புகை கக்கும்
அத்தனை வாகனத்தையும்
தடை செய்திட
ஆண்டுக்கொரு முறை
புகை பரிசோதிக்கும்
புதுச் சட்டம் வந்தது
வாகன திருத்துனர்க்கும் நல்ல
வருமானம் கிடைத்தது
ஒரு வருடம்
ஒழுங்காய்ப் போனது
இதனுள்ளும் இலஞ்சம்
இறங்கி விளையாட
வீதியெல்லாம் இன்று
புகை மண்டலமாய்
மாறிப்போச்சி
வாகன திருத்துனர்க்கும்
வருமானம் போச்சி
வளமாக புற்று நோயும்
வந்தமர மனித உடல்
தளமாக மாறிப் போச்சி.

## மரணம் மகிழ்ச்சியானது

தேதியை குறித்துக் கொள்ளாத மரணம்
மனிதனை அழச் செய்கிறது
இந்த உலகில்
மரணமும், வரிவிதிப்புக்களுமே உண்மை
மனிதன் வாழ்நாளில்
மூன்றிலொரு பங்கு
நித்திரையெனும் தற்காலிக
மரணத்திலே தான் வாழ்கிறான்
நிரந்தர நித்திரைக்கு
இது ஒரு ஒத்திகை
மனிதன்
இதை உணர மறுக்கிறான்
உணர்ந்தால்
மரணமென்பது மகிழ்ச்சியானது
வாழ்க்கையின் துன்பங்களை
சகித்துக்கொள்ள வேண்டும்
என்பதற்காவே இறைவன்
மரணத்தின்
மகிழ்ச்சியை மறைத்துள்ளான்.

## பரிகாரம்

அடித்தாலும் அடித்தது சுனாமி
அதையொட்டி வந்தது நிறுவனங்கள்
உருவானாலும் உருவாகிற்று
உயர் மாடி வீடுகள்
பாதிக்கப்பட்டவர்க்கில்லை
பாதிப்புக்கு பரிகாரம் செய்தவர்க்கு

# என்னென்று கூறுவதோ

புரவலராய் புகழ்பெறுவென
புகன்றிட்ட இளையராசாவே
புலவரெல்லாம் புரவலராய்
புரண்டதை கண்டீரோ

“புலமையும் வறுமையும்
சேர்ந்தே இருக்கும்” என்று
பழமொழி பகர்கிறது
பழமொழி பொய்த்தால்
பழம்சோறு சுடும் என்பர்

அன்றிருந்த ஔவை போன்றோர்
யாசித்தே வாழ்ந்தார்கள்
சரித்திரம் சாற்றுகிறது
அவர்களுக்கெல்லாம்
யார் சொல்லி தமிழை
அன்றெல்லாம் வளர்த்தார்கள்

பொன்னாடை பூமாலை
போர்த்த வேண்டாம் என்று
எழுதியவர்க்கு வயது
எண்பதுக்கு மேலிருக்கும்
களுதாவளை மண்

கத்தரிக்கு உகந்தது தான்
அமிர்தகழி மண் சகதிதான்
அது ஏழு நதியல்ல
எழுபது சுனை இருக்கும்
அத்தனையும் உவர் நீர்
அதிக மீன் வளம்
மீனவர் தான் அதிகம்

சகதியில் கத்தரி நட்டு
உவர் நீரூற்றினால்
உருப்பட முடியுமா?
மண்ணை அறியாமல்
மண்ணில் வாழ்வோர்
தொழில் அறியாமல்
மதியுரை உரைக்கலாமா?

புரவலர் எல்லாம் அன்று
புலவர்க்கு பொற்கிழியும்
வழங்கித்தான் கௌரவித்தார்கள்
அதைத்தானே இவரும் கேட்டார்
பொன்னாடையும் பூமாலையும்
புதையல் எடுத்தா
பேரவை வாங்கியது
என்னை அழைத்தீர்
எனக்கு அப்படி செய்யுங்கள்
என்றது அவர்தப்பா?

அன்னை தமிழை
எழுந்து நடக்க முடியாத போதும்
எழுதுகிறாரே என்று
பெருமை கொள்வதைவிட்டு
பெருமைக்காய் பேனா
பிடித்த உமை
என்னென்று கூறுவதோ?

(வீரகேசரி 2015 பதில் கவிதை)

## குழி

இன்முகம் காட்டி
இளித்து இளித்து குழைவோரும்
அன்பாய் பேசிப் பேசி
அடியால் அறுத்திடுவோரும்
ஆண்டவன் பெயரை
அடிக்கடி அலறிடுவோம்
கண்ணியம் காப்பதாய் கூறி
கண்டதை விண்டிடமறுப்போரும்
உண்மையை மறைத்து
உயர்ந்திட நினைப்போரும்
உண்மையாய் புதைந்திட
ஆழக்குழி பறித்தோரே

## சூரியன்

உயிர் ஓட்டங்கள் ஆட்டங்கள்
பயிர் தோட்டங்கள் வாட்டங்கள்
ஞாயிறு ஒன்றதனின் நாட்டங்கள்
ஞால மீதினில் நடந்திடும் உண்மைகள்

# பசி



திறமான கல்வி அறிவு இருந்த போதும்
திருடுவதும் பொய்யுரைப்பதுவும்
திருகு தாளங்கள் பல செய்வதுவும்
மத்திய கிழக்கிற்கு சில பெண்கள்
மனமின்றி பறப்பதுவும்
கற்பை விலைபேசி
கடைப்பொருளாய் விற்பதுவும்
உழைக்க முடியாமல் உழல்வதுவும்
உருவமில்லா "பசி"யால் தானே.

# வெட்டு

உன்முகத்தில்
இத்தனை வெட்டு
வெட்டியது யார்
வேறு யாருமில்லை
உடைந்திருக்கும்
உன் மூக்குக் கண்ணாடி தான்



## பூப்பு நீராட்டு விழா

முற்றம் தன்னில்
முறையாய் பந்தலிட்டு
கற்றவர் அற்றவர் பேதமின்றி
சுற்றம் சூழ
உற்றவரோடு உறவாடி மகிழ்வது
கட்டுக் காவலெதுவுமின்றி
கட்டாக் காலிகளாய்
தொட்டுத் தொட்டு விளையாடிய
துடுப்படக்கி மட்டுப்படுத்தி
போடுமிந்த சட்டத்துக்கு
பேர் பூப்பு நீராட்டு விழா.

## ஒற்றைக்கால்

விமான வீச்சில் வீடு போக
சுற்றிவளைப்பில் சுற்றம் போக
மிதி வெடியில் ஒரு கால் போக
உள்ள உயிர் காக்க
ஓடுகிறார்
ஒற்றைக்காலில்

## விவாகரத்து

விவாகரத்து கேட்டான் புருசன்
வேறொருத்தரோடு மனைவிக்கு தொடர்பென்று
ஐந்து பேருடன் தொடர்பு வைத்தவளுக்கு
ஆலயம் ஆராதனை அபிஷேகம்
தெரியாமல் வைப்போர்க்கு
தலைகால் புரியாத தாலாட்டு சீராட்டு
தெரிந்ததினால் எனக்கு விவாகரத்தா
தேம்பி தேம்பி புலம்பினாள் அவள்

## என்ன கோபம்

அன்றொருதரம்
அழிந்தது இலங்கை
அயல் நாடால் தானென
இயம்பியது இராமாயணம்
இன்றழிந்ததற்கும்
இதே நாடு தான் காரணம்
என்ன கோபம் இந்நாட்டுக்கு
எம் நாட்டோடு.



## எலும்புக்கூடு

தடுமாறித் தவிக்கும்
தமிழர் தாயக பூமியில் இன்று
மடு வெட்டிப் பார்த்தாலும்
மடுவை எட்டிப்பார்த்தாலும்
மலிவாய் கிடைக்கும்
புதை பொருள்
அண்மையில் வெளிவந்த
அரசின் அறிக்கைப்படி
காணாமல் போனோர்
கதியெல்லாம் இதுதானாம்

## முதியோர் இல்லம்

அன்பும் ஆதரவும்
அனுபவமும் ஆற்றலும்
அமுக்கப்பட்ட
அறிவுக் களஞ்சியம்

## தூற்றுவர்

புலயரைப் போல்
புயலெனமாறி
புழுக்க வேலை செய்திட்டாலும்
புகழாரம் கொடுப்பார் யாருமில்லை
புழுதிவாரி துாற்றுவாரேயுண்டு

## கும்பராசி

கும்பராசிக்காரர்களுக்கு
குதுகலமான வாரம்
கொட்டிக்குவியும் பணம்
கொடுக்கல் வாங்கலோடு
உடல்நிலையும் நன்றாயிருக்கும்
உங்கள் தந்தைக்கு நோய்
அதிகரித்து காணப்படுமென்று
அந்த பத்திரிகையில்
ராசிப்பலன் எனும் பகுதியில்
காணப்பட்டது.
தந்தை கடன் தொல்லையால்
தலைமறைவு
தாயாரோ தலைவிரி கோலத்துடன்
தந்தையை தேடுகிறார்
நானோ சுகவீனமுற்ற
நிலையில் வைத்தியசாலையில்
இதனிடையே
நானும் தந்தையும்
கும்பராசி தான்.

# இறுமாப்பு

மேல் உலகில் நரகத்துக்கும்
மேதகு சொர்க்கத்துக்கும்
பொதுச் சுவரொன்று அமைப்பதில்
போட்டி ஏற்பட்டது
போட்டி முடிவின்றி
போயிற்று நீதிமன்றம்
நல்லதாய் போய்விட்டதென்று
நரகலோகத்தினர்
கொண்டாடி மகிழ்ந்தனர்
எங்கள் பக்கம் தான்
எல்லா சட்டதரணிகளும்
இருக்கிறார்களென்ற
இறுமாப்பில்

# வேண்டாம்

வீட்டுக்கு வந்தார்
விஷேட விருந்தினர் ஒருவர்
சுகதுக்க விசாரணைகள்
சுமூகமாக முடிந்ததும்
வீட்டுக்காரர் விருந்தாளியிடம்
தேனீர் குடிப்போமா?
தேவையில்லை என்றார்
இளநீர் குடிப்போமா?
இல்லை என்றார்
சோடா குடிப்போமா? இல்லையென்று
சொல்லாமல் சொன்னார்

சோடாவோடு...மது... கொஞ்சம்
சோடா வேண்டாம் வேண்டாம்
சொன்னார் சத்தமாய் விருந்தாளி



# முகத்தில் கரி

செய்யமுடியா வேலையை
செய்கிறேனென்று
செய்கூலியாய் லஞ்சம் வாங்கி
செய்யாது விட்டு ஏமாற்றிய
செயலின் கதை கூறவா?

பெண்டிற்கு பெறுமாதம்
பிள்ளைக்கு பித்தசிலேற்பனம்
பெற்றவர்க்கு பெருவருத்தம்
கடன் வாங்கி கொடுக்காது
கை கழுவி ஏமாற்றிய
கதையை கூறவா?

ஆண்டவனின் பெயரை சொல்லி
அன்னதானம் கொடுக்க
அமைத்திட நீர் பந்தலென்று
வரி அறவிட்டு
வயிறு நிறைய குடித்து
ஏமாற்றிய கதை கூறவா?

காதல் வலை வீசி
கைப்பிடிப்பேனென்று
கன்னியர் கற்பை உறிஞ்சி
கைவிட்டு ஏமாற்றிய கதை கூறவா?

வெளிநாடனுப்புகிறேனென்று
வீடு வளவு
விற்ற பணத்தை
வாங்கி ஏப்பமிட்டு
ஏமாற்றிய கதை கூறவா?

காலமெலாம் வைத்து
காப்பாற்றுவேனென்று
கைக்கூலியாய் சீதனம் வாங்கி
கட்டிய மனைவியை தெருவிலே
கைவிட்டு ஏமாற்றிய கதை கூறவா?

ஏன் இந்த தடுமாற்றம்
எல்லாம் என் கதைதான்
எது வேண்டும் கூறுங்கள்
ஏமாற்றாமல்
கூறுவேனென்றவனைப் பார்த்து
ஆற்றிலே பேத்தை கழிவு
ஊரிலே நீ கழிவென்று
முகத்திலே கரியை பூசினர் அவன்
முன்னிருந்தோர்

# நானுமொருவன்

அறிவாளியென
அரற்றிக் கொண்டிருக்கும்
அறிவிலிகளுக்குள்
அறிவைத்தேடும்
அற்ப ஜீவிகளுக்குள் நானுமொருவன்

சண்டை சச்சரவுகளை
சம்பந்தம் சம்பந்தமில்லாமல்
உரமிட்டு வளர்த்துக் கொண்டிருக்கும்
உண்மையில்லா இவ்வுலகில்
சமாதானம் தேடும்
சக ஜீவிகளுக்குள் நானுமொருவன்

புதை குளிக்குள்
புதைந்து போன
நீதி நியாயங்களை
நிலத்தில் தேடும்
சக மனிதருக்குள்
சம்பந்தமுடை நானுமொருவன்

அநீதிகள் அழிந்து நீதிகள் நிலைக்க
அனுதினமும் ஆண்டவனை
ஆராதிக்கின்ற
அற்ப மனிதருக்குள் நானுமொருவன்

நிருவாக சேவையில்
நியாயங்களை மறைத்து விட்ட
நிருவாகிகள் நிலையாமை வேண்டுமென
நின்று கோசமிடுவோரில் நானுமொருவன்

# என்றும் உமை மறவோம்

கல்வி, மருத்துவம், சமுதாயம், புனரமைப்பு பணியோடு
நல்விருதுகளும் உலகளாவிய ரீதியில் வழங்கிடும்
வல்ல இயக்கமாம் இராமகிருஷ்ண மிஷனில் இணைந்து
சொல்ல முடியா சேவை செய்த சுவாமி ஸ்ரீமத் ஜீவானந்த ஜீயே

அறநெறி ஓங்கிடில் ஆன்மீகம் ஓங்குமென்றே
பறந்து பறந்து பல நாடு சென்று படித்திங்கு வந்து
அறநெறி பாடசாலைகளமைத்து அதற்கான உதவிகளையம்
சிறந்த முறையில் செய்துயர்தோரே ஏன் மறைந்தனையோ

பேர் சொன்னால் நாவினிக்கும் சுவாமி ஸ்ரீமத் ஜீவானந்த ஜீயே
கூரறிவுடை இராமகிருஷ்ண பரமாத்மா அடியொற்றி யாவற்றிலும்
நேர் நின்று சேவையாற்றி எடுத்த செயலனைத்திலும்
சோர்வின்றி செயல்படுபவரே சோர்ந்துதான் போனதேனோ

கற்றவர் என்ற கர்வம்தனை போக்கி இங்கு
உற்ற பொருளெல்லாம் உலகோர்க்கீந்து
பற்றெல்லாம் விட்டு ஆன்மீகப் பற்றோடு வாழ்ந்து
சுற்றமும் மற்றோரும் சூழ்ந்து நிற்க சுடரானீரே

விதவிதமாய் பதவி பெற்று விண்முட்ட பொருள் பெற்று
இதமான வாழ்வு வாழ்ந்திட இப்புவியில் இடமிருந்தும்
நிதமில்லை இவையெல்லாம் என்றே வாழ்ந்து காட்டி
இதமுறும் இறைபணிக்காய் தமை தந்தீர்

பணிந்தவர் பாவம் போக்கிட பாரினில்
துணிந்தே இறையடி தஞ்சமென புகுந்து
அணிந்த உடை இன்னும் எம் கண்ணுள்ளிருக்க
தணிந்து போனீரே, தகுமோ இது தக்கோனே

அல்லும் பகலும் அயராது அவன் அருளை
நல்ல முறையில் நாமெல்லாம் பெற்று இப்புவியில்
வெல்லும் வழி காட்டி எமக்கு வெற்றுடலையும்
சொல்லொனா துயரையுமீந்து விண்ணகம் புகுந்தீரே

ஆயிரமாயிரம் பேர்கள் உம் அருஞ்சேவை குறித்து
பாயிரம் பாயிரமாய் பாடிக் குவிந்தாலும் உங்கள்
தாயினு மேலான தங்கள் குணச்சிறப்பினை பாடித்தான்
ஓய்ந்திட முடியுமோ? உங்கள் குணம்தான் குணமே சுவாமி

கண்டவரெல்லாம் கைகூப்பி வணங்கிட இறை
தொண்டரெல்லாம் போற்றிடும் தலைவனாகி தங்களை
அண்டுபவரெல்லோரையும் தமதன்பால் பேணி
தொண்டு பல செய்தவரே என்றும் உமை நாம் மறவோம்

(சுவாமி ஸ்ரீமத் ஜீவானந்த ஜீயின் மறைவின்போது பாடிய இரங்கற்பா)

# சமாதான பாசறை

ஏன் இந்த யுத்தம், உயிரிழப்பு
ஏன் இந்த சொத்திழப்பு, அல்லோலகல்லோலம்
ஏன் இந்த அச்ச உணர்வு, அகதி வாழ்க்கை
கோட்டை நிகர் வீடெல்லாம்
கூடாரமாய் மாறியதேன், மாறுவதேன்
தெரியவில்லை தெரிகிறது
தெரிகிறது தெரியவில்லை
அதிகார வெறியா?
ஆதிக்க வெறியா? தெரியவில்லை
மனிதன் மனிதனாக வாழ்ந்தால்
மனிதம் மதிக்கப்படும்
மனித மிருகம் தலை கெட்டோடும்
மனிதன் மனிதனாக வாழ
மனிதன் என்ன செய்ய வேண்டும்
அன்புக்கு, அறிவுக்கு முதலிடம்
உண்மைக்கு, நேர்மைக்கு முதலிடம்
அளிப்பதே மனிதமாகும்
பசி பட்டினியால் மக்களை வாட்டி
பசுமை நிறைந்த மண்ணை
பாலைவனமாய் மாற்றி
எதைத்தான் கண்டீர் எம்மவரே
ஆமி புலியாட்டம்
ஆரம்பித்த நாள் முதலாய்
அழிந்ததும் அனாதையாய்
அகதியாய் ஆக்கப்பட்டதும்
அப்பாவிகளான யாதுமறியாதவரன்றோ
யுத்தம் வேண்டாம்

குண்டு மழை வெடிச் சத்தம் வேண்டாம்
சுற்றி வளைத்து தேடுதல் வேண்டாம்
சிறைக்கூடம் நிறைய வேண்டாம்
சித்திரவதை வேண்டாம்
சிறுவர்கள் நலன் பாதிக்க வேண்டாம்
விதவைகள் வேண்டாம்
விழிநீர் ஆறும் ஓட வேண்டாம்
வேண்டாம் வேண்டாம் என்றால்
வேண்டுவதுதான் என்ன
வேண்டுவதெல்லாம்
அன்புக்கும் அறிவுக்கும்
உண்மைக்கும் நேர்மைக்கும்
ஒளிவு மறைவின்றி
முதலிடம் வேண்டும்
முதலிடம் கொடுத்திடில்
முதலில் கூறிய அத்தனையும்
ஒரு நொடியில்
ஓடி ஒழியும்
சமாதான ஒளியும் வீசும்
"ஏழை அழுத கண்ணீர்
கூரிய வாளை யொக்கும்"
இது புரியாதோர்
கண்ணீர் வாளாகு முன்
அவல ஒலி மறைய
அன்பு மொழி ஒலிக்க
நீ வீரனா?
நான் வீரனா? என்ற
அறைகூவல் விடுத்து
போர்த்தவம் கலைத்து
போதல் வேண்டும்
சமாதான பாசறைக்கு
(2008)

# அனுப்பும் போது

பல்கலைக்கழக சிரேஸ்ர மாணவர்களே
பகிடி வதையெனும் பேரில் நடாத்தும்
பல மோசமான செயல்பாடுகளால்
பரிதவித்துப்போகும் பெற்றோர் நிலை
புரியாது உங்களுக்கின்று
புரியும் நீங்களும் பெற்றோராகி
பல்கலைக்கழகத்துக்கு பிள்ளைகளை
படிக்க அனுப்பும் போது

# செல்லப் பொண்டாட்டி

வீட்டுச்செலவு வெளிச்செலவு
விஷேட செலவுகளனைத்தும்
வருமானத்தை விஞ்சிவிட்டாலும்
வட்டிக்கேனும் வாங்கி
தங்கு தடையின்றி
தடபுடலாய் செய்திடுவான் கணவன்
அப்போதெல்லாம்
அதைப்பற்றி கேளாது
எப்போதாவது ஒரு நாள்
என்னிடம் பணமில்லையென்றால்
வந்த பணமெல்லாம் எங்கேயென்று
வரிந்து கட்டியெழுவாள்
வாய் சண்டைக்கு
செலவுக்கணக்கு பார்க்காத அவன்
செல்லப் பொண்டாட்டி.



## நிறுத்தியதால்

அன்று
கூட்டாளிகள் அதிகம்
வீட்டிலிருக்க நேரமில்லை
நினைத்ததை நினைத்த
நேரத்தில் செய்து முடித்தேன்
பணத்திற்கு பஞ்சமில்லை
இன்று
கூட்டாளிகளும் இல்லை
வீட்டிலே தான் இருக்கின்றேன்
எந்த வேலையும் முடியுதில்லை
பணத்திற்கும் பஞ்சம்தான்
மது குடிப்பதை நிறுத்தியதால்

## எக்கவுண்டன்

கத்தி காட்டி
திருடுவது ஒரு கூட்டம்
எழுதிக் காட்டி
திருடுவது இன்னொரு கூட்டம்
கத்தி காட்டியவன்
கள்வனாவான்
எழுதிக் காட்டியவன்
"எக்கவுண்டனா"வான்

## வயிற்றுவலி

மருந்து பல கொடுத்தும்
மனைவியின் வயிற்றுவலி
நின்ற பாடில்லை
நாடினார் மந்திரவாதியை
வில்லில் பாக்கு வெட்டி போட்டு
விரிவாக சொன்னார் குறிபார்த்து
செய்வினையால் வந்தவினை
செய்து கழித்திட வேண்டும்
"சம்மதமா" என்றார் மந்திரவாதி
"சரி'யென்றார் சென்றவர்
"கறுப்பு சேவல் கோழி
கள்ளு சாராயம்
பட்டு வேட்டி பல வகைப் பொருட்கள்
பட்டியல் நீண்டது
வாங்கி வையுங்கள் நாளை வருகிறேன்
'வாட்" பார்க்க போகவேணும்
வைத்தியசாலையில் மனைவி
வைத்து நான்கு நாளாகிறது
வயிற்றுவலி இன்னும்
நின்றபாடில்லை" என்றார்.




## தலைக்கவசம்

தட்டு தடு மாறியேனும்
தலைக் கவசத்தை
மறந்துவிட்டு செல்லாதீர்
மறுபடியும் திரும்பிவந்து
எடுக்க முடியாமல்
போய்விடும்

# உணராதோ அரசு

நான்கு ஆண்டுகள்
நல்ல செலவு செய்து
பல்கலையும் கற்று
பட்டம் பெற்றவர்களுக்கு
பத்தாயிரம் சம்பளத்தில்
பதவிப் பயிற்சி
பாடசாலையில் படித்து
பாடம் மூன்றில்
சாதாரண தரத்தில்
சித்தியடைந்தவர்களுக்கு
நாற்பதினாயிரம் சம்பளத்தில்
நிரந்தர தொழில்
ஏனிந்த வேறுபாடு
இதை உணராதோ அரசு
*(2008)*



# புரியாத புதிர்

பாண்டிய மன்னன் கட்டளையால்
பாதுகாவலர் கொன்றனர் கோவலனை
குற்றம் நிரூபிக்கப்பட்டது
மன்னன் மாண்டான்
மனைவி அரசியும் மாண்டாள்
மதுரையை எரித்தாள் கண்ணகி
மதுரையும் மக்களும்
என்ன தவறு செய்தனர் கண்ணகிக்கு
என்றுதான் இன்னும் புரியவில்லை
ஆனாலும் அவளுக்கு ஆலயம்
அதுதான் புரியாத புதிர்.

## மருந்து

வயிற்றுளைவு காரணமாக அரச
வைத்தியசாலை விடுதியில்
அனுமதிக்கப்பட்டார்
அந்த நோயாளி
இரவுக்கடமையில்
இருந்த தாதி
மாலை நேரம்
மருந்து கொடுத்துவிட்டு
இரண்டு குளிசைகளை கொடுத்து
"இரவு பன்னிரெண்டு மணிக்கு
விழுங்குங்கள்" என்று
வினயமாகச் கூறி சென்றாள்.



## மண்குதிர்

நீ ஏன்
வெளியூரில்
திருமணம் செய்தாய்
எங்களூர் பெண்கள்
எங்களை
மண்குதிர் என்று
நினைத்து விட்டார்கள்



# மனக்கொதிப்பு

அவனும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
திண்ணம் திருமணமென்றெண்ணி
தினம் பார்வையெனும் நீரூற்றி
காலத்தால் அழியாத
காதல் பயிர் வளர்த்தனர்
அவர்களின் திரைமறைவுக் காதல்
அவளுடன் சேர்ந்தோர்க்கு தெரியப்போதல்
ஆயினும் தாய் தந்தையர்க்கு இருக்கிறது பொறுப்பு

அக்கா அத்தானுக்கில்லை விருப்பு
அவனை நாயினும் கேடாய் மதித்தார்கள்
அவமான சேற்றில் புதைத்தார்கள்
ஓயினும் வார்த்தை உள்ளம் ஓய்ந்திலர்
ஓயா உள்ளங்கள் குமுறி கொண்டிருந்தது
இரும்பு தானே அவர்கள் நெஞ்சம்
இவன் மீது ஏனிந்த வஞ்சம்
வரும்போது வாவென்று கொஞ்சம்
வரவேற்க தமிழ் சொல்லுக்கா பஞ்சம்
பஞ்சிக்கிணையடி வஞ்சிக்கொடி நெஞ்சில்
பள்ளி கொண்ட விதம் நினைக்கையிலே
அரண்டு துள்ளிக் குதித்து பார்க்கும் பார்வை
அள்ளி அருந்திட அதைவிட வேறென் தேவை
இடையிடையே அவர்கள் சந்திப்பு
இடைநிறுத்த எத்தனையோ பேர் தெண்டிப்பு
அவனுக்கு கொடுப்பார்களாம் மன்னிப்பு
அவளை செய்யாதிருந்தால் மணமுடிப்பு
முடியாது அவர்கள் முன்னிப்பு
முடிந்தே போகும் மணமுடிப்பு
என்பதே அவர்கள் உள்ள துடிப்பு
எத்தனையோ பேர் துலக்கினார்கள் துப்பு
இவர்களுக்கெல்லாம் கிடைத்தது வெறும் செப்பு
இவர்களுக்கு ஏனிந்த வெறுப்பு
இதுதான் அவர்களுக்கும் புரியாத புதிர்ப்பு
இச்செய்கை அவர்களுக்கு பெரும்பாதிப்பு
என்றாலும் மேலோங்கிறது சகிப்பு
முடியாவிட்டால் நிற்கும் உயிர்ப்பு
தீவிரக்காதல் முற்றிப் போச்சு
தினம் தேவை அவர்களுக்கு பேச்சு
இல்லையேல் திருமணம் இழப்போம் மூச்சு
இதுவே இருவர் மனக்கொதிப்பு
மனமொத்த இருவரை மணம் முடித்துவைப்பதே
மக்களை பெற்றவர் செய்உதவி

## அர்ச்சனையில்லை

பிரச்சனை ஒன்றென்ற
பிரச்சனையில்லையென்றால்
நாட்டில் காவல்துறை
நீதித்துறை தேவையில்லை
அதுமட்டுமல்ல ஆண்டவனுக்கும்
அர்ச்சனையில்லை

## உருமாறி போகிறது நாடு

கால் போத்தல் சாராயம்
விற்றவரை
கைது செய்தது
காவல்துறை
இரண்டு போத்தல் சாராயம்
இனாமாய் கொடுத்தார்
விட்டுவிட்டார்கள
வழக்கின்றி
அரசும் நல்லது
ஆட்சியும் நல்லது
அதிகாரத்தை
அமுல்படுத்துவோரின்
உண்மைதன்மை
உருமாறியதால் தான்
உருமாறி போகிறது நாடு



# எழுத்தாளன் நிலை

எழுத்தாற்றல் மிகவுண்டு
இறைவன் கொடுத்தவரம்
கதை கவிதையென
கருத்தாழமாய்
பத்திரிகை வானொலியென
பலவற்றுக்குமனுப்புவான்
எண்ணத்திலுதிப்பவற்றை
எழுதியும் வைத்திருந்த அவனுக்கு
புத்தகமாக்கிட
புது ஆசை பிறந்தது
பதிப்பகம் நாடினால்
பதிக்கும் செலவு
அறுபதினாயிரத்தை தாண்டுமென
அறுதியிட்டு கூறினர்

அவனும் வீட்டுக்குவந்து
அக்கம் பக்கத்தார் நகையோடு
இல்லாளின் தாலிக்கொடியும்
அடகுக் கடையேற
அச்சேறியது அவன் நூலும்
வெளியீட்டு விழா
விமரிசையாக நடந்தது
ஊராரும் வேற்று ஊராரும்
பிறந்த நாள் இறந்த நாள்
பூப்பு நீராட்டு பாராட்டு
வரவேற்பு என்றால்
வந்து குவிந்தார்கள்
கவிதை கேட்டு
கவிதைநூல்
வெளியீட்டுவிழாவென்றதும்
ஓடி ஒழிந்தனர்
ஊரைவிட்டு
எதிர்பார்த்த வருமானத்தில்
எள்ளளவும் வரவில்லை
புத்தககடைக்கு போட்ட
புத்தகங்களுக்கு தொங்கி தூங்கின
கடைகடையாய் ஏறி இறங்கினான்
அடகுக்கடை வட்டி மட்டும்
அசுர வேகத்தில் ஏறியது
அக்கம் பக்கத்தில்
இருக்க முடியவில்லை
அன்றாடம் நச்சரிப்பு
வீட்டுக்குள்ளும் முணுமுணுப்பு
தாலிக் கொடிகேட்டு
அவனுக்குள் ஒரு பரிதவிப்பு
எனக்கேன் இந்த ஆசையென்று
எழுத்தாளன் நிலை இதுதான்.

# மறைவிடம்

முள்ளிவாய்க்காலில்
முடிந்துபோன யுத்தத்தில்
புதைந்து போன மர்மம்
புரிந்ததுதான் எல்லோர்க்கும்
இதை மறைக்க நினைக்கும்
இன்றைய அரசின் முயற்சி
சனக்கூட்டம் நிறைந்த
கடற்கரையில்
நிர்வாணமாய்
கையிலுடையுடன்
ஓடித்திரிந்தவனை தடுத்து
ஒருவர் கேட்க
மறைவிடம் தேடுகிறேன்
உடையணிய
என்ற கதையாச்சி

# தன் வினை தன்னைச் சுடும்



கடத்தி செல்லப்பட்டு
காணாமல் போனோர்
கண்முன்னே சுட்டு
கொல்லப்பட்டோர்
காரணமின்றி
கைது செய்யப்பட்டோர்
சித்திரைவதைப்பட்டு
சிறையில் வாடுவோர்
சிறைச்சாலையும் முகாம்களுமாய்
தேடியலைந்தோர்
எமக்கினி என்னாகுமோவென்று
ஏங்கித் தவித்தோர்
குடும்பங்கள் சிந்திய
கண்ணீர் வெள்ளத்தில்
நீந்தி விளையாடிய
நீசர் கூட்டம்
அந்த அவலங்கள்
அத்தனையும் அனுபவிக்கின்ற
காட்சியை காணும்போது
காலத்தால் அழியாத
பழமொழி ஒன்று
படமாய் ஒளிர்கிறது கண்முன்னே
"தன்வினை தன்னைச் சுடும்" என்று
(2015)

## பத்தினி

நாய் பூனையென்றால்
நாளாந்தம் குளிப்பாட்டுவாள்
மலசலத்தை
மனம்கோனாது அள்ளிடுவாள்
நான் வாந்தியெடுத்தால்
நான் அள்ளமாட்டேன்
நன்றாய் அள்ளிக் கழுவுங்களென்று
நாய்போல் பாய்ந்து விழுவாள்
நான் கொண்ட பத்தினி



## மது

நானொரு நாய் வளர்த்தேன்
நன்றாக வளர்ந்தது
வீட்டுக்கு யார் வந்தாலும்
வீராப்பின்றி படுத்திருக்கும்
நானொரு நாள் வாந்தி எடுத்தேன்
நன்றாக உண்டது
வீட்டுக்கு வந்தோர்க்கெல்லாம்
வேங்கையென பாய்ந்தது
எண்ணிப் பார்த்தேன்
எனக்குள் ஒரு சிரிப்பு
அன்று நான் கொஞ்சம்
அருந்தி மகிழ்ந்தது மது



# ஆராயிங்க

எமது பகுதியிலிருந்து
அரச அலுவலாய்
மலைநாடு சென்றார்
அதிகாரி ஒருவர்
ஒரு பெண்ணை
விசாரிக்க அழைத்து
பெயரை கேட்டார்
“ஆராயிங்க” என்றாள்
“ஆராய நேரமில்லை
பெயரை சொல்” என்றார்
மீண்டும் “ஆராயிங்க” என்றாள்
“பெயரை சொல்லப் போறியா
இல்லையா என்றார் கோபமாக
அவர் பெயர் “ஆராயி” என்றார்
அருகில் இருந்தவர்.

# வினை தீர்க்க வேண்டுகிறோம்

தன் வினையா? பிறர் வினையா?
முன் வினையா? பின் வினையா? என்பதில்
தடுமாறி போனேன் கொஞ்சம்
தடுமாற்றம் தெளிந்து நிற்கிறேன் இங்கு

முன்வினை என்பது முற்பிறவியின் பயனால்
முளைத்திடும் இப்பிறவியின் இன்பதுன்பம்
நடைமுறை வாழ்வில் தெரிந்து செய்வதால்
நடந்திடும் இன்ப துன்பம்

தன்வினை என்பது
தானே தெரிந்து செய்வதால்
வந்திடும் இன்ப துன்பம்
பிறவினை என்பது
பிறரால் வரும் இன்பதுன்பம்

யாரிடம் கேட்பது வினை தீர்க்க
யாதும் புரியாது விழிக்கின்றேன்

மாமாங்க பிள்ளையாரிடமா?
மாமாங்க ஈஸ்வரரிடமா?
ஆட்சி புரியும் அரசிடமா?
ஆட்டிப் படைக்கும் படையிடமா?
இதிலும் தடுமாற்றம்
எது எப்படி இருந்தபோதும்
மாமாங்க பிள்ளையாரிடமே
மனமுருகி வினை தீர்க்க வேண்டுகிறோம்
கடையினிலே வாங்கும் பண்டமல்ல – வினை
நடையினிலே தேடிக் கொள்வது
இடைநடுவில் விலகிக் கொள்ளாது
குடை நிழல் போல் தொடரும் எமை
தொடராது விநாயகனே வினை தீர்க்க வேண்டுகிறாம்

கலை கலாச்சார பண்பாடு மறந்து
காமத்தீயிலுழன்று
பெற்ற மகளுக்கும் பிற உறவுக்கும்
பேதம் தெரியாமல்
பாலியல் உறவை வன்மமாக்குவோரினதும்
பச்சிளம் பாலகர்களை இச்சைக்கு ஆளாக்கும்
கேடு கெட்ட சிறுமதியார்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

அரசின் சட்டதிட்டங்களை
அமுலாக்கும் அதிகாரிகளினதும்
அலட்சிய போக்கால்
அல்லலுறும் மக்களினதும்
ஊரெல்லாம் பஞ்சம்
எதற்கெடுத்தாலும் லஞ்சம்
இதை உருவாக்கி விட்டவர்களினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

ஆன்மீகத் தொண்டென்று
அடையாளப்படுத்தி தங்களை
ஆலயத் தலைவர் தேர்வுக்கு
ஆயிரக்கணக்கில் செலவு செய்து
மக்கள் மதி மயக்கி முட்டாளாக்கி
மகுடம் தரித்து நிதி சுருட்டும்
மதிகெட்டோர் வினை தீர்க்க வேண்டுகிறோம்

சீதனக் கொடுமையினால்
சிறையிருக்கும் பெண்களினதும்
ஆதன ஆசையினால் ஓரடி நிலத்துக்கு
உயர் நீதிமன்றம் வரை
ஏறியிறங்கும் உறவுகளான
உதிரி மனமுடையோரின்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

உணவு வகைகளிலும்
உயிர் காக்கும் மருந்து வகைகளிலும்
மற்று மற்று பொருட்களிலும்
மனித நேயமற்று கலப்படம் செய்து
இயமனுக்கு உதவுகின்றவர்களினதும்
இதனால் உடல் நலம் குறைந்த
உயிரினங்களினதும் வினை தீர்க்க வேண்டுகிறோம்

பத்து மாதம் சுமந்து
பாராட்டி சீராட்டி
வளர்த்து ஆளாக்கி விட்டோரை
வயோதிப இல்லங்களிலும், தெருவிலும்
இரந்துண்ண விட்டு விட்டு
இராஜபோக வாழ்வு வாழ்கின்றவர்களினதும்
இரந்து நொந்து வாழ்கின்றவர்களினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

அரச செல்வம் நிறைந்திருந்தும்
அகத்தில் அமைதி வேண்டி
அதிகாரம் அத்தனையும் துறந்து
அரச மரத்தடியில் அமர்ந்து
அன்பினை ஆழமாய் விரித்துரைத்த
அன்பின் சொருபமான புத்த பெருமானின்
அடியொற்றி வாழ்வோம்
அறவழி காட்டுவோமென
உருவானவர்களெல்லாம்
உருமாறாமல் உளம்மாறி
தடுமாறி ஆடுகின்ற ஆட்டத்தால்
தத்தளிக்கின்ற மனித குலத்தினதும்
தடுமாறிவர்களினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

உடலுழைப்பு குறைவடைய
உல்லாச வாழ்வு மேலோங்க

விஞ்ஞான உலகில் விளை
விந்தை மிகு இயந்திரங்கள்
மிகையாகி போக அவற்றின்
புகையாலும் விபத்தாலும்
ஆபத்துக்குள்ளாகும் அனைவரினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

சாதி இன மத போர் தூண்டி
சமூகம் பிரிய பகை மூட்டி
மெய்மறக்கும் போதைதனை காட்டி
மெய்யற்ற வாழ்வில் வேதனைகளை கூட்டி
சுக போக வாழ்வுக்காய் பதவிகளுக்காய்
சூது வாது சூழ்ச்சியென பாதகம் செய்யும்
நீதியற்ற நீசர்களினதும்
வருந்தி வருந்தி உழைத்தாலும்
வறுமை கோட்டை தாண்டாது
வாடி வதங்குவோரினதும்
இருந்த இடத்தில் இருந்து வட்டி குட்டியென
இல்லாத கணக்கு காட்டி
இழுத்துப் பறித்து
இரும்புப் பெட்டியில் பூட்டி
பசியாலே பட்டினிகிடந்து மடிவோரை
பார்த்து ரசிப்போரினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

சுனாமி வந்தது
சுகம் தரவென நிறுவனங்களும் வந்தது
முடிந்தது யுத்தம்
முளைத்தன புதுப்புது வங்கிகளும்
வறுமை ஒழிக்க வாழ்வு சிறக்க
வாகனம் வாங்க வீடுகட்ட
துரத்தி துரத்தி கொடுத்தன கடனும்
துருவி ஆராயாமல் வாங்கினர் மக்களும்
வாரம் மாதம் தவறாமல்

வாசலில் ஈட்டிக்காறன் போல் வந்து நிற்க
கட்டமுடியாமல் கதறி அழுவோரும்
காத தூரம் ஓடி ஒழிவோரும்
விதி இதுதானென்று மரத்திலும்
வீட்டு விட்டத்தில் தொங்குவோரும்
குடும்பத்தில் குத்து வெட்டுகள்
கூடி கும்மாளம் அடிக்க
ஆழம் அறியாமல் காலைவிட்டு
அல்லல் உறுவோரினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

செல்லடியால் சிதறுண்டு குண்டடியால் குற்றுயராகி
சொல்லடியால் சோகமாகி துடிப்போரினதும்
கோட கோபுரத்திலும் மாட மாளிகைகைகளிலும்
குதுகலமாய் வாழ்ந்தின்று
தாய் தந்தை அக்கா அண்ணன்
தம்பி தங்கை மாமன் மச்சான் உறவுகளின்றி
அனாதைகளாய் ஆதரவின்றி
குந்துதற்கு குடிசையின்றி
நின்றிருக்க ஓரடி நிலமுமின்றி
கொத்தடிமைகளாய் வாழ்வோரினதும்
கோர நிகழ்வின் பங்காளிகளினதும்
வினை தீர்க்க வேண்டுகிறோம்

பற்பல கொடுமையெலாம் நிகழ்கின்ற போதும்
பற்பல சொற்கள் சொரிந்துமென்ன
நிற்கவா போகிறது நின்றுவிட்டால்
அற்புதந்தான் பிறந்த நாட்டில்
பொற்புற நாமெல்லா பூரித்து வாழ்ந்திடலாமே
என்றெண்ணும் என் வினை தீர்க்க வேண்டுகிறோம்

(2014ம் ஆண்டு மாமாங்கேஸ்வரர் ஆலயமுன்றலில் கவிஞர்.
செ.குணரெத்தினம் தலைமையில் நடைபெற்ற
கவியரங்கில் பாடப்பட்டது)

# சொல்லவும் கூடுதில்லை

அருந்தமிழில் மட்டுமின்றி சிங்களத்திலும்
ஆங்கிலத்திலும் தேர்ச்சி கொண்டோன்
கற்றவர்க்கும் கணக்கு விட்டிடும்
கணிதத்திலும் கரை கண்டோன்
அறிவுலகை படைக்கின்ற அமரசிற்பி
அறிவுப் பயிர் வளர்க்கும் அறிவுசால் உழவன்
அறிவுப் பசிக்கு உணவு படைக்கும் அமுத சுரபி
அறிவுப்பேளையின் திறவுகோல்
தன்னை எரித்து ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தி
தன்னை தேய்த்து மணம் கொடுக்கும் சந்தனக்கட்டை
கல்வியென்றால் கற்பிக்கும் முறைவேண்டும்
கவியென்றால் கற்பனை திறன் வேண்டும்
மொழியென்றால் தமிழ் வேண்டும்
மனிதன் என்றால் அன்பு வேண்டும்
ஒழுங்கு வேண்டும் சமூகமென்றால்
ஒழுக்கம் வேண்டும் வாழ்க்கையென்றால்

பக்திவேண்டும் தரிசனமென்றால்
பண்புவேண்டும் பழகுதலென்றால்
உரையாடலென்றால்
உயர் கருத்தோடு இனிமை வேண்டும்
அறிவை பெருக்கி அறியாமையை கழித்து
அறக்கருத்தை கூட்டி மகிழ்ச்சியை பிரித்து
ஆசிரியப் பணியாற்றிய பண்டிதர் நல்லரெத்தினம்
அவர்கள் இத்தனையும் தன்னகத்தே கொண்டார்
இன்னுமுண்டு நேரம் இன்மையால்
சொல்லவும் கூடுதில்லை

இன்று தீபாவளி
எமதுறவை உடமையை மகிழ்ச்சியை மானத்தை
அழித்த அழிக்கின்ற அரக்கர்கள்
அழிந்த பின்பு தீபாவளியை கொண்டாடுவோம்
நெருப்பு மழை பெய்யும்
நெருப்பாறு ஓடும் பூமி வெடிக்கும்
அழியும் உலகமென்றனர் ஆன்றோர்
அது பொய்யென நினைத்தோம் அன்று
அது இப்போ மெய்யாகிறது
துப்பாக்கி ஆட்டிலெறி பல்குழல் பீரங்கி
தூரத்தில் வெடிக்கிறது பூமி அதிர்கிறது
விமானங்களின் குண்டுகளால்
விண்ணிருந்து நெருப்பு மழை பொழிகிறது
ஈழத்தில் ஒருபகுதி எரிகிறது
எங்கள் இதயமும் எரிகிறது
அழிவதென்னவோ மனிதன்தான்
உரிமை கேட்டவன் உயிரை இழக்கிறான்
உத்தம பெண்கள் கற்பை இழக்கின்றனர்
தாய் தந்தையரை மக்கள் இழக்கின்றனர்
தாய் தந்தையர் மக்களை இழக்கின்றனர்
ஐக்கிய நாடுகள் சபையோடு
அகில நாடுகளும் வந்து போயின
சர்வகட்சி மாநாடுகளும் நடந்தேறின

சமாதானம் மட்டும் வரவில்லை
எலிக்கும் தனக்கென ஒரு வளையுண்டு
எதிரியாய் பார்ப்பது ஏனோ தெரியவில்லை
குண்டுச் சத்தம் குலை நடுங்கவைக்க
கிலி பிடித்து சாகுது மனிதயினம்
கோழி கூவலுக்கு பதிலாய் எழும்
கூக்குரல் சத்தம் ஒழிய வேண்டும்
மனித ரத்தங்களை தெளித்து
மனிதத் தலைகளை புள்ளிவைத்து
போடுகின்ற பிணக்கோலங்கள்
போகவேண்டும் இல்லாதென்று
சொல்ல நினைக்கின்றேன் ஆனால்
சொல்லவும் கூடுதில்லை

இருட்டினை படைத்தான் இறைவன்
இருட்டினை போக்க ஒளி கண்டான் மனிதன்
களிமண்ணை படைத்தான் இறைவன்
கண்கண்ட பொருட்களை செய்தான் மனிதன்
காடுமலை பாலையெல்லாம் படைத்தான் இறைவன்
கனிகுலுங்கும் சோலை செய்தான் மனிதன்
இறைவன் படையாத படைக்கலங்கள் படைத்தான் மனிதன்
இதனாலே மனிதனையும் மண்வளத்தையும் அழிக்கின்ற
செயல்தன்னை சொல்லவும் கூடுதில்லை

அரக்க குணமாம் ஆணவத்தை துரத்தி
அன்பினை அரவணைத்து
இரக்கமற்ற மனித மிருக குணத்தை துரத்தி
இரக்கத்தை இறுகப்பற்றி
ஏளனத்துடன் ஏய்ப்பவரை துரத்தி
எளிமையை ஏற்று
ஓங்கி அடிக்கும் கைகளை துரத்தி
ஒற்றுமையை உண்டாக்கி
தீயபழக்கத்தை தீயிட்டு கொழுத்தி

தீண்டாமை இருளை நீக்கி
மூடப்பழக்க வழக்கங்களை முடக்கி
முன்னேற்றப் பாதைக்கு புறப்பட
முயற்சி செய்யென்று
முன்னின்று இன்றைய இளைஞர்களுக்கு
சொல்லவும் கூடுதில்லை

தலைவர் பட்டம் பெறுகின்ற துரோகிகள்
தடுக்கப்படவேண்டும்
சாமி வேஷம் போடும் காம வெறியர்கள்
சாகடிக்கப்படவேண்டும்
ஏமாளிப்பட்டம் பெறும் உழைக்கும் வர்க்கம்
ஏணிபோல் ஏற்றப்படவேண்டும்
என்று சொல்ல நினைக்கிறேன்
ஆனால் சொல்லவும் கூடுதில்லை

அறியும் ஆற்றலற்றவனாய்
அடுத்தவர் சொல்லுக்கு தலை சாய்த்து
நெறியற்ற செயல் புரிந்து
பொறியற்று புரளுகின்ற மனிதன்
எண்ணும் எண்ணம் நலமாக
உண்ணும் உணவும் சுவையாக
உடுத்தும் உடையும் புதிதாக
வாடிக்கிடப்போரும் வளமாக
ஓடிஉழைப்போரும் உவகை கொள்ள
கூடி மகிழ்ந்து கொண்டாடி குறைகள் மறந்திருக்க
தேடி வரும் தீபாவளியென்று சொல்லவும் கூடுதில்லை

அருவருப்பற்று பலரோடு உறவுகொண்டு
அற்ப சுகம் காணும் செயல்விட்டு
ஒருவருக்கு ஒருவரெனும் பண்பை ஏற்று
அருமையிலும் அருமையான மனிதவாழ்வினை
உருப்படியாய் நாம் வாழ்ந்தால்

ஒருவருக்கும் வராது உயிர்கொல்லி
''எயிட்ஸ்'' என்று சொல்லவும் கூடுதில்லை

நீரிருக்க தாகத்தால் தவிப்போரும்
நிதியிருக்க வறுமையில் வாடுவோரும்
உணவிருக்க பசியால் துடிப்போரும்
உழு நிலமிருக்க உழாமலிருப்போரும்
கறையான் புற்றில் பாம்பு
காக்கை கூட்டில் குயில் முட்டை
வாத்து முட்டையை அடைகாக்க கோழியென
வாழாதிருந்து கதை பல கூறிடும்
வன்நெஞ்சக்காராரின் செயல்தன்னை
வரிசையாய் சொல்லவும் கூடுதில்லை

விலைவாசி ஏற்றத்தால் வீதியெல்லாம் கூப்பாடு
வீராப்பு பேசிடும் ஆட்சியாளர்
கல்யாண சந்தையில் வரதட்சனை தகராறு
குண்டு வெடிப்பில் குவிகின்ற பிணங்கள்
சொந்தங்களை தொலைத்து சோகத்தில் வாழும் மனிதம்
சொந்த மண்ணில் அகதி வாழ்க்கை
கூடாரமும் மரத்தடியும் வாசஸ்த்தலம்
கூக்குரலும் முனகலும் நெஞ்சை பிழியும் ஓசை
தலைகுனிந்து வாழ்ந்தவரெல்லாம் காற்றிரைவுக்கும்
தலை நிமிந்து வானத்தை நோக்கும் நிலை
புனிதமான சுதந்திரம் புழுதியில் புரள்கிறது
புளித்துப்போன இவைகளை சொல்லவும் கூடுதில்லை
இன்னும் எவ்வளவோ இருக்கு நேரம்
இடம் தரவில்லை என்று சொல்லவும் கூடுதில்லை

(2008ம் ஆண்டு மண்டூர் இராமகிருஸ்ணமிஷன்
பாடசாலையில் நல்லரெத்தினம் ஆசிரியரை பாராட்டி
கௌரவித்த போது கவிஞர் பொன் - சிவானந்தன்
தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் வாசிக்கப்பட்டது)

# முதியோர்க்கு

அழுக்கு உடை உடலிலிருந்து அகல வேண்டும்
அகத்தூய்மை மிக மிளிர வேண்டும்
நாவினிலே அன்பான சொற்கள் உதிர வேண்டும்
நடையினிலே மிடுக்கான வேகம் வேண்டும்
வந்தார்கள் பணிகின்ற வண்ணம் வேண்டும்
வாழ்வளிக்கும் இன்சொற்கள் பேச வேண்டும்
சிந்தாத புன்னகையும் சிந்த வேண்டும்
சிரிப்பொலியில் கலகலப்பு இருத்தல் வேண்டும்
ஞானமுனி என்கின்ற கோலம் வேண்டும்
நாடுபவர்களுக்கு நலம்பல செய்தல் வேண்டும்
அஞ்சு பொறி அடக்கி ஆழ வேண்டும்
ஆசையெல்லாம் போக்குகின்ற திறமை வேண்டும்
ஏங்காது மனத்தினிலே சாந்தி வேண்டும்
தூங்காத தூக்கத்தில் சுகமும் வேண்டும்
சங்கடங்கள் நீக்கி வாழ வேண்டும்
சாதி சமயம் கடந்த நிலை வேண்டும்
ஏலாத செய்கை ஒதுக்க வேண்டும்
ஏமாறாது இருக்க பழக வேண்டும்
உள்ளமெலாம் கோயிலென கொள்ள வேண்டும்
ஊருக்கு நல்லதையே செய்ய வேண்டும்
மோகத்தை வெறுக்க வேண்டும்
சோகத்தை துடைத்தெறிய வேண்டும்
கண்டார்கள் மனம் கவர வேண்டும்
கவினூறு குழந்தைபோல் பழக வேண்டும்
மாதர் மையல் இல்லாதிருக்க வேண்டும்
மாதா பிதாவுக்கு மாதா பிதா
என்பதை மறவாதிருக்க வேண்டும்
மேலான வேதத்தின் பொருளை அறிதல் வேண்டும்
மேலானோரென பெயர் பெறவேண்டும்
வயது போனவர்கள் என்ற சொல் மறக்கவேண்டும்
வயது வந்தவர்கள் என்று சொல்ல வேண்டும்

(2015ம் ஆண்டு பாலமீன்மடு முதியோர் சங்க
1ம் ஆண்டு நிறைவுவிழாவின் போது வாசிக்கப்பட்டது)

# மெக்கு தொழில் அன்பு செய்தல் கண்டீர்

நல்ல பல சேவை செய்யும்
நல்ல வெளிமாணவர் கலைவட்டம்
சொற்சுவை சேர்த்து நல்ல
சுருதியுடன் பாடுதற்காய்
நாவலர் பலரை அழைத்திட்ட
நல்ல கவியரங்கில் நானுமொருத்தன்
சொல்லொடு சுவை சேர்க்க நினைக்கின்றேன்
கல்லோடு சேர்ந்த கனியமுதாகிறது

கனியுதட்டில் நகையுதிர்க்கும்
கயவர் கூட்டம்
இனியும் உலகில் இல்லாதொழிக்க
இயன்றளவு முயல்வதுவே
எனது நாட்டம் என்றுரைப்பதில்
எனக்கோர் அன்பு

அன்பை மதிக்க தெரிதல் வேண்டும்
அதன் தன்மை புரிதல் வேண்டும்
அன்பை மிதிக்கின்ற மானிடர்க்கு
அதிகார சொல்லிலோரன்பு

ஆதனத்தில் ஆசை கொண்டோர்க்கு
சீதனத்திலோரன்பு
திருடனுக்கு மாற்றான் பொருளிலும்
கருடனுக்கு பாம்பின் மீதோரன்பு

கஞ்சனுக்கு பணத்தின் மீதும்
கவிஞனுக்கு கவிதை மீதும்
கலைஞனுக்கு கலை மீதும்
கற்பவர்க்கு கல்வி மீதும்
இளைஞனுக்கு யுவதி மீதும்
இரவல பெறுபவனுக்கு இரப்பதிலும்
வீரனுக்கு போர் மீதும்
வீணர்க்கு புழுகின் மீதும்
நடிகனுக்கு நடிப்பின் மீதும்
நல்லவனுக்கு நன்மை செய்வதிலோரன்பு

ஆணவம் கொண்டவர்க்கு
அதிகாரத்திலோரன்பு
அதிகாரம் கொண்டவர்க்கு
இலஞ்சத்திலோரன்பு

நடப்பவனுக்கு "சைக்கிள்" மீதும்
"சைக்கிளில்" செல்பவனுக்கு
"மோட்டார் சைக்கிள்" மீதும்
"மோட்டார் சைக்கிளில்" செல்பவனுக்கு "கார்" மீதும்
"காரில்" செல்பவனுக்கு ஆகாயவிமானத்திலும்
செல்வதற்கோரன்பு

கூழ் குடிப்பவனுக்கு உப்பின் மீதும்
பால் குடிப்பவனுக்கு பழத்தின் மீதும்
கட்டாந்தரையில் படுப்பவனுக்கு பாய் மீதும்
பாயில் படுப்பவனுக்கு பஞ்சணை மீதும்
குப்பை மேட்டில் இருப்பவனுக்கு குடிசை மீதும்
குடிசையில் இருப்பவனுக்கு
கல்வீட்டின் மீதும்
கல்வீட்டிலிருப்பவனுக்கு
மாடிவீட்டிலுமோரன்பு

வயது வந்தவர்களுக்கு திருமணம் செய்து
பிள்ளைகள் பெற்று வளர்த்து ஆளாக்கி
அவர்களால் பேரப்பிள்ளைகள்
காண்பதிலோரன்பு

பாரதி காந்திக்கு நாட்டின்
விடுதலை மீதோரன்பு
ஆழும் கட்சிக்கு ஆழ்வதிலோரன்பு
எதிர்க்கட்சிக்கு எதிர்ப்பதிலோரன்பு
விலங்கினத்துக்கும் பறவையினத்துக்கும்
தங்கள் தங்கள் இனத்தின் மீதும்
இரைகள் மீதுமோரன்பு

நல்லதோ கெட்டதோ அன்பில்லாமல்
நடைமுறை சாத்தியம் ஏதுமேயில்லை
பாரதியின் பாட்டு
"எமக்கு தொழில் அன்புசெய்தல் கண்டீர்"
எனக்கு இக்கவியரங்கின்
மீதோரன்பு

எல்லோர்க்கும் எவ்வுயிர்க்கும்
ஏதோ ஒரு வடிவத்தில் அன்பு உண்டு
அது இயல்பானது
பாரதி சொன்ன அன்பு
எல்லோர்க்கும் நன்மை பயப்பதாக
இருக்க வேண்டுமென்பதே
என்று கூறி விடைபெறுகின்றேன்

(1982ம் ஆண்டு இராமகிருஷ்ணமிஷன் ஆண்கள்
பாடசாலையில் பாரதி நூற்றாண்டு விழாவில்
மண்டூர் கவிஞர் மு.சோமசுந்தரம்பிள்ளை
அவர்களின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில்
வாசிக்கப்பட்டது)

# புதியதோர் உலகம் படைப்போம்

இந்து சமய மன்றத்தினர் என்னிடம் வந்து
சோந்தமாய் புதியதோர் உலகம் படைத்திட வேண்டினர்
இந்து சமய தத்துவத்தின் படி படைப்பவன் இறைவன்
இந்த படைப்பு இறைவனுக்கு கீழா மேலா புரியவில்லை

எண்ணங்கள் ஓடவிட்டு எடுத்தேன் எழுதுகோலை எழுதவரவில்லை
கண்மூடி கற்பனையில் மிதந்தேன் பறந்தேன் பறந்தேன்
கண்டேன் ஓர் உலகம் கண்டவர்களுடன் கதைத்தேன்
உண்டேன் விருந்து உறவாடி மகிழ்ந்தேன் மகிழ்ந்தேன்

ஏழு மணியாகிறது எழும்புங்கள் வேலைக்கு போவதில்லையா
பாழும் ஒலியொன்று காதில் நுளைய பதறி விழிக்கின்றேன்
நாளும் இதே புழைப்புத்தானென்று பக்கத்திலிருந்து – எனை
ஆளும் பிராட்டி புறுபுறுப்பதை காண்கிறேன்

நான் கண்ட உலகத்தவர்கள் புன்னகை மன்னர்களாய்
ஏன் என்ற கேள்வி கேட்காதவர்களாய் எதற்கெடுத்தாலும்
நான் என்ற அகந்தை அற்றவர்களாய் நல் உள்ளத்தவராய்
தேன் ஒழுக பேசிடும் இயற்கை திறனுடையவர்களாய்

மொத்தத்தில் பொய், களவு, சூது, வாது, வஞ்சனை
சித்தத்தே சிறிதும் தொத்திக் கொள்ள இடமளியாதவராய்
சித்தமெல்லாம் இறை நாமம் நிறைந்தே வாழுகின்ற – அந்த
உத்தமர்கள் வாழுகின்ற உலகினைத்தான் நான் கண்டேன்

அப்படி ஓர் உலகம் படைத்திட நினைக்கின்றேன்
எப்படி என்று தான் எனக்கின்னும் புரியவில்லை
இப்படி செய்தால் எப்படியிருக்கும் என்றது எனதுள்ளம்
இப்படி எப்படி என்கிறீர்களா இப்படித்தான்

இறைவன் படைத்தான் இவ்வுலகினை என்பதில்
குறை காண முயலவில்லை இறைவன் படைத்தது போல்
நிறைவாயில்லை அதையும் குறையென்று கூறவில்லை
இறையின்றி எதுமேயில்லை என்பதிலும் ஐயமில்லை

பாரிய நிகழ்வெல்லாம் பரம்பொருளின் சக்தியென்றான்
சூரியனின் துண்டொன்று தான் இவ்வுலகமென்றார்கள்
கூரிய ஆயுதங்கள் கொண்டு மீண்டுமொரு துண்டை
சூரியனிலிருந்து பெயர்த்து படைத்திட துடிக்கின்றேன்

ஆண்டவன் சக்தி எனக்கில்லை அவனருளுண்டு
ஆண்டவனருள் கொண்டே ஆன்மீக வழி நின்று
மாண்டிடும் வதை பட்டுழலும் உயிர்களை காப்பாற்றி
மீண்டும் இவ்வுலகை புதியதோர் உலகாய் படைத்திடவே

ஆண்மீகம் ஆண்மீகமென்று ஆலாய் பறக்கிறார்கள்
ஆண்மீகமென்பது அரை மணிநேர தியானம் என்கிறார்கள்
ஆண்மீகமென்பது ஜீவராசிகளை சமமாய் நேசித்தல் என்று கூறி
ஆண்மீகத்தை கடைப்பிடித்து புதியதோர் உலகம் படைப்போம்

காலத்தை கடத்தாமல் சாவினை நோக்காமல் சதாகாலமும்
ஓலத்தை செய்யாமல் ஒய்யாரமாய் இருந்திடாமல் - கொண்ட
கோலத்தை மறந்திடாமல் கொள்கை வழி நின்று – புதியதோர்
உலகத்தை படைத்திட புறப்படுவோமா? புறப்படுங்கள்

மூவாசையில் உழன்று உ்ண்மை நிலை மறந்து
நாவாலே நல்லோரை கொல்லும் நிலை துறந்து
பூவாலே பூசைக்குரியோனை தினம் பூசித்து
சாவாலே நற்பெயர் ஈட்டியோராய் நல்லுலகம் படைப்போம்

போகத்தை ஒதுக்கி மோகத்தை அடக்கி புத்தியிலே தெளித்து
சோகத்தை அகற்றி எமையாளும் இறைவனையே நினைந்து
யோகத்தால் ஞான ஒளிபெற்று – சிற்றின்ப
தாகத்தை தணித்தே புதியதோர் உலகம் படைப்போம்

உற்ற பொருள் எம்பரம்பொருளேயென்று உலக
பற்றுக்கள் துறந்து அவன் தாழ் பணிந்து
கற்றவர் மற்றவர் ஏழை பணக்காரரெனும் பேதம் துறந்து
சுற்றமுடன் சேர்ந்தே புதியதோர் உலகம் படைப்போம்

ஈனமுறு செயலனைத்தும் எட்டவிரட்டி
ஆன பிழைகள் அத்தனையும் தூசியென தட்டி
ஞானமுடை ஈசன் அருள் எல்லோர்க்குமுண்டென்றே
மோன நிலையிருந்தே புதியதோர் உலகம் படைப்போம்

மங்கும் உடலை வைத்து மமதை கொள்ளாது
தங்காத உயிர் தாவிப் பாயுமுன்னே எம்மவர்க்கு
மங்காத சேவைதனை மனதார செய்தே – எம்
பொங்கு தமிழ் சைவநெறியோடு புதுலகம் படைப்போம்

திண்ணமிலா வாழ்வுதனை திண்ணமென்றெண்ணி
வண்ணமுறவே வாழுகின்ற வாழ்வுதனை ஒதுக்கி
நண்ணுவோர்க்கு நண்ணுகின்ற நம் பரம்பொருளை
நண்ணியே நல்லதோர் உலகம் படைப்போம்

ஏனங்கள் ஏந்தாது எல்லோரும் சமனென்றே
தானங்கள் தருமங்கள் தாராளமாய் செய்தே
ஊனங்கள் உள்நோய்கள் உடல் தளர்வில்லாத
ஆனந்தம் பொங்கும் புதியதோர் உலகம் படைப்போம்

எள்ளற்குரிய மாயையினை எள்ளி நகையாடி
கொள்ளற்கரிய மெய் ஞானத்தை உள்ளத்தே நாட்டி
வள்ளல் வாய்மையாளரெனும் வேஷதாரிகளை ஓட்டி
வெள்ளை உள்ளத்தோர் நிறைந்த புதிய உலகம் படைப்போம்

(2006ம் ஆண்டு பாலமீன்மடு வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய முன்றலில் கவிஞர் செ.குணரெத்தினம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் வாசித்த கவிதை)

# நாளை விடியுமா நமக்கு

இரக்கின்ற நிலை இறக்க இருப்பவர்கள் மனம் திறக்க
சுரக்கின்ற அன்பு சுரக்க சுற்றத்தோடு நாம் திளைக்க
தருகின்ற மழைக்கரங்கள் தந்திங்கு ஓங்கி நிற்க
வருகின்ற நாளை விடியுமா நமக்கு

புதுப் புது எண்ணம் புனலூற்றாய் நெஞ்சில் பெருக்கெடுக்க
ஏதற்கெடுத்தாலும் எழும் சண்டை சச்சரவு ஒழிந்து போக
மதுக்கிண்ணம் கைலேந்தும் மானிடம் திருந்திட
சதிக்கும்பல் ஒழிந்து போக நாளை விடியுமா நமக்கு

ஊரை ஏமாற்றிடும் உலுத்தர்கள் ஒழிந்து போக
கூரையும் குடிசையும் கோபுரங்களாகிட
நேர்மையும் நீதியும் நிலைத்திங்கு நித்தியமாக
பூரித்து மக்கள் வாழ்ந்திட நாளை விடியுமா நமக்கு

செல்லும் வழியெலாம் கல்லு கட்டை மண்மூடை
செல்லுதற்குரிய மார்க்கம் புரியாது விழி பிதுங்கி
மெல்லவே சென்று வேண்டாத கேள்விக்கு பதில் - புகன்று
செல்லாது செல்ல நாளை விடியுமா நமக்கு

நட்ட நடு நிசி சுற்றி வளைப்பு நம்மவர் காணாமல் போதல்
கட்புலனாகா சிறைவாசம் கட்புலனாகும் சித்திரவதை
திட்டமிட்ட பாலியல் கொடுமையில் பட்டுழலும் வேதனை
கெட்டொழிந்து நாளை விடியுமா நமக்கு

சமமாய் பங்கிட்டு சமமாய் தானம் செய்து
சமமாய் வாழ்ந்திட சம்பந்தமுடையோர்
எமனுக்கு வேலை குறைத்து எங்களையும் சீர்தூக்கி
சமதரைக்குவருவார்களா? சமாதானமாய் விடியுமா நாளை நமக்கு

நள்ளிரவு படம் பார்த்து காலாற வீதி வழி நடந்து
கள்ள மாங்காயினை காணுமிடமெல்லாம் ருசிபார்த்து
புள்புள்ளென்று விடியுமுன்னே போர்வைக்குள் புகுந்து
கள்ளமில்லா பெற்றோரை ஏமாற்றி நம்பவைத்து

காட்டிய கூத்துக்கள் கடைசி தலைமுறைக்கு
ஈட்டிய கற்பனைக் கதைகளாயன்றி
நாட்டிலே நடந்தவையாய் இருந்ததென
காட்டிடவே விடியுமா நாளை நமக்கு

இளகிய மனத்தவராய் இதமான உணவுண்டு
அழகிய பஞ்சணையில் உறங்கிய எம்மவர்க்கு
உழன்று உழன்று கட்டாந்தரையில் உறங்கிடும்
விழலான நிலை மாறிட விடியுமா நாளை நமக்கு

பட்டதெல்லாம் துப்பாக்கிரவை தொட்டதெல்லாம் வெடிகுண்டு
விட்டது யாரென்ற வினாவுக்கு விடைகாணாது
சட்டங்கள் பேசி களைத்து தோற்ற வாழ்க்கை
விட்டங்கள் நோக்கி விசனமுறும் எமக்கு விடியுமா நாளை நமக்கு

இரவிரவாய் கண்விழித்து கைப்பட்டை கழண்டுவிழ வலை வீசி
பிரட்டி பிரட்டி பிய்த்தெடுத்த மீன்குஞ்சோடு சந்தை செல்ல
மிரட்டி மிரட்டி குந்த வைக்கும் சுற்றி வளைப்பெனும்
தரம் கெட்ட நிலைமாறி சந்தோசமாய் வாழ

பிறிதோர் இடம் சென்று மனதுக்குகந்த தொழில் ஏற்று
பிறர்தயவின்றி பெருமையுடன் வாழ முடியாது
அறிவுடைய இளைஞரெல்லாம் அச்சம் கொண்டு
தறிகெட்டோடிடும் நிலை மாறி நாளை விடியுமா நமக்கு

மக்களாட்சியுகந்தனிலே மண்டியுள்ள யுத்தத்தால்
சுக்கு நூறாய் சிதைந்து தூர இடமெல்லாம்
பக்குவமாய் வாழ முடியாது பண்பாடு மறந்து
மிக்கவேதனையுற்ற நமக்கு விடியுமா நாளை

பந்தமுடன் சிந்து பாடி சிரித்து மகிழ்ந்து சிறப்பாய் வாழ்ந்திட
வந்தது யுத்தம் அழிந்தன உயிர்கள் சிதைந்தது குடும்பம்
அந்தோ பரிதாபம் சொந்த மண்ணில் அகதிகளாய்
நொந்து வாழும் எம்மவர்க்கு விடியுமா? நாளை

விடலைகளை கொன்று விளைநிலமெலாம்
உடலங்களை விதைத்து குருதி நீரூற்றி
சுடலையாய் மாற்றி தேடுகின்ற சமாதானம்
படலைக்கு வருமா வந்திட நாளை விடியுமா? நமக்கு

அல்லை அயலவர்களை அடிய பணிய வைத்து
தொல்லை தரு யுத்தம் ஓயுமா? சமாதானம் ஒளிருமா?
எல்லையில்லா பகை தணியுமா தீச்சுவாலை அணையுமா?
பல்லை கடித்து பொறுத்திருக்கும் நமக்கு நாளை விடியுமா?

யுத்தப்புயல் வீசி சின்னாபின்னப்பட்டு சிதறும்
இத்தரையில் புயல் ஓயுமா நாளை விடியுமா?
சத்தியமாய் சொல்கிறேன் இனவாத வெள்ளை இருட்டு
இத்தரையில் இருக்கும் வரை விடிவென்பதே நமக்கு இல்லை

(27.06.2001ந் திகதி திராய்மடு வீரபத்தினியம்மன் ஆலய முன்றலில் கவிஞர் செ.குணரெத்தினம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கு கவிதை)

# கவிதை பொங்கல்

"கவிதை பொங்கல்" தலைப்பு தந்து
கவி பாட அழைத்திட்ட
இலங்கை ரூபவாஹினி தமிழ்ப் பிரிவினர்க்கும்
இங்கு என்னோடு கவி பாட வந்த கவிஞர்களுக்கும்
பொங்கலுண்டு பொழுதுபோக்காய்
பொறுமையுடன் தொலைக்காட்சி முன்னே
அமர்ந்தவர்களுக்கும் கேட்பவர்களுக்கும்
அடியேனின் அன்பின் பணிவுகள்

அடுப்புக்கல்லாய் முக்கவிஞர் நாம்
அதிலே தலைவரை புதுப்பானையாய்
செந்தமிழ்ச்சொல்லை புத்தரிசியாய்
சேர்த்துத் தரும் சேதியை பாலாய்
கவிதை பொங்கல் பொங்கிட வந்துற்றோம்
கவனமாக பொங்குகிறோம்
தாருங்கள் கண்களையும் காதுகளையும்
தலை வாழை இலையாய்
படைக்கின்றோம் பகிர்ந்துண்போம்
பக்குவமாய் சிதறாமல் சிந்தாமல்

காடுகளிலும் குகைகளிலும் காட்டு மிராண்டிகளாய்
காய் கனிகளையும் கிழங்குவகைகளையும் உண்டுவந்த
காலம் முதல் இன்றைய நாகரீக
காலம் வரை கைவிடப்படாது
ஏந்தி வந்ததுதான்
இந்த தைப் பொங்கல் விழா

ஆண்டுக்கொரு முறைவரும் ஆனந்த விழா
அகமும் புறமும் மலரும் அன்பு விழா
காலமெலாம் உழைத்து
கண்ட பலனை கொண்டாடும் வெற்றி விழா
உழைப்புக்கேற்ற ஊதியத்தை பார்த்து

உளம் பூரிக்கும் புனித விழா
கள்ளமற்ற உள்ளங்கள்
களிப்புறு களியாட்ட விழா
முடிந்திடும் வருடத்துக்கு இறப்பு விழா
முகவுரையாய் தொடங்குதலால் பிறப்பு விழா
உதிரத்தை வியர்வையாக்கி நெல்மணி
உதிர்த்திட்ட பரவச விழா

ஏமாற்ற நினையாது வஞ்சகம் புரியாது
ஏய்த்து பிழைக்காது கொடுமை செய்யாது
சூதுவாதறியாது சூழ்ச்சி செய்யாது
சூட்சுமங்கள் ஏதுமின்றி
நியாயமான காரணங்களை களமாக்கி
நீதியும் நேர்மையும் வாளெனக் கொண்டு
உண்மையும் நேர்மையும் கேடயமாக்கி
அன்பையும் அறனையும் படையெனக் கொண்டு
உலகமக்கள் பசிப்பிணியோட்டிட யுத்தம் செய்கின்ற
உழவர் குலமக்களின் உன்னத விழா
உலக மக்களுக்காக உணவளிப்போர் திருவிழா
இனத்துக்கோ மதத்துக்கோ சொந்தமற்ற விழா
உயிரையும் பயிரையும் காக்கும் சூரிய விழா
உண்மையில் சாதி சமயம் கடந்த தேசிய விழா
மறுக்க முடியா உண்மையிது
மண்ணில் உழைக்கும் எண்ணற்றோரில்
உணவை உழைக்கும் உழவர் குலமக்கள்
உண்டுமகிழ ஒரு நாள் பால்சோறு
ஓடியொழியாமல் வருடம் தவறாமல்
உயிர்ப்பில்லாமல் வந்து போகுமிந்த பொங்கல்
ஏழை பணக்காரறென்ற பட்டம் போக்கி
எல்லோரும் சம பங்காளராய்
மங்கள உழைப்பின் மகத்துவமுணர்த்தி
மக்கள் நாமென்ற உணர்வுடன்
சிந்தை மகிழும் திருநாளாய்
சிறப்பொடு சீராய் பொங்குகவே

இந்து சமுத்திரத்தின்முத்தென போற்றப்படும்
இந்நாட்டிற்கு
எல்லா வளத்தையும் இயற்கை கொடுத்தும்
எரிச்சல் பொறாமை கொண்டதினால்
பொல்லாப்பு வந்து புகுந்தெம்மை
புதைகுழிக்கு கொண்டு செல்கின்ற நிலை மாறிட
புதிதாய் பொங்குக பொங்கலே

பசுமை நிறைந்த இடமெல்லாம் கருகி
பூத்துச்சொரிந்த பூஞ்சோலை புழுதி காடாகி
காய்த்துக் குலுங்கிய சோலை வெட்டைவெளியாகி
கதிர் விளையும் காணியெல்லாம் தரிசாக மாறி
எழில் மாடங்கள் தகர்ந்து நொறுங்கி
எதுவுமின்றி தரைமட்டமாகி
நெஞ்சம் குமுறி தெருவோர
நாய்களைப் போல்
அரைச்சாண் வயிற்றுக்காய்
அஞ்சுக்கும் பத்துக்கும் அல்லலுறும்
அல்லோல கல்லோலம் மாறிட
ஆனந்தமாய் பொங்குக பொங்கலே

சுனாமியெனும் இயற்கையின் ஆவேச தாக்குதலால்
சொத்தோடு உயிரையும் பறிகொடுத்து
தேம்பி தேம்பி அழுது கொண்டிருக்கும் மக்களுக்கு
தேனாய் இனித்திட பொங்குக பொங்கலே

வாழ்கின்ற வஞ்சகர்கள் வளர்கின்ற சோம்பேறிகள்
தாழ்கின்ற நீதிகள் தலைதூக்கும் அக்கிரமங்கள்
இன்பம் பொங்கும் இந்நாளில் இலட்சிய உறுதி பூண்டு
துன்பதுயரங்கள் துடைத்தெறிந்து இன்பத்திருநாளாய் பொங்குகவே

பஞ்சமும் பட்டினியும் பயமும் புயலுருவெடுக்க
படையினர் வருகையால் சூறாவளி சருகாய் சுழல
செல்வந்த ஊரெல்லாம் செல் வந்து வீழ

செல்லும் திசை தெரியாமல் திகைத்தே
கொந்தளித்து தத்தளிக்கும் மக்கள்
கோலத்தை துடைத்து மனம் குளிர்ந்திட
கோலமதாய் பொங்குக பொங்கலே

ஒட்டிய வயிறும் உலர்ந்த உடலுமாய்
கட்டிட கந்தைக்கும் கதியற்ற உழவன்
பட்டிடும் கஷ்டம் பறந்தோட பொங்குகவே

ஏரைத்தொடாதவன் வீட்டில்
வரிசை வரிசையாய் நெல் மூடை
ஏரைத்தொட்டவன் றோட்டில்
வரிசை வரிசையாய் அரிசிக் கடையில்
கால கடுக்க நிற்பவர்கள் நினைப்பில்
கடலிலிருந்து வந்த சுனாமி மீண்டுமொரு முறை
வந்தெம்மை வாரியெடுத்து செல்லாதோவென்று
வரம் கேட்கும் நிலை மாறிட பொங்குக பொங்கலே

கற்றறிந்தோரே கவிவல்லோரே
கலைஞர் கூட்டமே மற்றோரே
ஆரம்பத்தில் ஒரு பொங்கல் பொங்கினோம்
அதனால் இறுதியிலும் ஒரு பொங்கல் பொங்குவோம்
உறவெனும் அடுப்பிலே
உள்ளமெனும் பானை ஏற்றி
அறமெனும் நல்லெண்ண அரிசியிட்டு
அன்பெனும் பாலூற்றி
முயற்சியெனும் தீ மூட்டி
முற்றம் நிறைந்த உறவுகளோடு
பகிர்ந்துண்ண பொங்குவோம் பொங்கல்
பக்குவமான "கவிப்பொங்கல்"

(15.01.2007ம் திகதி ரூபவாஹினி ஐ அலைவரிசையில் கவிஞர் செ.குணரெத்தினம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் வாசிக்கப்பட்ட கவிதை)

# மூச்சை நிறுத்து

பிறக்குமுன்னே பெரியோனென பெயரெடுத்து
பிறந்தபின் அழிக்கப்பட்டோர் பட்டியலில் அகப்படாது
வளர்ந்துமானிடம் வாழும் வழி புகட்டி
வியக்கும் வண்ணம் அற்புதங்கள் பல காட்டி
மானிடத்தின் பாவங்களை சிலுவையாய் சுமந்து
முட்கம்பிகளாலும் கசையாலும் அர்ச்சிக்கப்பட்டு
கூடஇருந்து காட்டிக்கொடுத்தோனையும் சபிக்காது
கடவுளே இவர்களை காப்பாற்று என்று கூறி
மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து
முகம் மலர வேண்டியோர்க்கு காட்சி கொடுத்து
பிறன் பொருள் இச்சியாது இருப்பாயக என்று
ஆன்மிகத்துக்கு அருமையாய் விளக்கம் கொடுத்த
அருளாளன் யேசு பிரான் தாழ்பணிந்து
மூச்சை நிறுத்து என்ற தலைப்புக்குள்
முழுதாய் புகுந்திடுவோம்

கடன் கேட்கமாட்டேன்
கனியமுதம் கேட்கமாட்டேன்
அரசியல் பேசமாட்டேன்
அரசை வையமாட்டேன்
தமிழனுக்கோர் தரை கேட்கமாட்டேன்
தமிழன் சீரழியும் கதை சொல்லமாட்டேன்
சாதி மத இனம் சாடமாட்டேன்
சாதித்தவன் ஆண்ட பரம்பரையென அலறமாட்டேன்
என்னின விடிவுக்கு நடைப்பயணம் போகமாட்டேன்
உண்ணாவிரதம் இருக்கமாட்டேன்
இப்படி எத்தனையோ இருக்கு
இத்தனையும் செய்யாதிருக்க என் மூச்சை நிறுத்து

கோழி கூவ சாமிக்கு பூசை முடிய
காவோடு காலையடி செல்ல
காளையர் கலப்பையோடு களனி செல்ல
கல்விச்சாலைக்கு கொக்கு கூட்டமென மாணவர் செல்ல
அரச உத்தியோகத்தர்கள் அவசர அவசரமாய் அலுவலகம் செல்ல
சுற்றிவளைப்பெனும் பேரில் அத்தனை பேரையும்
சற்றும் நகரவிடாது துப்பாக்கி காட்டி
குந்த வைத்து குடிசையிலிருக்கும்
குழந்தைகள் முதல் முதியோர் வரை
துன்பப்படுவோர் துயர் நீக்கு இல்லையேல் இறைவா
துன்பப்படுத்துவோர் மூச்சை நிறுத்து

இலஞ்சமெனும் மஞ்சத்திலுழலும்
இழிநிலை கொண்ட வஞ்சக பேய்கள்
காதலெனும் பேராலே
கன்னியரை ருசித்து சாதல் நிலைக்கு தள்ளுகின்ற
குரங்குப் புத்தி கொண்டோர்
வட்டிக்கு வட்டி வாங்கி
வாழ்விடத்தையும் விழுங்கி ஏப்பமிடுவோர்
உழைக்காது உழைப்போரை சுரண்டி வாழும்
உலுத்தர் கூட்டத்தோர் அனைவரையும்
இறைவா திருந்தி வாழ வழி காட்டு
இல்லையேல் இவர்கள் மூச்சை நிறுத்து

விதைப்பிலிருந்து விளைகதிர் உதிர்த்தி
வீட்டுக்கு போய் சேரும் வரை
அதற்காய் உழைத்த மாட்டுக்கோ
அடிக்கட்டை வைக்கோல் அதனுள் முளைத்தகளை
நெல்லோடு இருக்கும் பதர்
நெல்குற்றிய பின் தவிடு
இப்படி எத்தனையோ உணவு மாட்டுக்கு
இதற்கு ஆடைச் செலவோ ஆஸ்பத்திரி செலவோ
அடுத்தவர் செலவோ எதுவுமில்லை

எல்லாம் தேவைப்படும் உழவுத் தொழிலாளிக்கு
என்னதான் கிடைக்கிறது
களவட்டி கணக்கு பார்த்த போடி
கையை விரிக்க மாடாய் உழைத்த தொழிலாளி
மாட்டிலும் கேவலமாய் பட்டினி சாவில்
மாட்டி தவிக்கவிட்டோர் மூச்சை நிறுத்து

வெட்டி சுட்டு வீழ்வதென்ன ஆடா மாடா?
வேட்டையாடி மனிதனை மாய்க்கவா பிறந்தோம்
நம்மை அறியாமல் உருவான சாதிமத இனத்தாலே
நாதி கெட்டுப்போய் நடவீதியில் கிடப்பதேன்
கருவறையில் வளர்ந்து மணவறையில் கைகோர்த்து
இருட்டறையில் இணைந்து கல்லறையில் புதையும்
எமக்கு இது புரியாதா புரிந்தால்
எம்முள் போட்டி பொறாமை எதற்கு
புரிந்து புரியாதது போல் வாழும்
புல்லுருவிகள் மூச்சை நிறுத்து கடவுளே

அரச செலவில் படித்து அதிக சம்பளத்துடன்
அரசவைத்தியசாலையில் அவசர அவசரமாய் பொழுது போக்கி
தத்தமது வைத்தியசாலைகளிலும்
தனியார் வைத்தியசாலைகளிலும்
ஏழை பணக்காரரென்ற வித்தியாசமின்றி
எல்லோரிடமும் பணமே குறியாய் கொண்டு
பிற உயிர்களை துச்சமென மதித்து
பெரியோர் நாமென்று பிதற்றுகின்ற பெருச்சாளிகள்
மூச்சை நிறுத்து

அண்டவெளியிலும் தரையிலும்
ஆதிக்க போட்டியால்
விண்கலமும சுடுகலமும் செய்கின்ற
வீணான செலவுத் தொகை
ஆண்டுக்கணக்கில் மண்ணிலிருப்போர்

ஆனந்தமாய் உழையாமல் உண்டுவாழ போதுமானதாம்
இறைவா வேண்டாத வேலை செய்து
இந்த மண்ணின் மாந்தரை பட்டினிபோடும்
இப்படிப்பட்ட மானிடர் மூச்சை நிறுத்து

இனமத ஜாதி பேதம் ஒளிய வேண்டும்
இல்லாதோர் இல்லாமை வேண்டும்
இல்லார்க்கு இருப்போர் ஈயவேண்டும்
இங்கு பசி பஞ்சங்கள் பறக்கவேண்டும்
எல்லாரிடமும் கல்வியறிவு பெருகவேண்டும்
எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்கவேண்டும்
தீயவை அழிந்து நல்லவை நடக்கவேண்டும்
தீரா போட்டி பொறாமை தீரவேண்டும்
சமமாய் யாவரையும் நினைக்கவேண்டும்
சமாதானம் நிலை நிறுத்தப்படவேண்டும்
இல்லையேல் இறைவா
இதற்கெல்லாம் தடையானோர் மூச்சை நிறுத்து

(2009ம் ஆண்டு மண்டூர் மெதடிஸ்த மிசன் தேவாலய முன்றலில்
கவிஞர் செ.குணரெத்தினம் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் வாசிக்கப்பட்டது)

# திருமண வாழ்த்து கவிதைகள்

புது இன்பம் பொலிந்திட புது உலகம் படைத்திட
புது வாழ்வு புகுந்திடும் புதுமணத் தம்பதிகாள்
எது எதை எப்பெப்ப செய்ய வேண்டுமோ
அது அதை அப்பப்ப செய்தே நீடு வாழ்க.

அன்பினால் கண்டுண்டீர் அதனாலே சாந்தி கண்டு
இன்பமே பொங்க இமயம் போல் நும் வாழ்வுயர்ந்து
துன்பமே அண்டாது தூய உள்ளத்தினராய் துடிப்போடு
புன்னகையே பொங்க இன்று போல் என்றும் வாழ்க.

சங்கடங்கள் சந்தேகங்கள் அணுவேனும் அண்டாது
பங்கமில்லா பெருவாழ்வு வாழ்ந்திடவே பங்காளியாய்
சங்கமமாகின்ற சம்பிரதாய மணச்சடங்கு இன்று போல்
மங்களமாய் என்றும் வளமாக வாழ்கவே.

சொல்லாத சொல்லெல்லாம் சொல்லி நும்மை
பொல்லாத துன்பத்தில் புகுதிட்டாலும் நேர்நின்று
நல்லார்கள் போற்றுகின்ற நல்லோராய் நாளும்
நில்லாத உலகத்தில் நின்றே நீடு வாழ்க.

கூவுவோர் கூவிக் கூத்தாட குறை காணாது
பூவுலகோர் புளகிக்க புது வாழ்வு சிறந்தோங்க
நாவுக்கு அரசனாய் நல் மழலைகள் ஈன்று
மேவுகின்ற புகழாலே மேன்மையோடு நீடு வாழ்க.

வாழ்க்கையின் மாண்பு ஐந்தென்று ஔவை
வாழ்வோருக்கு நல் வழியில் நன்றாய் நவின்றிட்ட
தாழ்விலா உபதேசத்தை உள்ளத்தே இருத்தி
வாழ்விலே உயர்ந்திங்கு வாழ்க நீடு.

ஓராது ஒன்றையும் உற்றுண்ணாது அறிவிலாரோடு
சேராது சேர்ந்தாரை பிரியாது எதையும் நீவீர் - முந்தி
பாராது பார்த்தனையே பார்த்து இறையருளால்
தீராத வினை தீர்ந்தே திருப்தியுடன் வாழ்வீராக.

இறுகிய எண்ணத்தால் எடுத்தெறிந்து பேசும் நிலை துறந்து
குறுகிய எல்லைக்குள் நின்று சிறுசிறு குற்றங்கள் காணாமல்
இறுதிவரை இன்முகத்தோடு இருபேரும் ஒருங்கிணைந்து
அறுதி முடிவெடுத்து அதுபோல் செயல்பட்டு செழிப்போடு வாழ்வீராக.

ஆளும் இல்ல ஆட்சியில் அன்பெனும் செங்கோல் நிறுத்தி
நாளும் தவறா நம் இறையின் தாழ் பணிந்து
நாளும் கோளும் நமக்கே நற்பணியாற்றிடவே
வாழுங்கள் நன்றாய் என்றே வாழ்த்துகிறோம்.

ஈரிதழ் இருதயம் போல் இல்லறத்தில் நீவீர் இருபேரும்
ஒருயிராய் உலகம் போற்றி வியக்கும் வண்ணம்
சீரான வாழ்வுதனை சிறப்பாக அமைத்து சிறார்களோடு
வாராது வருகின்ற வல்வினை அகற்றி வளமோடு வாழ்வீராக.

அன்பின் பலத்தால் சாதிக்க முடியாதது என்றொன்றில்லை
அன்பின் சாதனைக்கு எல்லை என்றொன்றில்லை
அன்பின் உறுதிக்கு மேலொரு உறுதி என்றொன்றில்லை - எனவே
அன்பில் கலந்த நீவீரும் நீடு வாழ்க பிரிவு என்றொன்றில்லாது.

எப்படித்தான் வாழ்ந்தாலும் இறுதி முடிவுண்டு எனவே
இப்படித்தான் வாழவேண்டுமென நல்வழி வகுத்து
நப்பாசையால் எழுகின்ற தோல்வி கண்டு துவழாது
தப்பில்லை என்றமுடிவு கண்டு முயற்சியோடு முன்னேறி வாழ்வீராக.

ஏன் தான் பிறந்தோம் என்றில்லாமல் இந்துமதம் இயம்புகின்ற
நான்தான் எனும் மாயை மயக்கம் நன்றாய் தெளிவுற
ஊன் உறக்கம் ஒழுங்காய் கடைப்பிடித்தே ஒற்றுமையாய்
வான் உள்ளவும் அளவோடு வளமோடு நீடு வாழ்வீராக.
வஞ்சனை அழுக்காறு நெஞ்சினில் கொஞ்சமும் அண்டாது

தஞ்செமென வருவோர் நெஞ்சம் கிஞ்சித்தும் குறுகாது நேர்மையுடன்
விஞ்சுகின்ற அன்பாலே விருந்தோம்பலை விருப்புடன் செய்து
சஞ்சலங்கள் படாது சந்தோசமாய் வாழ்க நீடு.

தானம் தவமிரண்டும் தடையின்றி ஆற்றி நிற்க
வானம் ஊரும் சந்திர சூரியர் வாழ்த்தி நிற்க
கூனலற்ற வாழ்வுதனை குவலயத்தில் வாழ்ந்து நிற்க
ஆன சொல்லத்தனையும் கொண்டு அன்போடு வாழ்த்துகின்றோம்.

கணக்கின்றி கடும் உழைப்பால் செல்வம் சேர்த்து
கணக்கோடு சிக்கனமாய் கருணையோடு செலவு செய்து
கணப்பொழுதாகினும் கருத்து பிசகின்றி காலமெலாம்
மணப்பொழுதின்று போல் மானிலம் போற்ற வாழ்வீராக.

அன்பை மதிக்க விலையில்லை அதனாலே அன்பை அணியாய் கொண்டு
அன்புக்கு மயங்கார் எவருமில்லை அதனாலே அன்பு செய்து
அன்புக்கு கவலையில்லை அதனாலே அன்பை அடைந்து
அன்பை சிறைப்படுத்தி இன்ப சுதந்திரம் பெற்று வாழி.

ஒன்றுபட்டீர் உழைத்துயர்ந்திடுவீர் இவ்வுலகில்
நின்று விளங்கிடுவீர் நேர்மையாய் நாளும் செயற்படுவீர்
நன்றெனவே ஏழைப்பிணி போக்கிடுவீர் எந்நாளும்
இன்றுபோல் இனிதே இளமை பொங்க வாழ்ந்திடுவீர்.

எண்ணற்ற இன்னல் பல இயல்பாகவே வந்தாலும் ஏற்றுப்புறங்கண்டு
பண்பற்றோர் பழக்கம் விடுத்து பண்பறிந்து பாரினிலே
வண்ணக் கனவுலகில் வல்லாரும் போற்றும் வளமான வாழ்வுதனில்
கண்ணும் இமையும் போல் காலமெலாம் வாழ்க நீடு.

எண்ணத்திலூறியெழும் எண்ணங்கள் அத்தனையும்
ஒன்றும்விடாமல் ஓதி உறவாடி ஓரே முடிவெடுத்து
பண்ணும் செயலினால் பல பிரச்சனைகள் தொலைந்து போக
மண்ணுள்ளவும் அன்புத் தென்றல் நுகர்ந்தே வாழ்க நீடு.
துன்பப்புயலுக்கு தெண்டனிடாது தலை நிமிர்ந்தே தரணியில்

இன்பத் தென்றல் தீண்ட இன்புற்றே அன்பு சேர்ந்து
தன் தன் சீற்றம் தணிவித்து என்றும் தண்ணொளி பொங்க
நன்னெறியை இதயத்துள் நன்றே நுழைத்து வாழ்க நீடு.

அறத்தே பொருள் கோடி அள்ளிக் கொடுத்தாலும்
புறத்தகலா உறவுகளை புறம் தள்ளி புன்மை சேர்க்காது
குறள் கூறும் இல்லற இயலுக்கெடுத்துக் காட்டாய்
திறமைமிகு பிள்ளைகளைப் பெற்றுவளமோடு வாழ்க நீடு.

வெற்றி தோல்வி பாராது கடமையில் கண்ணாயிருந்து
மற்றவர் புகழும் வசைமொழியும் எண்ணாது இம்மண்ணில்
பெற்றிடும் பிள்ளைகளோடு உண்மை மறவாது
நற்தவத்தோடு நேர்மைதவறாது நல்வாழ்வு வாழ்வீராக.

ஒழுங்கு, ஒழுக்கம, அன்பு, பக்தி எனும் தத்துவத்தை
ஒழுங்காய் பேணி ஒழுக்க சீலராய் ஒருயிராய்
மழுங்காப் புகழோடு மாண்புறு மணத் தம்பதியினராய்
வழமோடு வாழ வாழ்த்துகிறோம் வாழ்கவென்று.

சமய சம்பிரதாய நெறிமுறை அறிவுக்கு அடிபணிந்து
அமைகின்ற வாழ்வதனை சுமையென்று கருதாது
இமையும் கண்ணும்போல் இல்லற சுமைதாங்கி
இமயம் போலுயர்ந்து இன்புற்று இனிதே வாழ்வீராக.

ஆரிதாய் கிடைக்கின்ற இந்த அன்பான வாழ்வுதனில்
நரிக்குணமுடைய அற்பர்கள் உறவு அறவே அகற்றி
தரிக்கின்ற உறவினர் வரிக்கின்ற நல்லாசிகள் பெற்று
புரிகின்ற இல்லறத்தால் புலமைமிகு மக்களோடு வாழ்வீராக.

கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையல்ல – நீவீர்
செல்லும் வாழ்க்கைப் பாதை கருத்தொருமித்தால் பஞ்சு மெத்தையது
சொல்லும் சொல்லில் துயர் நீங்கும் சொல் கண்டுரைத்து
வெல்லும் வகையறிந்து வெற்றிநடை போட்டு வாழ்வீராக.
தன்னகம் தனித்தனி கவர்ந்த காதலர் நீவீர்

என்னகம் உன்னகம் என்றிடும் வேற்றுமையின்றி
விண்ணகம் உள்ளோரின் வேண்டும் வரத்தினை பெற்றே
மண்ணகம் வியந்து வாழ்வினை வாழ்ந்திடுவீராக.

நகமோடு சதையாய் பாலொடு சுவையாய்
அகம் உவந்து என்றும் முகம் மலர்ந்து
இகம் தனில் வள்ளுவன் இல்லற இயலுக்கு இசைந்தே
இகமே போற்ற இனிதே வாழ்கவென வாழ்த்துகிறோம்.

காலத்தின் கொடுமை கண்டு கலங்கிடாது
ஞாலத்தில் நலம் பெற்று வாழ்ந்திடவே
சாலச் சிறந்த தம்பதி உங்களுக்கு வாழ்த்துச் சரத்தினை
கோலமதாய் கோர்த்தளிக்கின்றோம் நாம்.

குறைகள் அகற்றி நிறை பல கொண்டு
சிறுமை அகற்றி பொறுமை பூண்டு
வறுமை அகற்றி அறம் பல காத்து
சிறப்பினில் சிகரமாய் சிறந்தே வாழ்வீராக.

ஒட்டிப்பிறந்த சந்தேகப் பேய்தனை ஓட்டி – உறவினை
கட்டியணைத்தே ஒட்டி உறவாடி – வள்ளுவன்
சுட்டி எமக்கு ஊட்டிய இல்லறவியலுக்கு எடுத்துக் காட்டாய்
பட்டி தொட்டியெங்கும் புகழ் பரவ வாழ்வீராக.

வல்லார்க்கு வல்லவராய் வாழும் காலம் தன்னில்
எல்லார்க்கும் நல்லவராய் என்றென்றும் இனியவராய்
கல்லானாலும் கணவன் புல்லானாலும் மனைவி என்ற
நல்லார் சொல்லிற்கிணங்க நானிலம் போற்ற வாழ்வீராக.

பிறர் அடைகின்ற மகிழ்வு கண்டு மகிழ்வு கொண்டு
பிறர் அடைகின்ற துன்பம் கண்டு துன்பம் கொண்டு
உறவுகளோடு ஊடல் கண்டு கூடல் கொண்டு
சிறப்பான வாழ்வுதாரணத்தை சிரமேற் கொண்டு வாழ்க நீடு.

துயரங்கள் நீக்கி தனிமனித வாழ்வுதனை தூர ஒதுக்கி
அயராது நின்று அச்சம் போக்கி ஆர்வத்தோடு போராடி
உயரும் வாழ்விலுள்ள உண்மை சுகம் நுகர்ந்து
வையம் காணா வளமான வாழ்வு வாழ்வீராக.

கருத்தில் உருவாகும் கருத்தை கடுகளவேனும் மறைக்காது
ஒருவர்க்கு ஒருவர் விட்டுக் கொடுத்து கருத்து முரணின்றி
பெருகுகின்ற அன்பாலே பெருமகிழ்வு பெற்று வாழ்ந்திட
தருகின்றோம் வாழ்த்தொன்று தகுதி பலபெற்று வாழ்வீராக.

அச்சம் ஐயம் நீக்கி ஆக்கும் அறிவுசக்தி ஓங்க
இசஞ்ச கூறி ஏமாற்றும் செயலுடையர் சினேகம் நீக்கி
உச்சப்பயன்பெறும் உயர்சிந்தனைகள் உள்ளத்தே தேக்கி
துச்சமென தொடர் துயர் போக்கி துணிவோடு வாழ்வீராக.

மட்டக்களப்பு மண்டூர் எனும் அழகிய கிராமத்தில் மயில்வாகனம்-சின்னத்தங்கம் தம்பதியர்க்கு இளையமகனாக 1952-11-26ம் திகதி பிறந்து, பாலமீன்மடு கிராமத்தில் திருமணம் செய்து நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாகி, மனைவி சகாயமலருடன் இனிதே வாழ்ந்துவரும் இவர் தனது ஆரம்பக்கல்வியை மண்டூரில் பெற்றுக்கொண்டார்.

அதன் பின் பட்டிருப்பிலும், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியிலும் இணைந்து தனது அறிவாற்றலை வளர்த்துக் கொண்டார்.

இவர் பலநோக்கு கூட்டுறவு சங்கம், இலங்கை போக்குவரத்துச்சபை, கச்சேரி, பொலிஸ், வாகன போக்குவரத்து, கமநலசேவை ஆகிய திணைக்களங்களிலும் எழுதுனராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.


இவரது எழுத்தார்வம் இவர் பிறந்த மண்டூரிலேயே ஆரம்பமானது.

1980களில் மண்டூரில், வெளிமாணவர் கலைவட்டம், எனும் அமைப்பை உருவாக்கி, புதுவெள்ளம். எனும் கையெழுத்து சஞ்சிகையை வெளியிட்டு, அதன் ஆசிரியராகவும் இருந்த பெருமைக்குரியவர். மண்டூர்க் கீரை அடிமண்ணும் கவிபாடும், என்று கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பாடியது போல இளமைப் பருவத்திலிருந்தே இராஜதுரைக்கு கவியாற்றல் கைவரப் பெற்றிருந்தது.

வானொலி, மேடைநாடகங்களை இயக்கி நடித்துள்ள இவர் வானொலி, தொலைக்காட்சியிலும் கவியரங்குகளிலும் பங்குபற்றி அவர் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று எழுதும் 'மண்டூரான்' கவியரங்குகளில் கவிதை படிக்கும் போது 'கணீர்' என்ற குரலில் மிகநேர்த்தியாக வாசிப்பதில் வல்லவர்.

கவிஞர் இராஜதுரையின் கவிதைப் புலமையோடு இவரது துணைவியார், பிள்ளைகள் வாழ்வும் வளம் பெறவேண்டுமென நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**கவிஞர் செ.குணரெத்தினம்**



ISBN 978-955-43252-0-3

9 789554 325203